கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 5 Volume - 14, Issue - 5	சித்திரைத் திங்கள் April 2023	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

அமரர் **புதுவிளாகம் S. திருநாவுக்கரசு பிள்ளை**
மேனாள் செயலாளர், சென்னை கார்காத்தார் சங்கம்

"Delivered by India Post"

www.indiapost.gov.in

SAPPIDA VANGA CATERERS

PURE VEGETARIAN

சாப்பிட வாங்க

சுத்த சைவம்

திருமணம், வரவேற்பு, வீட்டு வைபவங்கள்
மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும்
கூப்பிடுங்க சாப்பிட வாங்க

இப்பொழுது இன்னும் புது பொலிவுடன்

Contact: 9176657165, 9176657136,
9884302456, 6385732827, 9176657108,
hotelvassi123@gmail.com

Traditional Identity NOW AT T. Nagar
மாயவரம்
ARC
KAMAATCHI
JEWELS
ARC SINCE 1884
என்றும் உங்கள் வாழ்வில் ஒரு அங்கமாக... மின்னும் தங்கமாக...
1884 முதல்... தொடரும் தரம் நம்பிக்கை நாணயம் கைராசி
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
6 மாதத்தில் முதிர்வு அடையும் வரன்மகள் காமாட்சி தங்கநகை சேமிப்புத் திட்டம்
தங்க ரதம் வெள்ளி ரதம் வாகனம் கவசம் கலசம் மற்றும் அனைத்து கோயில் வேலைகள் சிறந்த முறையில் செய்ய நூற்றாண்டை கடந்த பாரம்பரியம் மிக்க ஸ்தாபனம்
Mayiladuthurai: 24/4, Bajanai Madam Street, Near New Bus Stand, Mayiladuthurai
Thanjavur: 11A, South East Rampart, Thanjavur Chennai: 151, G.N. Chetty Road, T Nagar, Chennai
For Orders / Enquiry : 044 2815 2221 | +91 93609 60120 | +91 94867 18187
Visit www.arckamaatchi.com

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

இதழின் உள்ளே....

நேரம் தவறாமை உயர்வு தரும் 7

எண்ணங்கள் – மேன்மை தந்திடும் 9

பொய்மெய் 14

சொத்துப் பரிமாற்றச் சட்டம் 1882 17

நட்சத்திரங்களும் மரங்களும் 21

திருவிளையாடற்புராணம் 45

மணமகன் / மணமகள் தேவை 46–50

சங்க நிகழ்வுகள் 52

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

உங்கள் கருத்தைத் திணிக்காதீர்கள்

மார்ச் மாதம் முடிந்து ஏப்ரல் பிறந்து விட்டது. 10 மற்றும் + 2 மாணவ / மாணவியர்களின் தேர்வுகள் முடிந்து முடிவுகள் வந்து கொண்டிருக்கும் அவர்களின் மேற் படிப்புப் பற்றி முடிவு எடுக்க வேண்டிய நேரம் இது. இந்தக் காலங்களில் மாணவ மாணவியரின் நுண்ணறிவு / அறிவுத்திறன் என்னும் ஐ. க்யூ இண்டெலிஜெண்ட் கோஷன் சற்று அதிகமாகவே இருப்பதாகவே கூறப்படுகிறது எனவே பெரும்பாலான மாணவ / மாணவியர் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சக மாணவ மாணவியருடன் உரையாடுதல் இணைய தளங்களில் பார்த்து அறிதல் மற்றும் பலவழிகளில் மேற்படிப்பு பற்றி நிறையவே தெரிந்து கொண்டு தங்களுக்குள்ள திறமை பற்றி சுய பரிசோதனையையும் செய்து அடுத்ததாக தாங்கள் மேற்கொள்ள வேண்டிய படிப்பு மற்றும் துறை பற்றி ஓரளவு முடிவு செய்து வைத்திருப்பார்கள்.

அவர்களைப் பார்ப்பவர்கள் ஏனப்பா மேற்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்டால் அவர்கள் தேர்ந்தெடுக்கவுள்ள துறை பற்றி துணிவாகச் சொல்லுவார்கள். அப்படிப் பட்டவர்கள் விரும்பி அத்துறையைத் தேர்ந்தெடுத்திருப்பதால் நல்ல முயற்சி எடுத்துப் படித்துத் தேறி முன்னேறி விடுவார்கள். சிலர் எனக்கு எதுவும் ஐடியா கிடையாது எங்கள் அப்பா சொல்லும் கோர்ஸில் சேருவேன் என்பார்கள்.

பெரும்பான்மையான பெற்றோர்கள் தாங்கள் விரும்பும் / நினைக்கும் கோர்சையே தங்கள் மகன் / மகள் எடுத்துப்படிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். தங்கள் மகன்/ மகளது விருப்பம் பற்றிக்கேட்டிருக்க மாட்டார்கள். அவரது நண்பர்கள் யாராவது அவரைக்கேட்டால் அவன் சின்ன பையன் அவனுக்கு என்ன தெரியும் அதனால் கேட்கவில்லை. நான் அந்த கோர்ஸ் படிக்க விரும்பினேன் என்னால் முடியவில்லை அதனால் அவனாவது படிக்கட்டுமே என்பார். அது அதாவது தனது விருப்பத்தை தங்கள் மகன் / மகளிடம் அவர்களது விருப்பத்தைக் கேட்காமலும், அவர்களுக்கு அதைப் படிக்கும் திறமை இருக்கா என்பதைப் பார்க்காமலும் தங்கள் விருப்பத்தை திணிப்பது மிகத் தவறு. அவ்வாறு தங்களுக்கு விருப்பம் இல்லாமல் தமது பெற்றோரின் வற்புறுத்தலால்

அந்த கோர்ஸில் சேர்ந்த ஒரு சில மாணவ / மாணவியர் அந்த கோர்ஸ் கஷ்டமாக இருந்தாலோ அல்லது அவர்கள் விரும்பாத ராகிங் அல்லது அது மாதிரி வேறு நிகழ்வுகள் அந்தக் கல்லூரியில் நடந்தாலோ திரும்பவும் அந்தக்கல்லூரிக்கே செல்ல விரும்பாமல் சில தவறான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம் அல்லது கேள்விப் பட்டிருப்போம். விரும்பி அந்தக் கோர்சில் சேருபவர்கள் அதை எல்லாம் பொறுத்துக் கொள்வார்கள். தவறான முடிவு எடுக்க மாட்டார்கள்.

முதலில் சொன்னமாதிரி எனக்கு என்று எந்த விருப்பமும் இல்லை எனது தந்தையார் சொல்லும் கோர்சில் சேருவேன் எனறு சொல்லும் மாணவ/மாணவியரின் பெற்றோர் தாங்கள் செலக்ட் செய்யும் கோர்சில் சேர்க்கலாம் ஆனால் அவ்வாறு சேர்க்கும் முன்பாக தங்கள் பையனுக்கு அந்த கோர்சை படிக்கும்திறமை உள்ளதா அது அவனுக்கு ஏற்றதுதானா என்பதை எல்லாம் விபரம் தெரிந்த வர்களிடம் கேட்டறிந்து உறுதி செய்த பிறகு அத்தகைய துறையில் சேர்ப்பதே சிறப்பாகும். இது பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோரின் விருப்பம் அல்ல என்பதை உணர்ந்து செயல் பட வேண்டும்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

பரலி. நெல்லையப்பர் புகழஞ்சலி

வ.உ.சி., பாரதியாரின் உற்ற தோழர் குரோம்பேட்டையில் பல கோடிகள் பெறுமான இடத்தை பள்ளிக்கூடம் கட்ட தானமாக வழங்கிய கார்குல வள்ளல் தியாகி. பரலி. நெல்லையப்பர் அவர்களின் 53–வது நினைவு நாள் புகழஞ்சலி சென்னையில் நீதியரசர் திரு. வள்ளிநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள் மனிதநேயர் திரு. முத்துகுமாரசாமி அவர்கள் கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் K.K.R.K. சுரேஷ் சென்னை பகுதி இணைப்புச்சங்க நிர்வாகிகள் மற்றும் கார்குல முன்னோடிகள் வ.உ.சி. நலப்பேரவை நிர்வாகிகள் மாநகராட்சி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அறிஞர் பெருமக்கள், அரசியல் கட்சி தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், சமுதாய தலைவர்கள், நலச்சங்க நிர்வாகிகள் பலர் கலந்துக்கொண்டு மலர்தூவி மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. KKR குழுமம் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பப்படவேண்டும். இந்த இதழில் வெளிவந்துள்ள QR CODEயை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்.**
- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

நேரம் தவறாமை உயர்வு தரும்

கடலின் அலையும், நகரும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்பார்கள். யாரிடமும் வாங்க முடியாத, யாருக்கும் கொடுக்க முடியாத ஓர் உன்னத பொருள் 'நேரம்'.

உங்கள் கடிகாரத்தைக் கொஞ்ச நேரம் உற்றுப் பாருங்கள். எவ்வளவு நேர்த்தியான வினாடிகள், நிமிடங்கள், மணிகள் என ஓடிக் கொண்டே இருக்கிறது. காலையில் வேகமாகவும், மதியம் சோர்வாகவும், மாலையில் தூங்கியபடியும் அது ஓடுவதில்லை. ஆனால் நாமோ நம்முடைய மனநிலைக்கு ஏற்ப, 'டைம் செம பாஸ்டா ஓடிடுச்சு', ''நேரம் போகவே மாட்டேங்குது' என காலத்தைக் குறை சொல்கிறோம்.

ஒன்பது மணிக்கு துவங்கும் அலுவலகத்திற்கு எத்தனை பேர் சரியான நேரத்தில் வருகிறார்கள்? ஒன்பது மணிக்கு நடைபெறும் மீட்டிங்கிற்கு எத்தனை பேர் தாமதமின்றி வந்து சேர்கிறார்கள்? 'பத்து நிமிடம் லேட்டா போனா ஒண்ணும் ஆவாது' என்பது தானே பலருடைய மனநிலை?

'மூன்று மணி நேரம் சீக்கிரமாகச் செல்வது, ஒரு நிமிடம் தாமதமாகப் போவதை விட மிகச் சிறந்தது' என்கிறார் ஷேக்ஸ்பியர். நேரம் தவறாமையை அவர் எந்த அளவுக்கு என்பதற்கு இந்த ஒரு வரியே சாட்சி.

'பங்சுவாலிட்டி' என்பது ஏதோ அலுவலக வேலைக்கு மட்டுமானதல்ல. குடும்பத்திலும், சமூகத்திலும் தினம் தினம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு செயல் தான். சரியான நேரத்துக்கு ஒரு மாத்திரை சாப்பிடுவது கூட இதன் ஒரு பாகம்தான்.

நேரம் தவறாமை ஒரு சின்ன விஷயம் போலத் தோற்றமளித்தாலும், பாறையைப் பிளக்கும் உளி போன்ற வலிமை அதற்குண்டு. நேரம் தவறாமல் இருக்கும் நபரை மற்றவர்கள் ரொம்பவே மதிப்பார்கள். தனது வாழ்க்கையை சரியாய் வாழத் தெரிந்தவரே நேரம் தவறாமைமையக் கடைபிடிப்பார். அவர் நேர மேலாண்மையில் கில்லாடி என நிர்வாகம் அவரை கண்ணியத்துடன் கவனிக்கும்.

பிறரை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதன் முதல் அடையாளம் காலம் தவறாமை. ஒரு சந்திப்புக்காகவோ, வேலைக்காகவோ சரியான நேரத்தில் நீங்கள் ஆஜராகிறீர்களெனில் சந்திப்பில் கலந்து கொள்ளும் அனைவரையும் நீங்கள் மதிக்கிறீர்கள் என்பது அதன் வெளிப்படையான பொருள்.

உங்களுக்காக யாரும் காத்திருப்பதும் நல்லதல்ல, யாருடைய நேரத்தையும் நீங்கள் வீணடிப்பதும் நல்லதல்ல. காலம் தவறாமை சொல்லும் இன்னொரு விஷயம், 'நீங்கள் அந்த சந்திப்பை முக்கியத்துவம் வாய்ந்தது' என்று நினைக்கிறீர்கள் என்பதுதான்.

நேரம் தவறாமல் சரியான நேரத்தில் வரும் நபர் எப்போதுமே திறமைசாலியாகவும், தன்னம்பிக்கை உள்ளவராகவும் இருப்பார். அவருக்கு பெரிய பொறுப்புகள் வந்து சேரும்.

காலம் தவறாமை உங்களை நம்பிக்கைக்குரிய நபராய் அடையாளம் காட்டும். சொன்ன நேரத்தில் வருவது, சொன்ன நேரத்தில் வேலையை முடித்துக்கொடுப்பது, ஒப்புக்கொண்ட நேரத்தை மதிப்பது.... இவையெல்லாம் உங்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும்.

டயானா டிலோனசர் எனும் எழுத்தாளர் 'நெவர் பி லேட் எகைன்' எனும் நூலை எழுதினார். இந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ள கருத்து மிக சுவாரசியமானது. 'நேரம் தவறாமையை பின்பற்றாத மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் தாமதத்தையே தொடர்கிறார்கள். நல்லதோ கெட்டதோ, எங்குமே அவர்களால் சரியான நேரத்தில் இருக்கவே முடிவதில்லை' என்கிறார் அவர்.

தாமதமாய் வருவது தவறு, அந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும் எனும் சிந்தனை உங்கள் மனதில் முளைக்க வேண்டியது முதல் தேவை. அப்போது தான் உங்களுடைய தினசரி நடவடிக்கைகளை நீங்களே கொஞ்சம் அலசுவீர்கள். காலையில் ஏன் தினமும் லேட்டாகிறது? கொஞ்சம் சீக்கிரம் எழுந்தால் என்ன? போன்ற சிந்தனைகள் உங்களிடம் அப்போதுதான் எழும்.

'சரியான நேரத்தில் கலந்து கொள்ள வேண்டும்' என எப்போதுமே நினைக்காதீர்கள். பத்து நிமிடம் முன்னதாக இருக்க வேண்டும் என்று நினையுங்கள்.

அப்போது தான் சரியான நேரத்திலாவது நீங்கள் அங்கே இருக்க முடியும்.

நேரம் தவறாமை நமது திட்டமிடுதலைச் சார்ந்தே இருக்கிறது. உதாரணமாக, இரண்டு மணி நேரத்தில் செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஒரு மணி நேரத்தை ஒதுக்காதீர்கள். முடிக்க முடியாத அளவுக்கு நெருக்கமான கால இடைவெளிகளில் நிகழ்வுகளை வைத்துக் கொள்ளாதீர்கள். அது எப்போதுமே உங்களைச் சிக்கலில் தள்ளி விடும்.

பலருக்கும் உள்ள மிகப்பெரிய கெட்ட பழக்கம் கடைசி நிமிடத்தில் ஏதாவது ஒரு வேலையைச் செய்யத் துவங்குவது. சட்டென ஒருமுறை மின்னஞ்சலைப் பார்த்து விடுவோம், ஒரு நபருக்கு போன் செய்து முடித்து விடுவோம் என கடைசி நிமிட பரபரப்பை உருவாக்குவார்கள். உங்களைத் தாமதப்படுத்தும் மிக முக்கியக் காரணியே இந்தக் கடைசி நிமிட திடீர் வேலைதான் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

முக்கியமான ஒரு நிகழ்வுக்கு முன்னும் பின்னும் முக்கியமான நிகழ்வை எந்தவித பதட்டமும் இல்லாமல் முடிக்க முடியும்.

எதிர்பாராத வேலைகளுக்காக என்று கொஞ்சம் நேரத்தை எப்போதுமே ஒதுக்கி வைத்திருங்கள். போகும் வழியில் போக்குவரத்து நெரிசல் இருக்கலாம். டயர் பஞ்சராகலாம், எதிர்பாராத ஓர் அழைப்பு வரலாம், இப்படி எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து கொஞ்சம் 'கூடுதல்' நேரத்தை ஒதுக்கி வையுங்கள்.

இப்போதைய தொழில் நுட்பம் உங்களுக்கு ஏகப்பட்ட வசதிகளைச் செய்து தருகிறது. செல்போன் அலாரம், ரிமைண்டர்கள், கணினி மென்பொருள்கள் மூலம் பணிகளை திட்டமிடும் வசதி... போன்ற எதை வேண்டுமானாலும் பயன்படுத்தி உங்கள் நேரத்தைத் திட்டமிடலாம். அதே போல வீட்டில் எல்லா அறைகளிலும் ஒவ்வொரு கடிகாரம் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் உங்களுக்கு அது ரொம்பவே உதவும்.

சீக்கிரமே போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் பல வேளைகளில் தாமதத்தை உருவாக்கிவிடும். அந்த காத்திருப்பு நேரங்களில் என்ன செய்யலாம் என யோசித்து வையுங்கள். ஒரு புத்தகம் படிப்பது கூட உங்களை உற்சாகம் அடையச் செய்யும்.

தாமதமாய் வருவது பெரிய ஆட்களுக்கே உரிய தகுதி என்றோ, தாமதமாய் வந்தால் நீங்கள் பெரிய நபராகப் பார்க்கப்படுவீர்கள் என்றோ தயவு செய்து நினைத்து விடாதீர்கள். உண்மையில், நேரம் தவறாமை தான் உங்களை தலைமைப் பண்பு உடையவராய்ச் சித்தரிக்கும். பல வாய்ப்புகளின் கதவுகளையும் அது சத்தமில்லாமல் திறந்து வைக்கும்.

சில வேளைகளில் தாமதம் தவிர்க்க இயலாததாகிவிடும். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தகவல் தெரிவித்துவிடுங்கள். தாமதமாய் நுழையும் போது, மன்னிப்பு கேட்கவும் மறக்க வேண்டாம். ஒரு வேளை கலந்து கொள்ளவே முடியாத சூழல் என்றால் 'சாரி' என முன்னரே மறுத்து விடுதல் நல்லது.

சிலருடைய தாமதத்துக்கான காரணம் சின்னபுள்ளத் தனமானவையாக இருக்கும். 'குழந்தை அழுதுடுச்சு', 'காபி கொட்டிடுச்சு', ஒரு போன் கால் வந்துடுச்சு என உச்சுக்கொட்டுவார்கள். இவையெல்லாம் காரணங்களல்ல, உங்கள் மீதான மதிப்பைக் குறைக்கும் காரணிகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இங்கிலாந்தில் வெளியான ஓர் ஆய்வு முடிவு, 'லேட்டாக வருபவர்களால்' மேலாளர்கள் எரிச்சலடைகிறார்கள் என்று அடித்துச் சொன்னது. லேட்டாக வருபவர்கள் சொல்லும் காரணங்கள் பெரும்பாலும் பொய்களாகவே பார்க்கப்படும் என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

சின்ன வயதிலிருந்தே குழந்தைகளுக்கு நேரம் தவறாமையைக் கற்றுக் கொடுங்கள். குழந்தைகள் பெற்றோரைப் பார்த்துத்தான் எதையும் கற்றுக் கொள்ளும். சரியான நேரத்துக்கு தூங்குவது, சாப்பிடுவது, படிப்பது என எல்லாமே பெற்றோரைப் பின்பற்றியே பிள்ளைகள் நடக்கும். நீங்களே குழந்தையை பள்ளிக்கூடத்துக்கு தாமதமாய் கொண்டு விட்டீர்கள் என்றால் குழந்தையும் அதையேதான் கற்றுக்கொள்ளும் என்பதை மறக்காதீர்கள்!

கடைசியாக, நேரம் தவறாமையை நீங்கள் பழக்கப்படுத்திக் கொண்டால் தேவையற்ற பல மன அழுத்தங்களையும், மன உளைச்சல்களையும் நீங்கள் வென்றுவிடலாம். சொன்ன வாக்கைக் காப்பாற்றி விட்டோம் எனும் ஆழ்மன நிம்மதியும், மகிழ்வும் உங்களை உற்சாகமாய்ச் செயல்பட வைக்கும்.

காலம் தவறா ஆச்சரியம்
வெற்றிக் கிளையில் பூச்சொரியும்!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90.
செல் : 9943702054

எண்ணங்கள் - மேன்மை தந்திடும் தருணங்கள்.

ஞான. அம்புலி, சிதம்பரம்.

மனம் என்ற குளத்தில் ஆசை என்ற கல் எறியப்படும்போது எண்ண அலைகள் உருவாகி வட்டவட்டமாய் விரிவடைகின்றன. தீய எண்ணங்கள் புத்தகங்கள் படித்தல், நல்ல நண்பர்களோடு உரையாடல், நல்ல சுற்றுச்சூழல் இவைகளோடு நல்ல துணை இவையெல்லாம் நல்ல எண்ணங்கள் உதிக்க காரணங்களாகும். சிந்தித்து சிந்தித்து பார்ப்பதாலேயே மட்டும் always சிறந்த எண்ணங்கள் உதிப்பதில்லை. மனம் ஒழுங்காக இருந்தால் போதும் நல்ல எண்ணங்கள் தாமாகவே உதிக்கும்.

பகல் நேரங்களில் மட்டுமல்லாது இரவு தூக்கம் நிகழும்போதும் எண்ணம் உண்டாகும். கடல் அலைகளைப் போல் நாம் எந்த பணி செய்துகொண்டிருந்தாலும், ஆயிரக்கணக்கான எண்ண அலைகள் தோன்றி மறைந்த வண்ணம் தொடர் நிகழ்வு நடந்தபடி இருக்குமாம். சில எண்ண அலைகள் மட்டும் நம்மை அறியாமலேயே உள்ளத்தில் ஆழமாக பதிந்துவிடும். பல நாட்கள் / மாதங்கள் / வருடங்களுக்கு பிறகு எண்ணக்குவியலில் ஏதாவது எண்ணப்படி செயல் ஏதும் நடந்துவிட்டால், 'என்னுடைய நெடுநாளைய எண்ணம், இன்றுதான் நிறைவேறியது' என மகிழ்ச்சிபொங்க சொல்வதை கேட்டிருக்கிறோம். காற்றால் எழும் கடல் அலைகள் அனைத்தும் கரையைத் தொடுவதில்லை. அதே போல் எண்ண அலைகள் அனைத்தும் மனதில் அழுத்தமாய் படிவதில்லை.

எண்ணங்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் அடங்காது, சில சமயங்களில் ஒரு எண்ணம் எழும்போது அதை செயல்படுத்த முனையும்போது, மற்றொரு எண்ணம் ஏற்பட்டு முதல் எண்ணத்தை ஒதுக்கிவிடும், உதாரணத்துக்கு நடைபயிற்சியின் போது மனதில் எழுந்த ஒரு எண்ணம்படி வழக்கமான Route–ல் நடைபயிற்சி மேற்கொள்ளும்போது வழியில் இன்று கோயிலுக்குச் சென்று இறைவனை தரிசிக்கலாம் என்ற மாற்று எண்ணம் தோன்றும். அதன்படி கோவிலுக்குள் சென்ற போது நெடுநாளைக்குப் பிறகு சந்திக்கும் ஒரு நண்பனை பார்த்தபோது எண்ணம் மாறி அந்த நண்பனோடு குளக்கரையில் அமர்ந்து பேசிவிட்டு வீடு திரும்பிவிடுவோம். இத்தகைய இடைப்படும் எண்ண மாற்றங்கள் பெரும்பாலும் நல்லவை பெற்றுத் தருவதோடு உயிர்பிழைக்க வைத்த நிகழ்வுகளும் நடப்பதுண்டு.

எப்படி ஆசைகளை அடக்கி ஆள்வது கடினம் போல எண்ணங்களின் எழுச்சியை வடிகாலின்றி அடக்க முடியாது. அதே நேரத்தில் தோன்றும் அனைத்து எண்ணங்களுக்கும் வடிவம் கொடுத்து வழிவகுத்து அனைத்தையும் அடையவும் முடியாது.

சரியான நேரத்தில் தகுதியான எண்ண அலைகள் வீசாவிட்டால் காரியம் தடைபட வாய்ப்புகள் உண்டு. வாழ்க்கை எனும் பயணத்தில் இடை வரும் எண்ணங்களை பாம்பென்று ஒதுக்கவும் முடியாது! பதரென்று மிதிக்கவும் முடியாது! அதாவது வழிகாட்டியாகவோ வழித்தடங்கலென்றோ எடுத்துக்கொள்ள முடியாது. எண்ண அலைகளினால் ஏற்படும் எழுச்சியினை சிந்தித்து அலசி, ஆலோசித்து பின்னர்தான் செயல்பட முயற்சிக்க வேண்டும். எண்ணங்களில் பிரதிபலிப்பு உங்கள் செயல்களிலும் வாய்வார்த்தைகளிலும் அமையுமாதலால் புதியவர்களை சந்திக்கும்போது மிகவும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். முகம் மலர்ச்சியாய் இருக்க வார்த்தைகள் இனிமையாய் இருக்க எண்ணங்கள் ஆனந்தமாய் இருக்க வேண்டும்.

'இருபாலைச் சேர்ந்த இரு மன எண்ண அலைகளின் சங்கமும்தான் காதலுக்கு அஸ்திவாரம்' என்றான் காதல் மன்னன் ஷாஜகான்.

''நல்ல எண்ணங்கள், சாதனை புரிவதற்கான செயல்களுக்கு பிள்ளையார் சுழி போடும் சக்தியுடையவை'' என்றார். கிருபானந்தவாரியார். ''பல குடும்பங்கள் அல்லலுறுவதற்கு அடிப்படை காரணம் அக்குடும்பங்களில் உறுப்பினர்களிடையே நிலவும் எதிர்மறை எண்ணங்களே'' என்றார். சுத்தானந்த பாரதி, ''தோல்வியின் நுனியிலும் வெற்றிக் களியாட்டத்தின் வரம்பிலும் நானிருக்கும்போது எனக்கு தைரியத்தையும் அவை அடக்கத்தையும் கொடுக்கவைத்தது எனது எண்ண அலைகளே'' என்றான் மாவீரன் அலெக்சாண்டர்.

''சக்தியை தந்துவிடு'' என்று இறைவனை வேண்டும்போது ''அந்த சக்தியினை எண்ணங்கள்

வடிவில் தந்துவிடு'' என்றான் மகாகவி பாரதி. ''எண்ணங்கள் வளர்ச்சிக்கான வாயிற்படி என்றாலும் அதன் வழியில் always நாம் நடக்காமல் நம் வழிக்கு அதனை அழைத்துச்சொன்றோமானால் அனைத்தையும் அடையலாம்'' என்றான் கவியரசு கண்ணதாசன் எண்ணிக்கை என்றுமே வாழ்க்கையை முடிவு செய்வதில்லை. எண்ணங்கள்தான் முடிவு செய்யும், அதனால்தான் பெரியவர்கள் நல்லவர்களுக்கு ஆசி கூறும்போது ''எண்ணம்போல் வாழ்க்கை'' இன்றும் செட்டிநாட்டுக்குடும்பங்களில் மணமான தன் மகனை வழி அனுப்பும்போது அப்பெண்ணின் தந்தை ''எண்ணம்போல் வாழ்வாய்'' என வாழ்த்து கூறுவார்கள்.

''என்னால் சாதிக்க முடியும்'' என்ற நேர்மறை எண்ணங்கள் இருப்பின் எதிர்மறை எண்ணங்கள் தவிடுபொடியாகிவிடும் என்கிறார் சுவாமி விவேகானந்தர். இதற்கு உதாரணமாக அமெரிக்காவில் வாழ்ந்த மோரிஸ் என்பவரது வாழ்க்கை, வரலாறு படைத்துள்ளதாக சொல்லுவார். மிகவும் ஏழ்மை நிலையிலும் கல்வி அறிவு பெறாமலுமிருந்த மோரிஸின் சிந்தனைகள் உணர்த்தி வந்த காரணத்தால் 'இந்த நிலையிலும் வாழ்ந்து காட்டுவேன்.' என உறுதி பூண்டு உழைத்தார். சிந்தனைகளை சிதறவிடாது எதிர்மறை எண்ணங்கள் இடையூறாய் குறுக்கீடு செய்யவிடாது உழைத்த காரணத்தால் கோடீஸ்வரராக ஆனார். மீண்டும் அவருக்கு உயிர் வாழ ஒரு சோதனை! ஒரு முறை தன் சொந்த விமானத்தில் பயணம் செய்யும்போது விமானம் விழுந்து நொறுங்கியதால், முதுகுத்தண்டு சிதைந்து செயற்கை சுவாசிப்பதோடுதான் உயிர் வாழ முடியும் என மருத்துவர்கள் கைவிட்டுவிட 'என் வாழ்க்கையை நான்தான் முடிவு செய்வேன்' என உறுதிபூண்டு மருந்துகளோடும் உணவு கட்டுப்பாட்டோடும் அல்லும் பகலும் தேவையான பயிற்சிகள் எடுத்து மூன்றே மாதத்தில் தானே எழுந்து நடந்து மருத்துவமனையிலிருந்து வெளியேறினாராம்! இயல்பு நிலை திரும்பிய (Recovery) இவரது உயிர்த்தெழுந்த செயலை 'அற்புதம்' என மருத்துவ உலகமே ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தபோது ''தனது எழுச்சிமிகு நேர்மறை எண்ணங்கள்தான் தனது மீண்ட வாழ்க்கைக்கு முக்கிய காரணம்'' என்றாராம் மோரிஸ்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்

– மகாகவி பாரதியார்.

எளிய உணவை உண்பது குற்றமாகாது
எளிய எண்ணத்தை எண்ணுவதே
பெரும் குற்றமாகும்.

– வெற்றிச்சிந்தனைகள்.

வாழ்க்கையில் அனைத்துமே எண்ண
வடிவங்களின் பிரதிபிம்பங்களே!

– உட்ஸ்வெல் (குத்துவவியல் நிபுணர்)

இருப்பது பொய், போவது மெய் என்று எண்ணி
நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே....

– பட்டினத்து பிள்ளையார் பாடல்

அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று
எண்ணாதே!
எவர் சொன்ன சொல்லானாலும் உன் இயல்பான
பகுத்தறிவு
எண்ணங்கள்படி மெய் பொருள் காணல் வேண்டும்'

– சாக்ரடீஸ்

''ஒருவரது இதயத்தில் எழும் எண்ணங்களின் தரத்தை பொறுத்து, அவரது வாழ்வை யார் யாருடன் கழிக்க வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கிறானோ அவர்களுடன் அந்த மனிதர் ஈடுபடும் ஒவ்வொரு செயலையும் பொறுத்தே தெய்வீக அளவுகோல்கள் மனிதனை மதிப்பிடுகின்றன'' என்றார் சுவாமி சிவானந்தா.

பள்ளி மாணவர்களுக்கு மனதில் நல்ல எண்ணங்கள் உருவாகிட அனைவரும் சேர்ந்து காலையில்கூட்டுப்பிரார்த்தனைவகுப்புநடக்கும்போது, ''எல்லோரும் படிப்போம்'', ''நன்றாய் படிப்போம்'' என்ற ஸ்லோகங்களை கூட்டமாக பன்முறை சொல்லின் பலன் உண்டு என்று மேனாள் கல்வி இயக்குநர் நெ.சு. சுந்தரவடிவேல் சொல்லிச் சென்றுள்ளார்.

''சாந்தமான மனதில், எதிர்பார்ப்பு, கட்டளையிடுதல் விமர்சித்தல் இம்மூன்றுமில்லா எண்ண அலைகள் பேரின்பப் பெருவாழ்வு தந்திடும்'' என்றார்.

யோகா, Meditation, மனவளப் பயிற்சிகள் ஆகியவை எழும் எண்ணங்களை கோலோச்சவிடாமல் கட்டுக்குள் வைத்திட உதவிடும் என்பார்கள். ''ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு வழிகாட்டி அவன் மனதில் எழும் எண்ணங்களே! அவரவர் இலக்குகளை நிர்ணயிப்பதும் எண்ணங்களே! ஆதலின் எண்ணங்களை உதாசீனம் செய்யாதீர்'' என்றார் மகாத்மா காந்தி அடிகள். ''எப்படி அன்னப்பறவை நீருடன் கலந்த பாலை பிரித்து அதனை மட்டும் உணவாய் உட்கொள்வது போல் எண்ணக்குவியல்களில் ஏற்றம் தந்திடும் தகவல்களை தேடித் தேர்ந்தெடுங்கள்'' என்றார் குருபகவானந்தா. ''எண்ணங்கள் தந்திடும் ஏற்றங்களை எடைபோட என் வாழ்க்கையே உலகத்தாருக்கு ஒரு பூதக்கண்ணாடி'' என்றான் மாவீரன் நெப்போலியன்.

"எண்ணம் உயர்வாக இருந்தால் எண்ணப்படி உயரலாம். நமது எண்ணம்தான் நம்முடைய எதிர்காலத்தை உருவாக்குகிறது" என்றான் காரல்மார்க்ஸ்.

புண்ணியம் செய்ய வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடுமில்லை. புண்ணியத்திற்கும் எண்ணங்களுக்கும் மிகுந்த ஆத்மார்த்த தொடர்பு உண்டு. மற்றவர்கள் நன்றாயிருக்க வேண்டும் என்ற எண்ணங்கள் கொண்டவனே புண்ணியத்தை செய்ய வேண்டும் என நினைப்பான். எல்லோராலும் மற்றவர்களுக்கு ஆதரவான எண்ணங்களை அளிக்க முடியும் என்று எண்ணுங்கள். இந்த வகை புண்ணியத்தை பெற்றிட வைக்கும் எண்ணங்கள் எழுவதற்கு நேரம் காலம் தேவையில்லை! மனதில் எழும் புண்ணியத்திற்காக எண்ண அலைகள் ஏற்படுத்தும் தாக்கம் வேறு எதிலுமில்லை என அறுதியிட்டுச் சொல்லலாம். புண்ணியம் தந்திடும் எண்ண அலைகள் மனிதகுலம் தாண்டி அனைத்து உலக உயிர்களுக்கும் சென்றடைய இறைவன் துணை நாடுங்கள். எந்தவித பலாபலன்கள் கருதாது செய்யும் புண்ணிய எண்ண அலைகளால் மட்டுமே நிம்மதியான உலகை உருவாக்க முடியும். இறையருள் புவியெங்கும் வியாபிக்க முடியும்.

சோதனை காலங்களில் ஏற்படும் எண்ணங்களை எதார்த்த நோக்கோடு அணுக வேண்டுமே தவிர எதிர்மறை விளைவுகளை உண்டாக்கும் எதேச்சதிகார ஆணையாக கருதக்கூடாது. எண்ணங்கள், அதன்படி இயங்கும் செயல்பாடுகள் ஆகிய இரண்டும் ஒரு மனிதனின் தனித்தகுதியின் பிரதிபலிப்பு என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். ஒட்டப்பந்தைய விழாவில் முதல் கட்டமாக ஒரு ஜோதியை எடுத்துக்கொண்டு ஓடும் Torch bearer போல் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எண்ணங்கள் வழிகாட்டும், வெளிச்சம் தந்திடும் வேலையை செய்வதாய் உணர்வோம் ! ஊக்கம் பெருவோம் !! உன்னதம் அடைவோம் !!!.

பொறுமையை விட மேலான தவமுமில்லை!
திருப்தியைவிட மேலான இன்பமுமில்லை !
இரக்கத்தைவிட உயர்ந்த அறமுமில்லை !
மன்னித்தலைவிட ஆற்றல் மிக்க ஆயுதமுமில்லை !
நல்ல எண்ணங்களைவிட சிறந்த
புண்ணியமுமில்லை !

வாழ்த்துகிறோம்.

வைதீஸ்வரன் கோயில் சந்நிதி தெரு திரு. R. ரமணிராஜன் – தேவகி இவர்களின் மகள் செல்வி. சு. பரணி–க்கும் மயிலாடுதுறை திரு. G. கோவிந்தராஜீ பிள்ளை – சுகந்தி இவர்களின் மகன் செல்வன் G. மனோஜ்–க்கும் மயிலாடுதுறை ஸ்ரீ விமலாம்பிகை திருமண மண்டபத்தில் 17–3–23 அன்று திருமணம் நடைபெற்றது. சீர்காழி சங்கத்தின் சார்பாக மணமக்களுக்கு சந்தன மாலை அணிவித்து வாழ்த்து மடல் வாசித்து வழங்கப்பட்டது.

அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவு சந்தா மற்றும் விளம்பர தொகையை **ONLINE** மூலம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. நமது சொந்தங்கள் அதை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. online fund transfer / QR CODE / UPI https:/karkathar.com/payment.html மூலமாக செலுத்தலாம். இதன் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

online fund Transfer

Account Number :
130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name :
M/S Karkathar Oppuravu
Bank Name and Branch :
Indian Overseas Bank/
Choolai Medu - Chennai.

QR CODE/UPI

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா - பாராட்டுகள்

சென்னை சங்கம் 8–1–2023 அன்று தன் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தது. என் உடல் நிலை காரணமாக நேரில் கலந்து கொள்வதை தவிர்த்தேன். அதனால் மிக வருந்தினேன். சங்கம் தன் நிகழ்வை யூடியூபில் வெளியிடுவதாக அறிந்தேன். அதை பயன்படுத்தினேன்.

அதன் முன் காலை 9 மணிக்கு அமர்ந்து இரவு 9½மணிக்குத்தான் எழுந்தேன் நிகழ்வு அனைத்தையும் ஒரு நிமிடம் கூட வீணாக்காமல் கண்டு களித்தேன். நேரில் வந்து கண்டு களித்திருந்தால் கவனம் சிதற பல வாய்ப்புகள் உண்டு. என் போன்று நேரில்வராத பல அன்பர்கள் வீட்டிலேயே கண்டிருப்பார்கள். இதை ஏற்பாடு செய்தவர்களுக்கு மிக மிக நன்றி.

விழாவின் அனைத்து நிகழ்வுகளும் மிக மிக நன்றாய் அமைந்திருந்தது. வரவேற்பு, மலர் வெளியீடு, பட்டிமன்றம், தொழில் முனைவோர் கருத்து, மருத்துவர்களின் ஆலோசனை, மகளிர் கருத்து, நடனம், பாட்டு, பரிசளிப்பு, தொண்டர்களுக்கு பாராட்டு இவ்வளவும் ஒரே நாளில். கடினமான செயல்தான் முன் கூட்டி திட்டமிடல் செயல்படுதல், பலரின் சேவை. மலைக்கிறது இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

1980–ல் மேலையூரில் ஒப்புரவு உதயமாகியது. 1990–ல் அது சென்னைக்கு புலம் பெயர்ந்தது. அதனால் அதன் மெருகு கூடியது. கனம் அதிகமாகியது. பல வண்ணங்களை பூசிக்கொண்டது. பல தலைப்புகளில் செய்திகளைத் தாங்கியது. பல இளம் உள்ளங்களை ஒன்று சேர்த்தது. பல மாணவச் செல்வங்களுக்கு கல்வி உதவி செய்தது. இன்னும் பல. சுமார் 5000 வீடுகளுக்குச் சென்று தன் கருத்தைச் சொல்கிறது. இப்போது அது 42–வது ஆண்டைக் கடந்து வெற்றிநடை போடுகிறது. பொன்விழா கொண்டாட அது இன்னும் என்ன என்ன புதுமை செய்யப் போகிறதோ! யாம் அறியோம்.

ஒரு சங்கம் 100 ஆண்டை கடந்தது என்றால் அது சாதாரண செயல் அல்ல. அதன் அஸ்திவாரம் பலமாக போட்டிருக்க வேண்டும். அதனை தொடர்ந்து கட்டிக்காத்த பெரியோர் அனைவரும் தன் நலம் கருதாமல், சேவைக்கு முன்னுரிமை கொடுத்து உழைத்திருத்தல் வேண்டும் எனத் தெளிவாகத் தெரிகிறது. இடையே சங்கம் பல இடையூறுகளை சந்தித்திருக்கலாம். அதனை எல்லாம் கடந்து, வெற்றி நடைப்போட்டு சதம் அடித்த சென்னை கார்காத்தார் சங்கத்துக்கு பாராட்டுகள் பல பல. தற்போது சங்கத்தை நிர்வகித்து வரும் அத்துணை அன்பர்களுக்கும் என் மனமார்ந்த மகிழ்வினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்தாந்த ரெத்தினம் தி. கபீர்தார், சிதம்பரம்

94454 73386

◇◇◇

தி. கார்காத்தார் சங்கம் (சென்னை), சூளைமேடு, சென்னை.

2022 - 2023 கல்வி ஆண்டில் கல்வி உதவிதொகை பெற்றவர்கள்.

S.No.	மாணவ / மாணவி பெயர்	பெற்றோர்	ஊர்	படிப்பு	கல்வி உதவிதொகை
1	M. வெங்கடேசன்	முத்துக்குமரன்	சிதம்பரம்	Pharm-D 4th year	25,000
2	S. சௌமியா	சபேசன்	சிதம்பரம்	B.Sc Agri 4th year	20,000
3	S. சுவாதி	காளிதாஸ்	விருதாச்சலம்	B.E (CSE) 4th year	20,000
4	P. செல்வகுமார்	பொன்னையா	சென்னை	B.E (CSE) 3rd year	20,000
5	V. ஹரிஹரன்	சிவரஞ்சனி	சிதம்பரம்	B.E(Mech) 3rd year	20,000
6	S. நவீன்	சிவகாமசுந்தரி	மயிலாடுதுறை	B.E (CSE) 3rd year	20,000
7	M. பிரித்வி	முருகானந்தம்	ஸ்ரீமுஷ்ணம்	B.E 3rd year	20,000
8	R. அருண்குமார்	ரேவதி	மயிலாடுதுறை	B.E(CSE) 2nd year	20,000
9	V. அபிராமி	வெங்கடேசன்	சிதம்பரம்	B.E (IT) Ist year	20,000
10	V. அரவிந்த் மாளவன்	வேல்முருகன்	சிதம்பரம்	B.E (CSE) Ist year	20,000
11	M. ஜெய ஸ்ரீ	முத்துக்குமரன்	சிதம்பரம்	B.E (CSE) Ist year	20,000
12	P. சந்தோஷினி	பிரகாஷ்	சிதம்பரம்	B.E (IT) 4th year	20,000
13	B. சீனிவாஸ்	பாபு	மயிலாடுதுறை	B.E (CSE) Ist year	20,000
14	P. லாவண்யா	பிரகாஷ்	சிதம்பரம்	B.E(CSE) 4th year	20,000
15	R. அதிர்ஷ்டலட்சுமி	ரமேஷ்	கடலூர்	B.Sc Nursing 1st year	20,000
16	K. ஹேராம்	குமார்	மயிலாடுதுறை	B.Sc Physics 3rd year	10,000
17	R. ஹரிணி	ரவிக்குமார்	ஸ்ரீமுஷ்ணம்	B.Sc Geog 2nd year	10,000
18	R. சீனிவாசன்	ராஜநாயகம்	சீர்காழி	B.Sc 3rd year	10,000
19	S. கிருத்திகா	சிவசங்கரன்	மயிலாடுதுறை	B.Sc 1st year	10,000
20	G. ஜெயப்பிரதா	கணபதி	சிதம்பரம்	B.Com 3rd year	10,000
21	R. முத்துக்குமாரன்	ரத்ன சபாபதி	மயிலாடுதுறை	B.Com 3rd year	10,000
22	S. சிந்துஜா	சுந்தரமூர்த்தி	காட்டுமன்னார் கோவில்	B.Com	10,000
23	C. கோகுல்	சிதம்பரம்	மதுரை	B.A 3rd year	10,000
24	S. கீர்த்தனா	சிவசங்கரன்	மயிலாடுதுறை	B.A. 2nd year	10,000
25	A. சுபாஸ்ரீ	விஜயலட்சுமி	சிதம்பரம்	B.A. 2nd year	10,000
26	N. சிந்து	நடராஜன்	மயிலாடுதுறை	MBA 2nd year	10,000
27	R. பூஜா ஸ்ரீ	ரவிச்சந்திரன்	கடலூர்	M.Com (IC) 4th year	10,000
28	G. அபிராமி	ஞானவேல் பிள்ளை	கடலூர்	M.Com 1st year	10,000
29	K. ராஜா	கண்ணன்	புவனகிரி	DME 1st year	10,000
30	R. சூர்யா	ரமேஷ்	சிதம்பரம்	DME 3rd yaer	10,000
31	M.A. ஜெயகீர்த்தி	R. முத்தையன்	சென்னை	Grade 12	6,000
				TOTAL	4,61,000

S. ஞானசேகரன், பொருளாளர்.

கைலை. சண்முகம், செயலாளர்.

S. சிவக்குமார், தலைவர்.

பொய்மெய்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

பொய்யான பேச்சு, பொய்யான எண்ணம் பொய்யான செயல், பொய்யான மனம், பொய்யான அன்பு, பொய்யான மரியாதை, பொய்யான வேஷம், பொய்யான பக்தி என அனைத்திலுமே அன்றாட வாழ்க்கையில் பொய் பொய் பொய் .....

ஜனன காலம் தொட்டே இந்தப் பொய்யான மெய் (உடம்பு) எத்தனை பொய்களுக்குச் சொந்தக்காரன் ஆகிவிடுகின்றது தெரியுமா? ஆயிரம் பொய்யைச் சொல்லிக் கல்யாணத்தை நடத்து என்பதற்குப் பல்வேறு விதமாக விளக்கங்கள் சொல்லப்பட்டாலும் பொய்மை இல்லாத கல்யாணங்கள் எதுவும் எப்போதும் நடப்பதில்லை. கலியுகம் பிறந்ததிலிருந்தே இந்தப் பொய் இல்லாத இடமோ, சொல்லாதவர்களோ இல்லை என்றேதான் கூறவேண்டியுள்ளது. பொய் சொல்லக்கூடாது பாப்பா என்ற பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியரே பொய்யா மார்க் ஷீட் தயாரித்து மாணவர்களையும் பெற்றோரையும் பல்கலைக் கழகங்களை ஏமாற்ற உதவுகின்றார் என்றால் எங்கே போகின்றது இந்த உலகம் என்றே புரியவில்லை. குழந்தைகளை எப்படி வளர்க்கின்றோம் என்ற காலம் மலையேறிவிட்டது. உலகம் இவர்களை எப்படி வரவேற்கின்றது என்ற நிலைதான் மனதுக்கு வேதனை தரும் விஷயமாக உள்ளது. 1700 எம்.பி.ஏ. மாணவர்கள் பங்கேற்ற ஓர் ஆய்வில் 63 சதவிகிதத்தினர் பொய்யான தகவல்களைக் கொடுத்துதான் வேலை பெற்றுள்ளார்கள் என்றால் யார் ஏமாற்றுகிறார்கள்? யார் ஏமாறுகிறார்கள்? என்றே புரியவில்லை. பொய்யான உலகம், பொய்யான வாழ்க்கை இப்படி அண்ட சராசரமே பொய் என்னும் மாயையில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது. நீங்களும் நானும் பொய்யான வாழ்க்கை வாழ்பவர்களால் நிரம்பிய ஒரு உலகில் வாழ்கிறோம் பாசாங்குகளின் முகமூடிகளை அணிந்து கொண்டு.

சக்கரவர்த்தி திருமகள் படத்தில் எம்.ஜி.ஆர் வாயசைக்க பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதி சீர்காழி கோவிந்தராஜன் ஐயா பாடிய "மனிதன் பிறக்கும் போது இருந்த குணம் போகப் போக மாறுது" பாடல் பொருத்தமான பதிலாகும். உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனை குணம், எதையும் உருப்படாமல் செய்வது குரங்கின் குணம், ஆற்றில் இறங்குவோரை கொல்வது முதலை குணம், ஆனால் இத்தனையும் மொத்தமாய் சேர்ந்து வாழுதடா மனித குணம். "மனிதனுக்கு ஏறும் போது ஒரு புத்தி – இறங்கும் போது ஒரு புத்தி" இதன் பொருள் புரியும் என்று நினைக்கிறேன். காரியம் ஆகணும் என்றால் காலைப்பிடிப்பான். காரியம் ஆனபின் காலை வாருவான். பருப்பு சாம்பார் மணக்கணுமின்னா கருவேப்பிலையை மதிப்பான். பந்திக்கு வந்தால் ஆயசத்தோடு விலக்குவான்.

'மொத்தமக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி பேர் தினமும் கடுமையான பொய் ஒன்றைப் பேசுகிறோம்' என்று உளவியலாளர் ரிச்சர்ட் வைஸ்மேன் கூறுகிறார். ஆனால் சமீபத்தில் நடத்திய ஒரு கணக்கெடுப்பில் தாங்கள் ஒருபோதும் பொய் பேசியதில்லை என்று ஐந்து சதவீத மக்கள் கூறியுள்ளனர். பெயர் வெளியிடாத கணக்கெடுப்புகளில் கூட நம்மில் பலர் உண்மையைக் கூறுவதில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது. குழந்தைகள் எந்த வயதில் பொய் சொல்ல ஆரம்பிக்கிறார்கள் என்பது குறித்து ஆர்வம் தரும் சில ஆய்வுகள் உள்ளதாக ரிச்சர்ட் வைஸ்மேன் கூறுகிறார். குழந்தைகளை ஓர் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள். உங்களுக்குப் பிடித்த பொம்மையை உங்கள் பின்னால் வைக்கிறோம் ஆனால் தயவுசெய்து திரும்பிப் பார்க்க வேண்டாம் என்று கூறுங்கள். பிறகு அறையைவிட்டு வெளியே வந்துவிடுங்கள். பொம்மையைப் பார்க்கக் கூடாது என்று மறுபடியும் நினைவுபடுத்துங்கள். என்கிறார் அவர் காமிரா மூலம் அறையில் நடப்பதைப் பாருங்கள். சில நிமிடங்களில் அவர்கள் பொம்மையைப் பார்ப்பார்கள். நீங்கள் அறைக்கு திரும்பிச் சென்று, "பொம்மையைப் பார்த்தீர்களா" என்று கேளுங்கள். "மூன்று வயதுக் குழந்தைகளிடம் – நன்கு பேசத் தொடங்கும் வயது – இந்த சோதனையை நீங்கள் நடத்தினால், 50% பேர் பொய் சொல்வதை நீங்கள் காண முடியும்" என்கிறார் ரிச்சர்ட்.

ஏமாற்றுபவனுக்குப் பொய் பேச்சு சாமர்த்தியம் நிச்சயம் இருக்கும். என்றாலும் பொய் பேசுபவனுக்குப் பெரும்பாலும் ஞாபக சக்தி இருப்பது இல்லை. பேச்சு சாமர்த்தியம் உள்ள எல்லோருமே ஏமாற்றுக்காரர்கள் இல்லை. ஞாபக சக்தி உள்ளவர்கள் எல்லோருமே பொய் சொல்லுகிறவர்களும் இல்லை. பொய் பேசும் எல்லோருமே தன்னைச் சாமர்த்தியசாலிகளாகவே பாவித்துக்கொள்வார்கள். அந்த சாமர்த்தியம் அவர்களுக்கு இழப்பைத் தருகின்றதே ஒழிய, உயர்வை என்றுமே தருவதில்லை. பொய் சொன்னால் போஜனம் கிடைக்காது என்று சொல்கிறோம் இல்லையா?

ஒரு பலே பேர்வழி, உடம்பு முழுக்கப் பொய். யாரை எப்படி ஏமாற்றுவது என்பதே 24 மணிநேர சிந்தனை கடவுளை நோக்கித் தியானம் செய்தான். கடவுளும் ப்ரத்யக்ஷமானார், என்னப்பா வேண்டும் உனக்கு, கேள் தருகிறேன் என்றார். இவரை எப்படியாவது மடக்கி ஏமாற்றி நமக்குப் பெரிய அளவில் சொத்துச் சுகங்களைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதித்தது அவனுக்கு. 'கடவுளே, பத்து கோடி பொற்காசுகள் உங்களைப் பெருத்த அளவில் எப்படி ?' கடவுள் சிரித்துக்கொண்டே 'அது எனக்கு ஒரு பைசா மாதிரி', 'அடேயப்பா... அப்படியானால் ஒரு கோடி வருஷம் என்பது உங்களுக்கு ?... 'ஒரு வினாடி மாதிரி' என்றார் கடவுள். புத்திசாலித்தனமாகக் கேட்பதாக நினைத்துக்கொண்டு 'ஒரு பைசா மட்டும் எனக்கு அனுக்கிரகம் பண்ணுங்கள்....' அதற்கென்ன, ஒரு நொடி காத்திரு தருகிறேன்... என்று சொல்லி மறைந்துவிட்டார். சாமார்த்தியமாகக் கேட்டதாக நினைத்த இவனுக்கு ஏற்பட்ட கதிதான் பொய் பேசுபவர்களுக்கு கிடைக்கும்.

என்ன தான் உரிமையோடு நினைத்துப் பழகினாலும் சில நேரங்களில் நீ யாரோ நான் யாரோ என்று உணர வைத்து விடுகிறது சில உறவுகள். வேஷம் போடும் உறவுகளுக்கு நடுவில் உண்மையான பாசம் தோற்றுத்தான் போகிறது. மானங்கெட்ட மனசுக்கு தான் தெரியவில்லை அது பாசம் அல்ல வேஷம் என்று படிப்பு கற்று தருவதை விட சிலரது நடிப்பு சிறப்பாக கற்று தரும் வாழ்க்கையை.

இந்தியாவில் எழுபத்தியொன்பது சதவிகிதத்தினர் (79%) சமூக வலைதளங்களில் விளம்பரங்களை நம்பி பொருட்கள் வாங்குவதாக இந்தி விளம்பர தர நிர்ணய கவுன்சில் நடத்திய ஆய்வில் தகவல்!

உலக விளம்பரத் துறையில் நீண்ட காலமாக நிலவிவரும் பொய்கள் என்னென்ன ?

1. அயோடின் உப்பு மட்டுமே சாப்பிட வேண்டும்.

2. காம்பிளான் குடித்தால் வளரலாம்.

3. ஹார்லிக்ஸ் ஆக்குமே பிள்ளைகளை ஸ்ட்ராங்கா, ஹைட்டா ஷார்ப்பா.

4. கிளினிக் பிளஸ் கூந்தலை ஆக்கிடுமே அடர்த்தியா.

5. பூஸ்ட் இஸ் த சீக்ரட் ஆஃப் மை எனர்ஜி.

இன்னொரு Advt. இல் ஒரு பாப்பா ரிசல்ட் அன்னிக்கு டென்ஷனா உட்கார்ந்து கம்ப்யூட்டர் பாத்துட்டு இருக்கும். அவங்க அம்மாகிட்ட மா இன்னிக்கு ரிசல்ட் மா நெட்டு வேற கனெக்ட் ஆக மாட்டேங்குது அப்படின்னு சொல்லும். அதுக்கு அவங்க அம்மா "குளிச்சிட்டு வந்து ஃபிரஷா பாரும்மா, நல்லதே நடக்கும்" ன்னு சொல்லுவாங்க சரின்னு அந்த பொண்ணும் குளிச்சிட்டு வரும். வந்து ரிசல்ட் செக் பண்ணா ஸ்டேட் பர்ஸ்ட் வாங்கியிருக்கும் இதிலிருந்து நமக்கு என்ன சொல்ல வர்றாங்க ? இந்த சோப்பு போட்டு குளிச்சா கனெக்ட் ஆகாத நெட்டு உடனே கனெக்ட் ஆகுமா ? இல்ல ஸ்டேட் பஸ்ட் வாங்குவோமா ? இந்த வித்தை அன்னைக்கே தெரிஞ்சிருந்தா பத்து வாட்டி இந்த சோப்பு போட்டு குளிச்சிட்டு போயி ரிசல்ட் பார்த்திருப்பேனேடா!!!

வீட்டில் இருக்கும் தொலைக்காட்சி பெட்டிகளில் ஓடும் பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரங்களினால் ஒருவர் நம்மை எளிமையாக ஏமாற்ற முடியுமென்றால் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சென்று நாம் கல்வி பயில்வதால் என்ன பயன் ????

பிறக்கும்போது தனியாக பிறந்த நாம் இறக்கும்போது ஏன் அன்பான உள்ளங்களிற்காக ஏங்குகிறோம் என்று தெரியவில்லை. பல பொய்யான உறவுகளிடம் உண்மையாகவும் உண்மையான உயிர்களிடம் போலியாகவும் நடிக்கிறது இங்கு மனிதம். வாழ்க்கை என்றால் எதுவென எனக்குள் வாதாடிப்பார்த்தேன். பல குழப்பங்கள் என்னுள்... வாழ்க்கை ஒரு நாடக மேடையா ? இன்பமான துன்பமா ? கனவா காவியமா ? போட்டி பரீட்சையா ? உணர்வுகளின் கூட்டமா ? உறவுகளின் தளமா ? ஏராளமான வினாக்கள். எது எப்படி என்றாயினும் இப்படியும் மனிதர்களா என்கிறது என் மனம். சுற்றியுள்ள மனிதர்களோ சுயநலவாதிகள். சூன்யமாய் வாழ்க்கையை சிதைப்பவர்கள் என்றுணரவைத்தது வாழ்க்கை உள்ளொன்று பாசம் வெளியினில் வேஷம். யாரைதான் நம்புவதடா இவ்வுலகில் ???

பொய் மனித இனத்தால் மிக மிகச் சாதாரணமாக செய்யப்படும் தீமை. பொய் சொல்வது வாழ்க்கையில் இன்றியமையாதது என்ற அளவிற்கு போய்விட்டது. வியாபாரத்தில் வாக்குறுதியை காப்பாற்றுவதில் தன்னை மிகைப்படுத்திக் கொள்வதில், ஆற்ற வேண்டிய காரியத்தில் பொய்கள் தாராளமாக பேசப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "உண்மை வாசற்படியைத் தாண்டுவதற்குள் பொய் ஊரைச்சுற்றி வந்துவிடும்" என்று எவ்வளவுதான் பொய் ஊரையும்

உலகத்தையும் சுற்றி வந்தாலும் கடைசியில் ஒருநாள் அது பொய் என்பது தெரிந்துவிடும். இறுதியிலே பொய், 'உண்மை' என்றே சாதிக்கப்பட்டு வெற்றி பெற்றதாக நீங்கள் வரலாறே கேட்டிருக்க முடியாது. காலம்தான் வித்தியாசம். சில பொய்கள் ஆறு மணி நேரத்திலேயே வெளியாகிவிடும்; சில ஆறு நாள்; சில ஆறு வாரம்; சில ஆறு மாதம்; சில ஆறு வருஷம். ஆனால், ஆயுள் காலத்திற்குள்ளாக, நாம் சொன்ன பொய் நம்மையே வந்து திருப்பித் தாக்கும் என்பதனை வரலாறு காட்டுகிறது.

வடமொழியில், 'சத்யமேவ ஜெயதே' என்கிறார்கள். அந்த, 'சத்யமேவ ஜெயதே' என்பதை, 'உண்மையே வெல்லும்' என்று தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார்கள். மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலேயும் நேர்மையாக நடப்பதற்குப் பெயர்தான் சத்தியம் என்பதாகும். அந்தச் சத்தியம், இந்த மூன்றும் சேர்ந்து நீதி தவறாமல் நடப்பதாகும். புராண இதிகாசக் கதைகளிலே கூட, 'மனோ வாக்குக் காயங்களாலே அவன் நியாயமாக நடந்தான்' என்றுதான் வரும். வெறும் வார்த்தையாலே மட்டும் நாணயமாக இருந்தால் போதாது; உடம்பும் நாணயமாக இருக்க வேண்டும்; மனதும் நாணயமாக இருக்க வேண்டும். இம்மூன்றாலேயும் நாணயமாக இருக்கும் ஒரு மனிதனை உலகம் மதிக்கும் என்பதற்குக் காந்தியடிகள் ஒரு உதாரணம்.

'அரிது அரிது, மானிடராய் பிறப்பது அரிது. அதனினும் அரிது கூன், குருடு, செவிடு இன்றி பிறத்தல் அரிது.' – ஔவையார். அப்படிப்பட்ட அரிய பிறவியை எடுத்துள்ள நாம் அதை எப்படி நமக்கும், பிறருக்கும் பயனுள்ளதாக இருக்கும்படி அமைத்துக்கொள்வது என்பது மிகவும் முக்கியம். இதற்கு தேவை நல்ல உடல் நலமும், மனநலமும்.

நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரே ஒரு நியாயம் பொய் சொல்லாமல் இருப்பது. எல்லாவற்றிலும் உண்மையே பேசுவது என்ற முடிவு இந்தப் பொய்யினால் விளைகிற துன்பங்கள்தான், பஞ்சமா பாதகங்களிலேயே மிகப்பெரிய பாதகமாக முடிகின்ற துன்பமாகும்.

"Luxury and Lies have huge maintenance costs. But... Truth and Simplicity are self maintained without any cost."

''பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி'' – ஓம் நமசிவாய போற்றி.

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு,
சூளைமேடு, சென்னை–600094.
போன் : 91 44 4724882

அன்புடையீர் வணக்கம்.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா கடந்த 08–01–2023 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தலைமையேற்று வாழ்த்துரை வழங்கிய கார்குல வள்ளல் உயர்திரு. S. வெங்கடேசன் பிள்ளை கார்காத்தார் ஒப்புரவு மாத இதழை இன்னும் பொலிவுடனும் வலிவுடனும் நடத்துவதற்கு ஏதுவாக ரூ. இரண்டு லட்சமும் இதுவரையிலும் கார்காத்தார் ஒப்புரவு வாங்காத நமது கார்குலத்தை சேர்ந்த குறிப்பாக கிராம பகுதிகளில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு ஓர் ஆண்டுக்கு சந்தாதொகையினை ரூ. 1½ லட்சம் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள்.

எனவே மாநில இணைப்பு சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் சுமார் 10 நபர்களை தேர்ந்தெடுத்து கீழ்கண்டவாறு தகவலை அனுப்ப வேண்டுகிறோம்.

பெயர் :
முகவரி :
பின்கோடு :
செல்போன் :

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்

வருந்துகிறோம்

நூற்றாண்டுவிழா கண்ட சென்னை சங்கத்திற்கு சொந்தமான ஐந்தரை கிரவுண்டு இடம் சூளைமேட்டில் அமையக் காரணமாக இருந்த பெருமைக்குரிய S.T. பிள்ளை என அன்பொழுக அழைக்கப் பெற்றவரும், 12 ஆண்டுகளுக்கும் மேலாக, சென்னை சங்கச் செயலராக பொறுப்பேற்று பணிசெய்தவரும் ஆகிய, திரு. S. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் 30.03.2023 வியாழனன்று பிற்பகல் சென்னையில், இறைவனடி சேர்ந்தார்கள்.

தன் சொந்த ஊரான புதுவிளாகத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு இருமுறை கும்பாபிஷேகம் செய்துள்ளார். நம் குல எளிய மக்களுக்கு கல்வி உதவி தொகை மற்றும் திருமணங்களுக்கு உதவி புரிந்துள்ளார். தில்லை நடராசப்பெருமான் திருக்கோயில் குடமுழுக்கில் பெரும் பங்காற்றியவர், ஆன்மிக பணியிலும், கார்குல பணியிலும் சிறப்பாக செயல்பட்டவர். அவரது ஆன்மா இறைவன் திருவடியில் சங்கமிக்க சென்னை கார்காத்தார் சங்கம் பிரார்த்தனை செய்கிறது.

சொத்துப் பரிமாற்றச் சட்டம் 1882

TRANSFER OF PROPERTY ACT 1882

மேலையூர் ச.அன்பழகன் 98413 73184

சொத்து பரிமாற்றம் என்பது ஒரு அசையா சொத்தினை விலைக்கு வாங்கும் கிரையம் மட்டும் தான் என்று பலர் தவறாக நினைப்பார்கள். அடை மானம், உடன்படிக்கைகள் கிரையம் தான செட்டில்மெண்ட் போன்ற பல விதமான சொத்து பரிமாற்றங்களும் ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராபர்டி என்னும் சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 ன் கீழ் வரும். இந்த சொத்து பரிமாற்றச் சட்டம் TRANSFER OF PROPERTY ACT 1882 என்பது 8 அத்தியாயங்களையும் 137 பிரிவுகளையும் ஒரு அட்டவணையையும் கொண்ட ஒரு பெரிய சட்டம். இந்த ஒரு கட்டுரையிலேயே அந்த சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் பார்த்து விட முடியாது. சில பிரிவுகள் / அம்சங்கள் பற்றி ஏற்கனவே வேறு சந்தர்ப்பங்களில் / கட்டுரைகளில் பார்த்திருப் போம். இந்தக் கட்டுரையில் சில முக்கிய அம்சங்களைப் பார்ப்போம் இதில் சொல்லப்படாதவற்றை இனி வரும் காலங்களில் பார்ப்போம்.

சொத்து என்றால் என்ன ?

சொத்து பரிமாற்றச் சட்டம் பெயரில் இருப்பது போல் இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று சொத்து. இன்னொன்று பரிமாற்றம். இந்த இரண்டையும் முதலில் பார்ப்போம்.

ப்ராபர்டி என்னும் சொத்தினை அசையா சொத்து மற்றும் அசையும் சொத்து என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. அசையா சொத்து : நிலத்தில் நிற்கும் மரம் , வளரும் பயிர் மற்றும் விளையும் புல் போன்றவை தவிர

2. அசையும் சொத்து :

சட்டத்தின் விளக்கம், "அசையாச் சொத்தில் நிற்கும் மரம், வளரும் பயிர்கள் அல்லது புல் ஆகியவை இல்லை" என்று கூறுகிறது. பிரிவு 3 (26), பொது உட்பிரிவு சட்டம், 1897, வரையறுக்கிறது, "அசையாச் சொத்து" என்பது நிலம், நிலத்திலிருந்து எழும் நன்மைகள் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட விஷயங்கள் அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எதையும் நிரந்தரமாக இணைத்தல் ஆகியவை அடங்கும். மேலும், பதிவு சட்டம், 1908, 2 (6)

"அசையாச் சொத்து" என்பது நிலம், கட்டிடங்கள், பரம்பரை கொடுப்பனவுகள், வழிகளுக்கான உரிமைகள்,

பரிமாற்ற வகைகள்

1882 ஆம் ஆண்டின் சொத்து பரிமாற்றச் சட்டத்தின் 5 வது பிரிவு வரையறுக்கப்படுகிறது, அதன்படி சொத்து ஒரு உயிருள்ள நபரால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குஅன்றைய தேதியில் அல்லது எதிர்கால காலங்களில் வழங்கப்படும். எதிர்கால சொத்துகளை பரிமாற்றம் செய்ய இயலாது. சொத்து பரிமாற்றம் செய்பவரைப் போலவே சொத்தினை பரிமாற்றம் பெறுபவரும் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும். அவ்வாறு பெறுபவர் வயது வராத மைனராகவோ புத்தி ஸ்வாதீனம் இல்லாதவராகவோ அல்லது தாயின் கருவில் உள்ள குழந்தையாகவோ கூட இருக்கலாம். பலவகையான பரிமாற்றங்கள் வருமாறு ;–

கிரையம் – இது ஒரு வகைப் பரிமாற்றம் இதில் பரிமாற்றம் செய்பவர் பதிலுக்கு பணமாகப் பெறுவார்.

அடைமானம் – இது சொத்தின் மீது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கான பரிமாற்றம் அந்த குறிப்பிட்ட காலத்துக்கு வட்டி செலுத்த வேண்டும்.

குத்தகை – இதில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அசையா சொத்தினை அனுபவிக்கும் உரிமையை பரிமாற்றம் பெற்றவர் பெறுவார்.

பரிமாற்றம் – இதுவும் கிரையம் போன்ற ஒரு பரிமாற்றம் தான். ஆனால் இதில் பரிமாற்றம் பெறுபவர் பதிலுக்குப் பணமாகக் கொடுக்காமல் வேறு அசையா சொத்தினைக் கொடுப்பார்.

தானம் / பரிசு – இதிலும் கிரையம் போல் அசையா சொத்தின் உரிமை இன்னொருவருக்கு மாறுகிறது. ஆனால் அதற்கு பதிலாக அவர் பணமோ அல்லது வேறு அசையா சொத்தோ கொடுக்க வேண்டாம். முற்றிலும் இனாமாக தானமாகக் கொடுக்கப்படுவது.

54. கிரையப் பத்திரம் வரையறை – "Sale" defined

சொத்து பரிமாற்றம் பற்றிக் கூறும் சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 பிரிவு 54 ல் சேல் என்னும் கிரையம் என்றால் என்ன என்பது வரையறுக்கப்படுகிறது. அதன்படி கிரையம் என்பது பணம் கொடுத்ததற்கு அல்லது பாதி கொடுத்து மீதி கொடுப்பதாக உறுதி கூறிய நிலையில் அந்தப் பணத்துக்கு பதிலாக அச்சொத்தின் உரிமையை மாற்றிக் கொடுப்பதாகும் .

"Sale" is a transfer of ownership in exchange for a price paid or promised or part-paid and part-promised.

Sale how made : Such transfer, in the case of tangible immovable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument.

In the case of tangible immovable property of a value less than one hundred rupees, such transfer may be made either by a registered instrument or by delivery of the property.

Delivery of tangible immovable property takes place when the seller places the buyer, or such person as he directs, in possession of the property.

பரிமாற்றம் ஆகாத அசையா சொத்து நடவடிகைகள்

1. பாகப் பிரிவினை –

சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் போன்ற இரத்தத் தொடர்புள்ள உறவினர்கள் தங்கள் சொத்துக்களை தங்களுக்குள் பிரித்துக் கொள்வது பாகப் பிரிவினை என்று அழைக்கப்படுகிறது. அது சொத்து பரிமாற்றமாக இருக்க முடியாது, ஏனெனில் அந்த சொத்து ஏற்கனவே அவர்கள் வசம் இருந்ததுதான் புதிய சொத்து எதுவும் உருவாக்கப்படவில்லை. பாகப் பிரிவினையில். முன்னதாக ஒருவருக்கு உரிய பங்கு / பாகம் அவரது குறிப்பிட்ட பங்கு, இப்போது அவருக்கே பிரிக்கப்பட்டுள்ளது.

2. விடுதலை கொடுத்தல்

இங்கே, மாற்றுவதற்கு எதுவும் இல்லை, ஏனென்றால் இதில், அந்த சொத்தின் உரிமையாளராக இருந்த வாரிசு, அவர் அந்த சொத்தை தனக்கு வேண்டிய நபருக்கு தியாகம் செய்தார், இடமாற்றம் செய்தவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்கலாம்

3. சரணடைதல்

ஒரு சொத்து பரிமாற்றக்காரருக்கு வயது வராத மைனருடன் சில சொத்துக்களை மாற்றுவதற்கான ஒப்பந்தம் உள்ளது. ஆனால், மைனரின் பாதுகாவலருக்கு வேறொரு நபருடன் ஒரு நிபந்தனை இருந்தால், அது சொத்து பரிமாற்றமாக இருக்காது.

4. வசதியுரிமை EASEMENT

ஒரு ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமையை உருவாக்குவது பரிமாற்றம் ஆகாது

5. உயில்

இது உயிலை எழுதியவர் / உருவாக்கியவரின் மரணத்திலிருந்து வருகிறது. பரிமாற்றம் என்பதன் வரையறைப்படி அது ஒரு உயிருள்ள நபரால் எதிர்காலத்துக்காக உருவாக்கப்படுவது அதனால் அது பரிமாற்றத்தின் வரையறையில் வராது.

6. சமரசம் / சமாதானம்

இது ஒவ்வொரு வழக்கின் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் பொறுத்தது. இது மாற்றுவதற்கான தொகையாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்.

7. குடும்ப ஏற்பாடு / தீர்வு–

எந்தவொரு குடும்பப் பிரச்சினையும் அவர்களின் சொத்துக்களைப் பற்றி எழுகிறது, பின்னர் மூன்றாவது நபர் தலையிட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்போது அத்தகைய நடவடிக்கை சொத்து பரிமாற்ற வரையறைக்குள் வராது. பாகப் பிரிவினை போல் இதிலும் பங்கு பெறும் அனைவருக்கும் ஏற்கனவே அந்த சொத்தில் உரிமை இருக்கும்.

எப்போது ஒரு நபர் சொத்தினை பரிமாற்றம் கொடுக்கத் தகுதி உடையவராவார் ?

சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 பிரிவு 7ன் படி எப்போது ஒரு நபர் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அனுமதிக்கப்படுகிறாரோ அவர் அந்தச் சொத்தை மாற்றவும் அனுமதிக்கப்படுவார் , பின்னர் அது நடந்தபின்னர் அந்த சொத்தை முழுமையாக அனுபவிக்கவும் அனுமதிக்கப்படுவார். நடைமுறையில் இருக்கும் காலத்திற்கு சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படுவார். பரிமாற்றம் செய்பவர் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் தகுதி உடையவராகவும் நல்ல மன நிலை உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

பரிமாற்றத்தின் செயல்பாடு

சொத்து பரிமாற்றச் சட்டத்தின் பிரிவு 8 பல்வேறு வகையான சொத்துக்களை மாற்றுவதையும் அவை சம்பந்தப்பட்ட சட்ட சம்பவங்களையும் வழங்குகிறது. இதன் பொருள் என்னவென்றால், அனைத்து சட்டரீதியான சம்பவங்களுக்கும் உட்பட்டு, அந்த பரிமாற்றம் செய்பவர் தனது சொத்தை பயன்படுத்தக்கூடிய அனைத்து வட்டிகளுடனும் சொத்து பரிமாற்றம் பரிமாற்றக்காரருக்கு செல்கிறது.

எந்தவொரு சூழ்நிலையிலும், சொத்து நிலத்துடன் தொடர்புடையது அல்லது சொத்து வாடகைக்கு விடப்பட்டால், அந்த சொத்து பரி மாற்றம் செய்யப்பட்டவர் மற்றும் பரிமாற்றம் செய்பவர், ஆகிய இருவரும் அந்த பரிமாற்றம் நடந்தபின் அந்த சொத்தின் விளைவுகளைப் பற்றி ஒரு திட்டத்தை

உருவாக்க வேண்டும். அதன் பிறகு, எதிர்காலத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படாது மற்றும் சொத்து பணம் சம்பாதித்தால்தான் பரிமாற்றம் நடந்தபின் வருமானத்தை கணக்கிட முடியும்

எதிர் காலத்தில் வரக்கூடிய சொத்தினை பரிமாற்றம் செய்ய முடியுமா ?

சட்டபூர்வமாக, ஒரு மகன், தனது தந்தையின் சொத்தை வாரிசாகப் பெறுவான் என்று நம்புகிறான், அவனது தந்தை உயிருடன் இருக்கும் வரை, இந்தச் சொத்தின் வர இருக்கும் உரிமைகளை அவன் வேறு எந்த நபருக்கும் மாற்ற முடியாது. ஒரு நபர் தனது எதிர்காலத்தில் தனக்கு வர இருக்கும் சொத்தின் மீதான உரிமையை வேறொருவருக்கு மாற்றுவதாக உறுதியளித்தால், அந்த இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தம் செல்லாது. இருப்பினும், அவ்வாறு எதிர்காலத்தில் உங்களுக்கு வர இருக்கும் சொத்தினை மற்றவருக்குத் தானமாக பிரதி பலன் ஏதும் இல்லாமல் எழுதிக் கொடுத்தால் அது செல்லத் தக்கது ஆகும்.

மாற்றக் கூடிய மற்றும் மாற்ற இயலாத பரிமாற்றங்கள்

சந்தர்ப்ப சூழ் நிலைளுக்கும் பரிமாற்றம் செய்யும் சொத்துக்கும் ஏற்ப ஒரு அசையா சொத்தினை பரிமாற்றம் செய்யும்போது அத்தகைய பரிமாற்றங்களில் வேறு சில பலன் களும் சேரும்.

1. பரிமாற்றம் செய்யப்படும் அசையா சொத்து நிலமாக இருந்தால்

அ. அந்த நிலத்துடன் சேர்ந்த ஈஸ்மெண்ட் ரைட் எனப்படும் வசதியுரிமை

ஆ. அந்த பரிமாற்றத்துக்குப் பிறகு கிடைக்கும் வாடகை மற்றும் இதர லாபங்கள்

இ. அந்த நிலத்துடன் சேர்ந்துள்ள பொருட்கள் மரம் கட்டிடம் போன்றவை

2. பரிமாற்றம் செய்யப்படும் அசையா சொத்து வீடாக இருந்தால்

அ. அந்த வீட்டுக்கு உரிய ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமை

ஆ. அந்த பரிமாற்றத்துக்குப் பிறகு அந்த வீட்டிலிருந்து கிடைக்கும் வாடகை

இ. வீட்டில் உள்ள கதவுகள் ஜன்னல்கள் அவற்றில் பொருத்தப்பட்டுள்ள பூட்டுகள் அவற்றுக்கான சாவிகள்

ஈ. அந்த வீட்டில் நிரந்தரப் பயன்பாட்டுக்காக செய்து வைக்கப்பட்டுள்ள வசதிகள்

பரிமாற்றம் செய்யப்படும் சொத்து ஒரு கடன் அல்லது செயல்படத்தக்கூடிய பிற உரிமைகோரலாக இருந்தால், பத்திரங்கள் (அவை மற்ற கடன்கள் அல்லது இடமாற்றக்காரருக்கு மாற்றப்படாத உரிமைகோரல்களுக்காகவும் உள்ளன தவிர, பரிமாற்றத்திற்கு முன் பெறப்பட்ட வட்டி நிலுவைத் தொகை அல்ல. அசையாச் சொத்தை அடமானம் அல்லது அசையும் சொத்தின் உறுதிமொழி அல்லது பாதுகாக்கப்பட்ட கடனைத் தவிர வேறு எந்தவொரு கடனுக்கான உரிமைகோரலாக செயல்படக்கூடிய உரிமைகோரல் வரையறுக்கப்படுகிறது,

பரிமாற்றம் செய்ய இயலாத சொத்துகள்

சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 , இச்சட்டத்தின் விதி முறைகளின் கீழ் பரிமாற்றம் செய்ய முடியாத சொத்துகள் பற்றியும் கூறுகிறது அவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

அ. ஒரு சொத்திற்கு ஒரு வாரிசு– வெளிப்படையாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு, ஒரு உறவினரின் மரணம் குறித்த ஒரு வாரிசுரிமையைப் பெறுவதற்கான வாய்ப்பு அல்லது இதுபோன்ற வேறு ஏதேனும் மாற்ற முடியாத சாத்தியங்கள்.

ஆ. ஒரு நிபந்தனையை மீறிய பிறகு அதற்கான திரும்ப நுழையும் உரிமையை அதன் மூலம் பாதிக்கப்பட்ட சொத்தின் உரிமையாளரைத் தவிர வேறு யாருக்கும் மாற்ற முடியாது.

இ. ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமையை அதுவரை அனுபவித்து வந்த ஆதிக்க பாரப்பரியத்திலிருந்து மாற்ற முடியாது.

ஈ. ஒரு சொத்தின் மீது அதன் உரிமையாளருக்கு தனிப்பட்ட முறையில் உள்ள அதன் மீதான ஆர்வத்தை அவரால் மாற்ற முடியாது.

உ. எதிர்கால பராமரிப்புக்கான உரிமை, பாதுகாக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட எந்த வகையிலும் மாற்ற முடியாது.

ஊ. ஒருவர் மீது வழக்கு தொடர உள்ள உரிமையை மாற்ற முடியாது.

எ. ஒரு பொது அலுவலகத்தை மாற்ற முடியாது, அதே போல் ஒரு பொது அதிகாரியின் சம்பளமும், அவர் ஏற்கனவே பெற்றிருந்தாலோ அல்லது பெற வேண்டி இருந்தாலோ அல்லது அதனையும் பரிமாற்ற முடியாது.

ஏ. இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் அரசாங்கத்தின் சிவில் ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித்தொகை மற்றும் அரசியல் ஓய்வூதியங்களை மாற்ற முடியாது.

ஐ. கீழ்க்கண்டவையும் மாற்ற முடியாதவை யாகும்

1) இதன் மூலம் பாதிக்கப்படும் ஆர்வத்தின் தன்மையை எதிர்ப்பதால், அல்லது

(2) இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 (1872 இல் 9) இன் பிரிவு 23 இன் அர்த்தத்திற்குள் வரும் ஒரு சட்டவிரோதமான பொருள் அல்லது

(3) இடமாற்றம் செய்ய சட்டப்பூர்வமாக தகுதியற்ற ஒரு நபருக்கு. இந்த பிரிவில் எதுவும் குத்தகைதாரருக்கு ஆக்கிரமிக்க உரிமை இல்லாத உரிமையை கொண்டிருப்பதாக அங்கீகரிக்க கருதப்படாது,

அங்கீகரிக்கப்படாத நபரால் பரிமாற்றம்

ஒரு அசையா சொத்தினை மாற்றம் செய்ய உரிமை இல்லாத ஒரு நபர் அந்த சொத்தினை பரிமாற்றம் செய்ய முடியாது. அப்படி அவரால் செய்யப்பட்ட ஒரு பரிமாற்றம் அங்கீகரிக்கப்படாத நபரால் செய்யப்பட்ட பரிமாற்றமாகக் கூறப்படும்.

பிரிவு 43– அங்கீகரிக்கப்படாத நபர்களால் பரிமாற்றம் என்பது, சில அசையாச் சொத்துகளை மாற்றுவதற்கு தனக்கு அதிகாரம் இருப்பதாக யாரோ ஒருவர் மோசடியாகக் காட்டுகிறார், மேலும் அத்தகைய பரிமாற்றத்தை பரிசீலிப்பதற்காக அத்தகைய சொத்தை தகுந்த விலைக்கு விற்பதாக அறிவிக்கிறார்.

இந்தப் பிரிவு அனுசரிக்கப்பட கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும்

" சொத்தினை பரி மாற்றம் செய்து தருவதாகக் கூறியவருக்கு ஏமாற்றும் நோக்கம் இருக்க வேண்டும்

" அவ்வாறு பரிமாற்றம் செய்வதாகச் சொன்னவர் அந்த சொத்தின் உண்மையான உரிமையாளராக இருக்கக் கூடாது

" அந்த பரிமாற்றத்தில் பரிமாற்றம் பெறுபவர் பரிமாற்றம் தருவதாகச் சொன்னவர் கூறிய பொய்யான தகவல்களை உண்மை என்று நம்பி செயல்பட்டிருக்க வேண்டும்.

" அந்தப் பரிமாற்றத்துக்குபிரதிபலனாக பணம் கொடுக்கப்படுவதாக இருக்க வேண்டும்

" யாரோ ஒருவர் மாற்றுவதாகக் கூறிய சொத்தில் பின்னர் அவர் சிறிது உரிமை பெறக் கூடியதாக இருக்க வேண்டும் பெறுகிறது.

" அந்த பரிமாற்ற ஒப்பந்தம் இன்னும் நீடிக்கவேண்டும்

அசையா சொத்து பரிமாற்றம் செய்யப்படத் தேவையான அம்சங்கள்

ஒரு அசையா சொத்து இன்னொருவருக்கு பரிமாற்றம் செய்யப்பட வேண்டுமானால் கீழ்க் கண்ட அம்சங்கள் நிறை வேற்றப்பட வேண்டும்

" இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உயிருள்ள நபர்களிடையே சொத்து பரிமாற்றம் நடை பெற வேண்டும்

" பரிமாற்றம் செய்யப்படும் சொத்து மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும்

" பரிமாற்றம் செய்பவர் பரிமாற்றம் செய்யக் கூடிய தகுதி உடையவராகவும் ஒரு வேளை பரிமாற்றம் செய்யும் சொத்துக்கு அவர் உரிமையாளராக இல்லமல் இருந்தால் அந்த சொத்தினை பரிமாற்றம் செய்ய அங்கீகாரம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்

" சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 ல் கூறப்பட்டுள்ள வகையில் பரிமாற்றம் நடை பெற வேண்டும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சான்றோப்பங்களும் பதிவும் செய்யப்பட வேண்டும்

" பரிமாற்றம் நிலைத்திருக்கும் தன்மைக்கான விதி முறையை பாதிப்பதாக இருக்கக் கூடாது

" பரிமாற்றம் நிபந்தனைக்கு உட்பட்டு இருந்தால் அந்தநிபந்தனை சட்டவிரோதமானதாகவோ செய்ய முடியாததாகவோ நெறியற்றதாகவோ ஒழுக்கம் கெட்டதாகவோ மக்கள் கொள்கைக்கு எதிரானதாகவோ இருக்கக் கூடாது.

உடல் உறுப்புக்கான கடிகாரம்.

நம்முடைய உடலில் உள்ள முக்கிய 12 உறுப்புக்கள் ஒரு நாளைக்கு 2 மணி நேரத்துக்கு அதிகமாக வேலை செய்து வருகிறது.

நேரம்	இயக்கம்
அதிகாலை – 3 to 5	நுரையீரலுக்கான நேரம்
காலை – 5 to 7	பெருங்குடலுக்கான நேரம்
காலை – 7 to 9	வயிற்றுக்கான நேரம்
காலை – 9 to 11	மண்ணீரலுக்கான நேரம்
காலை – 11 to 1	இதயத்திற்கான நேரம்
பிற்பகல் – 1 to 3	சிறுகுடலுக்கான நேரம்
பிற்பகல் – 3 to 5	சிறுநீர்பைக்கான நேரம்
மாலை 5 to 7	சிறுநீரகங்களுக்கான நேரம்
இரவு – 7 to 9	பெரிகார்டியத்திற்கான நேரம்
இரவு – 9 to 11	டீரிப்பிள் ஹீட்டர்கான நேரம்
இரவு – 11 to 1	பித்தப்பைக்கான நேரம்
இரவு – 1 to 3	கல்லீரலுக்கான நேரம்

பாபு (எ) ராமசெல்வம், விசலூர்.
9750806991

நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

12. உத்திரம்

"உத்திரத்தில் ஓர் பிள்ளையும், ஊர் ஓரம் ஒரு காணியும்"; என்ற பழமொழி மூலம் உத்திர நட்சத்திரத்தை உயர்வாகக் கூறுவார்கள். உத்திராட நட்சத்திரத்துக்கும் இந்தப் பழமொழி வழக்கில் உள்ளது. பஞ்சாங்க முறையில் சந்திரன் புவியைச் சுற்றி வரும்போது, உத்திர நட்சத்திரக் கோணப் பிரிவுக்குள் இருக்கும் காலம், உத்திர நட்சத்திரத்துக்குரிய காலம் ஆகும். இராசிச் சக்கரத்தில், 12–வதாக வரும் இந்த நட்சத்திரத்தின் முதல் பாதம் சிம்ம இராசியிலும், 2, 3, 4– பாதங்கள் கன்னி இராசியிலும் இடம் பெறுகின்றன. "பிந்திய' சிவந்த நிறத்தது" என்னும் பொருளில் வடமொழியில் "பூர்வ பால்குனி என வழங்கப்படுகிறது. இதன் அடையாளக் குறியீடு கட்டிலின் நான்கு கால்கள் ஆகும்.

உத்திர நட்சத்திரத்தின் கிரகாதிபதி சூரியன் ஆகும். இதன் அதிதேவதை சிவன், மிருகம் எருது, கணம் மனுஷம், பறவை சில்வண்டு, விருட்சம் அலரி, என்பவையாகும். உத்திர நட்சத்திரக்காரர்கள் பிறந்த வீட்டில் செல்வ வளம் இருந்து கொண்டே இருக்கும். ஏனெனில் மகாலட்சுமித் தாயாரின் அவதார நட்சத்திரம் ஆகும். சிவன், விஷ்ணுவின் அம்சமான சுவாமி ஐயப்பனின் அவதாரமும் உத்திரமேயாகும்.

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் உறவுகளையும், நட்புகளையும் நேசிப்பவர்களாக இருப்பார்கள். இறையுணர்வு மிக்கவர்கள். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். கற்ற வித்தையின் மூலம் தனம் சேரும் பேறு பெற்றவர்கள். சுகபோக வாழ்க்கையில் பிரியம் இருக்கும். மனத்திட்பமும் தைரியமும் கொண்டவர்கள். உண்மையையே பேசுபவர்கள். தலைமைக் குணம் கொண்டவர்கள். திறந்த மனத்துடன் தூய்மையான எண்ணங்கள் கொண்டிருப்பார்கள். முன்கோபம் தோன்றி மறையும் உழைப்புடன் கூடியவர்கள். செல்வ வளம் மிக்க வாழ்க்கை அமையப் பெற்றவர்கள்.

உத்திர நட்சத்திரத்துக்குரிய விருட்சம் அலரி என்பதாகும். மக்கள் வழக்கில் அரளி எனப்படுகிறது. அலரியைத் தலமரமாகக் கொண்ட திருக்கரவீரம் உத்திர நட்சத்திரக்காரர்களுக்குப் பரிகாரத் தலமாக உள்ளது. கரவிரம் என்றால் பொன் அலரி எனப் பொருள்படும். இத்தலம் மக்கள் வழக்கில் கரையபுரம் என வழங்கப்படுகிறது. கோவில் திருவாரூர் – கும்பகோணம் சாலையில் வடகண்டம் என்னும் ஊரை அடுத்து வெட்டாற்றங்கரையில் உள்ளது. இறைவன் பெயர், கரவீரநாதர், பிரம்மபுரீசுவரர், இறைவி பெயர், பிரத்தியட்சமின்னம்மை. தேவார மூவரில் ஞானசம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.

தலவரலாறு :

முன்னொரு காலத்தில் தேவகன்னியர்கள் சிவனையும் பார்வதியையும், வணங்கி திருமண பாக்கியம் வேண்டவே, சிவபெருமான் காவிரியின் தென்கரையில் தானே லிங்கம் அமைத்துக்கொடுத்து, அதை அமாவாசை தினத்தில் தேவ கன்னியரை வழிபாடு செய்யக் கூறினார். தேவகன்னியர்களும் அவ்வாறு வழிபாடு செய்து பலன்களை அடைந்தனர், எனத் தலபுராணம் கூறுகிறது.

சிவபெருமான் தான் எழுந்தருளிவித்த சிவலிங்கத்தை தினமும் பூசை செய்ய கௌதம முனிவரை நியமித்தார். கௌதம முனிவரும் இத்தலத்தில் தவம் செய்து இறைவனின் அருள் வேண்டவே, இறைவனும் வேண்டும் வரம் கேள் எனக்கூறினார். கௌதம முனிவரும், தன்னை இத்தலத்தின் விருட்சமாக ஏற்று அருள் புரிய வேண்டினார். இறைவனும் அவ்வாறே வரமளித்தார்.

சிவபெருமானின் தரிசனம் வேண்டி கழுதை ஒன்று இத்தலத்தில் தவம் இருந்தது. தரிசனம் கிடைக்காத காரணத்தால் வருத்தமுற்ற கழுதை நாகூர் வரை சென்று கடலில் விழ எத்தனித்தது. அப்போது ஒரு பெரும் சப்தம் ஏற்பட்டதால், கழுதை திரும்பிப் பார்க்கையில் இறைவன் தரிசனம் தந்து மோட்சமும் அளித்தார். எனவேதான் சிவனின் எதிரில், கொடி மரமும் நாகூர் வரை வீடுகளும் இல்லை.

பிரார்த்தனை :

அமாவாசை நாட்களில் பெண்கள் கௌதம முனிவர் ஜீவ சமாதியில் உள்ள தலவிருட்சத்துக்கு தண்ணீர் ஊற்றிவிட்டுப்பின் பிரம்மபுரீசுவரரை வழிபாடு செய்கிறார்கள். இதனால் அடுத்த ஒரு வருடத்தில் திருமணம் நிச்சயமாகும் என்பது நம்பிக்கை.

இரவில் இவ்வூரில் தங்கி மறுநாள் இறைவனை வழிபாடு செய்வதால், எப்படிப்பட்ட துன்பங்களும் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம்.

பிரார்த்தனை நிறைவேறியதும் இறைவனுக்குப் புது வஸ்திரம் சாத்தி வழிபாடு செய்கின்றனர்.

இந்த தலத்தை வணங்குபவர்களுக்கு துயரம் இல்லை, துன்பம் நீங்கும், வினைகள் கழியும் என்றெல்லாம் ஞானசம்பந்தர் தனது திருப்பதிகத்தில்

பாடியுள்ளார். தீராத வெப்பு நோயால் அவதிப்பட்ட குறுநில மன்னன் ஒருவன் இத்திருத்தலத்தின் அனவரத தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப் பெற்றான். கழுதைக்கு அருள்பாலித்த திருநாள் உத்திர நட்சத்திரம் கூடிய நாளேயாகும்.

அலரி :

இறைவனுக்குகந்த மலர் எனப் போற்றப்படும் கணவிரம் எனப்படும் அலரி, அரளி என்றும் மக்கள் வழக்கில் உள்ளது. இதன் தாவரவியல் பெயர் Nerium odorum என்பதாகும். Apocyanaceae என்ற தாவரக்குடும்பத்தைச் சேர்ந்தது. பசுமை மாறாத இந்தப் புதர்ச் செடி (shrub) 5 மீட்டர் உயரம் வரை வளரும்.

தாவரத்தின் அனைத்துப் பகுதிகளும் நஞ்சாகும். எனவே வெளிப்பிரயோகத்துக்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். இலைகளின் சாறு வீக்கங்களுக்குப் பயன்படுகிறது. வேர்ப்பகுதி மிகவும் நஞ்சானது. வேரினை எடுத்து நீர் சேர்த்து அரைத்துக் கூழாக்கி மேல் பூச்சாகப் பூச இரத்த மூலக் கசிவு வெளிப்புறப் புண்கள், தொழுநோய் ஆகியவை குணமாகும். இரத்த கட்டியுள்ள இடங்களில் பூச நிவாரணம் அளிக்கும் இந்திய மருத்துவத்தில், கரவிரிய தைலம் (சக்ராதத்தா) என்ற தைலம் முறையாகத் தயாரிக்கப்பட்டு தோல்நோய்களுக்கு முக்கியமாகப் பயன்படுகிறது.

அலரி காற்றிலுள்ள நச்சு வாயுக்களை உறிஞ்சும் தன்மையும், தூசுகளை வடிகட்டும் திறனும் கொண்டது. எனவே அதிக போக்குவரத்து நிறைந்த சாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் வளர்க்க உகந்தது.

கோயில் நந்தவனங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் வளர்க்க அதிக அளவில் அழகான மலர்கள் ஆண்டுமுழுவதும் கிடைக்கும்.

உத்திர நட்சத்திரக்காரர்கள் திருக்கரவீரம் திருத்தலத்தைப் பரிகாரத் தலமாக வணங்கிட நல்ல பலன்கள் கிடைக்கும். அலரியை வாய்ப்புள்ள இடங்களில் நடுவதும், அவைகளுக்கு நீர் ஊற்றி பராமரிப்பதும், வணங்குவதும் நலங்கள் விளைவிக்கும். மேலும் சுவாமி ஐயப்பன், மகாலட்சுமித் தாயார் வழிபாடும் சிறப்பான பலன்களை அளிக்கும்.

அடுத்த இதழில் ஹஸ்தம் நட்சத்திரம் பற்றிய விபரங்களைப் பார்க்கலாம்.

– (பயணிப்போம்)

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)

"QUALITY IS OUR LIFE"

‘காலமும், நோயற்ற வாழ்வும், அதற்கான உணவும்’.

பண்டைக்காலம் முதல் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த பருவகாலப் பிரிவுகளைக் காண்போம். தமிழர்கள் ஓர் ஆண்டை கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் என ஆறு பருவங்களாக பிரித்தனர்.

பண்டைத் தமிழ் மக்கள் மாறிமாறி வரும் பருவ காலங்களைக் காலத்தின் மாற்றங்களாக மட்டும் கருதாமல் மக்கள் வாழ்வியலுடனும், அவர்கள் வாழும் நிலத்துடனும் பிணைத்துப் பார்த்தார்கள். தமிழர் நிலப் பிரிவுகளான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலைபோன்றவற்றுக்குஉரித்தானபருவகாலங்களைப் பற்றித் தொல்காப்பியம் பேசுகிறது.

* முல்லை நிலத்துக்குக் கார் காலமும்;

* குறிஞ்சி நிலத்துக்கு கூதிர் காலமும், முன்பனிக்காலமும்;

* மருதத்துக்கும், நெய்தலுக்கும் எல்லாப் பருவகாலங்களும்,

* பாலை நிலத்துக்கு இளவேனில், முதுவேனில், முன்பனி ஆகிய காலங்களும் உரியவை ஆகும்.

இரண்டு மாதம் என்பது ஒரு பெரும்பொழுதாகும்.

கார்காலம் :- மழை மேகங்களால் சூழ்ந்த காற்று வீசும் காலம் ஆடி, ஆவணி மாதங்கள் ஆகும்.

உண்ண வேண்டிய உணவுகள் :– அரிசியை ஊற வைத்த உணவுகள் உடலுக்கு நல்லது.

கூதிர்காலம் :– குளிர் காற்று வீசும் காலம் புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் உண்ண வேண்டிய உணவுகள் :– பயறு வகைகள் உண்பது உடலுக்கு நல்லது.

முன் பனிக்காலம் :– விடியலில் பனி பெய்யும் காலம் கார்த்திகை, மார்கழி மாதங்கள். உண்ண வேண்டிய உணவுகள் :– எண்ணை சேர்க்காத வறுத்த உணவுகள் உடலுக்கு நல்லது. **பின்பனிக்காலம் :–** காலையில் பனி பெய்யும் காலம் தை, மாசி மாதங்கள். உண்ண வேண்டிய உணவுகள் :– வெல்லம் சேர்த்த உணவுகள் உடலுக்கு நல்லது. **இளவேனிற்காலம் :–** வசந்த காலம் பங்குனி, சித்திரை மாதங்கள். உண்ண வேண்டிய உணவுகள் :– காய்கள் சாப்பிடுவது உடலுக்கு நல்லது. **முதுவேனிற்காலம் :–** கோடை காலம் வைகாசி, ஆனி மாதங்கள். உண்ண வேண்டிய உணவுகள் :– பழங்கள் சாப்பிடுவது நல்லது.

காலத்திற்கு ஏற்றார் போல் உணவுகளை வகைப்படுத்தி வைத்தான் நம்மவன். காலசூழலுக்கு ஏற்றவாறே பண்டிகைகளும், உணவுகளும் நடைமுறையில் இருந்தது தற்போதைய காலகட்டத்தில் கால சூழல் சற்று மாறுபட்டு வருகிறது. பண்டிகைகள் புறந்தள்ளப்படுகிறது. விளை பொருட்கள் பெரும்பாலும் எல்லா காலங்களிலும் கிடைக்கிறது. மண் சார்ந்தும் சூழல் சார்ந்தும் வாழ்ந்த மனிதன் மருந்தும் சார்ந்தும் பயம் சார்ந்தும் வாழ ஆரம்பித்துவிட்டான்.

சொல்லி வைத்தார் போல் எல்லா மருத்துவர்களும் கோதுமை, ஓட்ஸ் சாப்பிட சொல்லுகிறார்கள். வியப்பின் உச்சம் எதுவெனில் எல்லா கடைகளிலும் கோதுமை, ஓட்ஸ் முதன்மை பொருளாக அடுக்கிவைக்கப்படுகிறது. இவ்வளவுநாள் இல்லாது கோதுமை, ஓட்ஸ், எப்படி என வியப்பதா? புறந்தள்ளுவதா? ஏற்பதா? குழப்பம் ஏற்படினும் பயம் வென்று விடுகிறது. உணவு என்பது கால சூழலை சேர்ந்ததாக இருக்க வேண்டும். கால சூழலுக்கு ஏற்றே ரத்த ஓட்டம், உணவு செரிமானம் நடைபெறுகிறது. கால சூழலுக்கு ஏற்றவாறு உடலின் வெப்பநிலை மாறுபடும் போது அதன் உள்ளும் புறமும் ரத்த ஓட்டம் வியர்வை மஜ்ஜை செயல்பாடுகள் அணுக்களின் உற்பத்தி அளவு இவை முற்றிலுமாக மாறுபடும். இப்படி மாறுபடக் கூடியவைகள் உணவு மற்றும் செயல்பாடுகள் இவற்றின் மூலமாக நாம் சரி செய்ய இயலும்.

உங்களைச் சுற்றி இருக்கும் பகுதியில் விளையக்கூடிய உணவுகளை தேடி உண்ண முயற்சி செய்து நோயற்ற வாழ்வை வாழுங்கள். நீங்கள் வாழும் பூமியில் விளையக்கூடியவை உங்கள் செரிமானத்திற்கு ஏற்றதாக உங்கள் ஆரோக்கியத்திற்கு பக்கபலன் சேர்க்கக் கூடியதாக இருக்கும்.

தற்போதைய காலகட்டத்தில் உண்ணும் உணவுடன் வேறு ஒன்றையும் நாம் கவனிக்க வேண்டியதாகிறது. நமது பூமி விவசாய பூமி காலையும், மாலையும், வேலை நிறைந்து சூழல் ஆனால் தற்போது உடல் உழைப்பற்ற சூழல் உருவாகி உள்ளது. நமது உணவுஉடல்உழைப்பிற்கானஉணவுஇதைபெரியதாக கவனிக்காமல் போனதே நோய்க்கான காரணம். மேலைநாடுகளில் உணவும் வரைமுறை இல்லை, நோயும் வரைமுறை இல்லை. வாழ்வும் வரைமுறை இல்லை அதில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர கடைப்பிடிக்க கூடாது.

உணவு முறைகளை கண்டறிதல் :– கலோரி

இல்லாத ஸ்வீட்னர் (சுகர் பேசன்ட் பயன்படுத்தும் சர்க்கரைக்கு பதிலான ஸ்வீட்நர்) இரைப்பையில் உள்ள பாக்டீரியா உள்ளிட்ட நுண்ணுயிரிகளை பாதிக்கிறது. இந்த நுண்ணுயிரிகளே நமது உடல் எடையை கட்டுக்குள் வைத்திருக்கிறது. மேலும், நாம் மகிழ்ச்சியாக உணரும் வகையிலான நரம்பியக் கடத்திகளை உற்பத்தி செய்வதும் இவைதான். பெரும்பாலான குளிர்பானங்கள் கலோரி இல்லாத ஸ்வீட்னர்களால் தயாரிக்கப்படுகிறது. இவை நம் குடல் நுண்ணுயிரிகளை பாதிக்கின்றன. மேலும், பழச்சாறு உள்ளிட்ட அதிகமாக சர்க்கரை அடங்கிய நீர்ம உணவுகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. இதற்கு ஓர் சிறந்த உதாரணம் உண்டு. உருளைக்கிழங்கு, ஸ்ட்ராபெர்ரி இவை இரண்டில் எது இனிப்பாக இருக்கும் என்று கேட்டால் அனைவரும் ஸ்ட்ராபெர்ரி என்ற கூறுவார்கள். ஆனால் இரண்டில் எதில் சர்க்கரை அதிகமாக உள்ளது? 100 கிராம் ஸ்ட்ராபெர்ரியில் 5% சர்க்கரை உள்ளது. ஆனால், 100 கிராம் உருளைக்கிழங்கில் 20% சர்க்கரை உள்ளது. ஸ்ட்ராபெர்ரியில் பழச்சாறு செய்தால் அதிலுள்ள சர்க்கரை கரைந்துவிடும். அதனால், நமது உடல் சீக்கிரமாகவே சர்க்கரையை உறிஞ்சிவிடும். ஆகவே, ஸ்ட்ராபெர்ரியை பழச்சாறாக அல்லாமல் அப்படியே சாப்பிடுவதே நல்லது. இதே விதி உருளைக்கிழங்குக்கும் பொருந்தும். இதுபோன்று உணவு அல்லாத மாற்று உணவுப்பொருட்களை நன்மை தீமை கண்டறிய வேண்டும். உணவு பொருள்களின் சத்துக்கள் கண்டறிந்து உண்ண வேண்டும்.

நாம் வாழும் பூமியில் விளையக்கூடிய உணவுப்பொருள்கள் பெரும்பாலும் இவ்வாறு கண்டறிய தேவையில்லை. அது உடலுக்கு ஏற்றதாகவே இருக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பது போல உணவின் அளவை சௌமானத்திற்கு தகுந்தவாறு எடுத்துக்கொள்ளவும் செயல்பாடுகள் என்பது உடலுக்கு தரும் உழைப்பு அல்லது உடற்பயிற்சி இவற்றின் மூலமாகவே ஆகும். உச்சி முதல் உள்ளங்கால் வரை உழைப்பை அல்லது உடற்பயிற்சியை கொடுக்கும் போது கால சூழலுக்கு ஏற்ற உணவை உண்ணும் போது 99 சதவீதம் அல்ல 100% நோயிலிருந்து தப்பிக்க இயலும். நோயற்ற வாழ்வு வாழ்வீர் அதுவே நிறைவு உற்ற செல்வமாகும்.

– பில்டெக் அருள்மொழி.

8883468333

நகர கார்காத்த வேளாளர் சங்கம்
சீர்காழி
பதிவு எண் : 102 / 2019

20-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர் வணக்கம்,

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **20-வது** மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **07-05-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் 1.00 மணி வரை** சீர்காழி, விளந்திட சமுத்திரம் கடைக்கண் **விநாயகநல்லூர் எஸ்டேட் திருமண மண்டபத்தில்** (சிதம்பரம் மெயின் ரோடு) தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்புவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ. 500/ஐ** விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **26-04-2023**-க்குள் அனுப்பிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் *Nagara Karkatha Velalar Sangam* என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

கல். சுகுந்தவனநாதன் பிள்ளை, தலைவர் : 9442083310
குண. அமுதன் பிள்ளை, செயலாளர் : 9842232500
சி. அகோரம் பிள்ளை, பொருளாளர் : 9486194225
இராம. முரளி பிள்ளை, நிறுவனர், சி.எம். ட்ரஸ்ட் : 9442085841

வங்கி விபரம்
தமிழ்நாடு மெர்க்கண்டைல் பாங்க் லிட்,
சிதம்பரம்.
Name : S. Prakasam
A/C, No. 312100050301165
IFSC Code : TMBL0000312

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
திரு. **S. பிரகாசம்,** *M.Com.,*
5, *R.N.* காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு,
கொள்ளிடம்–609102.
சீர்காழி தாலுக்கா.
செல் : *7395865318*

தொடர்புக்கான நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை



மணமகன் தேவை

பெயர்	செல்வி அ. மதுரநாயகி
படிப்பு	B.E. (E.E.E.)
வேலை	Vestas Wind Technologies India Pvt. Ltd., Sholinganallur, Chennai Rs. 6 Lakhs / PA
பிறந்த தேதி	06.08.1996
உயரம்	166 cm
நட்சத்திரம்	பரணி
கோத்திரம்	விழுப்பதரைய
பூர்வீகம்	T.V. புத்தூர்
தகப்பனார்	ச. அகிலநாயகம், கிளை மேலாளர் K.M.B.F. Ltd., விருத்தாசலம்
தாயார்	அ. வேதவள்ளி வையூர் (சிதம்பரம்)
முகவரி	109, பாரதியார் வீதி, பெரியார் நகர் (வடக்கு), விருத்தாசலம் – 606 001. கடலூர் மாவட்டம் Cell : 73739 09815

மணமகள் தேவை

பெயர் செல்வன் **S. ரவீன் குமார்**
படிப்பு M.Tech. VLSI
வேலை Senior Engineer (VLSI)
Multicoreware inc / Uhnder inc.
Rs. 19.5 Lakhs / PA
பிறந்த தேதி 21.11.1993
உயரம் 175cm
நட்சத்திரம் சதயம் 1ம் பாதம்
கோத்திரம் கனகராய
பூர்வீகம் திருநெல்வேலி
தகப்பனார் **A. சங்கர்,** Director of School Education (Retd.)
தாயார் **P. வசந்தி,** Headmistress, Govt. Hrs. Sec. School (Retd.)
முகவரி 28 & 29, VGN Highness,
Vikramditya Street,
Iyyappanthangal, Chennai - 600 056.
Cell : 86670 33721, 94447 48490, 78459 14635
E-mail : spvrk1956@gmail.com
விருப்பம் பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள
பொருத்தமான வரன்

பெயர் செல்வன் **ஜெ. திருமாவளவன்**
படிப்பு B.E.,
வேலை காட்வின் ஏஜென்சி
Rs. 6,00,000/PA
பிறந்த தேதி 29.05.1991
நட்சத்திரம் கேட்டை 1–ம் பாதம்
கோத்திரம் கருவாருட
பூர்வீகம் நாங்கூர்
தகப்பனார் **தி. ஜெயராமன்** (குட்டச்சர் ஓய்வு)
(ஒ.தி.அ. சீர்காழி)
தாயார் (லேட்) **வி. மணிமேகலா,** M.A., B.Ed.,
(பட்டதாரி ஆசிரியை)
(வாட்டார், மன்னார்குடி)
முகவரி 20, காமராஜ் நகர், தென்பாதி,
சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம்.
Cell : 86374 67345, 97861 92230
(W/Only) 86084 12435

மணமகன் / மணமகள் தேவை

பெயர் செல்வி **K. பிரியதர்ஷினி**
படிப்பு B.B.A., M.Sc. IT.
வேலை Azentio S/W Pvt. Ltd., Chennai
Rs. 4 Lakhs/PA
பிறந்த தேதி 09.02.1998
உயரம் 173cm
நட்சத்திரம் புணர்பூசம்
கோத்திரம் பங்களதரிய
பூர்வீகம் கீழ்நத்தம், சிதம்பரம்
தகப்பனார் **N. குமார்,** Driver (Own Auto) & Finance
தாயார் **K. கவிதா** (சீர்காழி)
முகவரி 34, S6 Flat, சிதம்பர விலாஸ் குடியிருப்பு,
வ.உ.சி. தெரு, சிதம்பரம் – **608 001.**
Cell : 95240 08407, 63692 64373
98494 72775

பெயர் செல்வி **கா. லெட்சுமிபிரியா**
படிப்பு B.Tech (Civil)
வேலை Software Engineer,
Chennai
பிறந்த தேதி 21.03.1997
உயரம் 163 cm
நட்சத்திரம் மகம்
கோத்திரம் சாத்துக்குட
பூர்வீகம் மணல்மேடு – இராதாநல்லூர்
தகப்பனார் **க. கார்த்திகேயன்** (TNSTC ஓய்வு)
தாயார் **கா. லதா** (கீழையூர்)
முகவரி 7/295C, முருகையா நகர்,
புளியம்பேட்டை, அம்மாசத்திரம் (PO),
திருவிடைமருதூர் (TK)
கும்பகோணம் – **612 103.**
Cell : 94866 48536 (W)
79043 80537
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வன் **G. கபிலன்**
படிப்பு Diploma (ECE)
வேலை Electrical Work & Guru Agencies
Rs. 30,000/PM
பிறந்த தேதி 11.09.1994
உயரம் 5' - 8"
நட்சத்திரம் அனுஷம்
கோத்திரம் குழவுட
பூர்வீகம் மூலப்படுகை
தகப்பனார் **M. கோவிந்தராஜ்**
தாயார் **G. ஜெயா,** முளப்பாக்கம்
முகவரி 2/75, மெயின் ரோடு, முளப்பாக்கம்,
மன்னம்பந்தல் அஞ்சல் – **609 305.**
மயிலாடுதுறை
Cell : 90253 37261
(W) 90806 21857
விருப்பம் குடும்பத்திற்கு ஏற்ற வரன்

மணமகன் தேவை

பெயர்	செல்வி S. ரேவதி
படிப்பு	B.Com.,
வேலை	Accounts, Smart Super Market
பிறந்த தேதி	05.04.2000
உயரம்	140 cm
நட்சத்திரம்	அஸ்வினி
கோத்திரம்	வங்காரமுடையான்
பூர்வீகம்	இடைக்கட்டு, ஜெயங்கொண்டம்
தகப்பனார்	G. சுப்ரமணியன் (NLC)
தாயார்	S. விஜயா
முகவரி	17-A, B Type, Block 26, Cable Street, Neyveli - 607 803. Cell : 80984 62360, 90929 42360
விருப்பம்	பொருத்தமான வரன்

பெயர்	செல்வி E. ராஜலெட்சுமி
படிப்பு	B.Tech., M.B.A.,
வேலை	M.S.C. Technology, Ambattur Rs. 55,000/-
பிறந்த தேதி	14.12.1995
உயரம்	155 cm
நட்சத்திரம்	பூரம் 4ம்பாதம்
கோத்திரம்	வில்வராய
தகப்பனார்	K. இளங்கோவன்
தாயார்	E. சித்ரா
முகவரி	52/105, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம் – 606 001. கடலூர் மாவட்டம் Cell : 96267 92918, 97866 87358

பெயர்	S. சக்தி
படிப்பு	M.Sc., Costume Design & Fashion
வேலை	Fashion Designer
பிறந்த தேதி	18.05.1994
உயரம்	5' - 2"
நட்சத்திரம்	சதயம்
கோத்திரம்	சாத்தனுட
பூர்வீகம்	முடிகண்டநல்லூர்
தகப்பனார்	K. சிவக்குமார் விவசாயம், ரைஸ் மில்
தாயார்	S. சாந்தி (சாத்தமங்லம்)
முகவரி	70, 2வது மெயின் ரோடு, கனக சபை நகர், சிதம்பரம் Cell : 99659 35660
விருப்பம்	நல்ல வேலை, நல்ல குணம், சென்னையில் நிரந்தர பணி

பெயர்	செல்வி B. திவ்யா
படிப்பு	B.E. (CS)
வேலை	Software Engineer, Accenture, Chennai
பிறந்த தேதி	14.12.1993
நட்சத்திரம்	மூலம் 2ம் பாதம்
கோத்திரம்	தென்னவராய
பூர்வீகம்	சாத்துக்கூடல்
தகப்பனார்	S. பாலகிருஷ்ணன் பிள்ளை விவசாயம்
தாயார்	B. சுசிலா, இல்லத்தரசி ஏசனூர்
முகவரி	வடக்கு தெரு, மேல்பாதி, சாத்துக்கூடல் – 606 110. விருத்தாசலம் வட்டம் Cell : 99529 20903 81487 67273 (Whatsapp)
விருப்பம்	பொருத்தமான வரன்

மணமகள் தேவை

பெயர் செல்வன் T. கார்த்திக்
படிப்பு B.E.,
வேலை IT Analyst, TCS, Chennai
பிறந்த தேதி 30.12.1992
உயரம் 170 cm
நட்சத்திரம் பூரட்டாதி
கோத்திரம் பூதனுடை

தகப்பனார் S. தியாகராஜன்
கார்த்திக் பைனான்ஸ், திண்டுக்கல்
தாயார் T. சித்ரா
முகவரி L8, R.M. Colony,
3வது குறுக்குத் தெரு,
திண்டுக்கல் – 624 001.
Cell : 97506 75797, 99652 91838
விருப்பம் பணியில் உள்ள வரன்

பெயர் செல்வன் M. வசந்தன்
படிப்பு B.E. Mech. Eng.
வேலை SEOYON-E HWA (Hyundai Group)
பிறந்த தேதி 28.08.1995
உயரம் 183 cm
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் இருக்கை

தகப்பனார் G. முத்துகுமரன் - மேலையூர்
தாயார் M. சித்ரா - கன்னியாகுடி
முகவரி கீழத் தெரு, பூம்புகார் மேலையூர்,
சீர்காழி தாலுக்கா
Cell : 94451 76746, 77088 99648
விருப்பம் வேலையில் உள்ள வரன்

பெயர் செல்வன் R. ARUL SELVAM
படிப்பு B.E.,
வேலை Deputy Manager
(Nidec Control Techniques)
Rs. 11.5 Lakhs/PA
பிறந்த தேதி 06.12.1993
உயரம் 176 cm
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் காருடம்

தகப்பனார் Ragu .P
தாயார் Kalavathi .R
முகவரி 2/132, East Street, P. Thirumalam,
Ambal (PO), Nannilam (TK).,
Thiruvarur (DT) 609 503.
Cell : 94884 89398, 63747 92562

பெயர் செல்வன் P. ராஜாராம்
படிப்பு B.E. Mec.,
வேலை IT Chennai
Rs. 10 Lakhs / PA
பிறந்த தேதி 20.10.1993
உயரம் 182 cm
நட்சத்திரம் மூலம் 3ம் பாதம்
கோத்திரம் சாத்துகுட
பூர்வீகம் கும்பகோணம்

தகப்பனார் N. பன்னீர்செல்வம்
தாயார் P. விசாலாட்சி
முகவரி D1, அருணாச்சலேஸ்வரர் இல்லம்,
அய்யாசாமி தெரு, நேரு நகர்,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044.
Cell : 6369611165, 99413 77129

வாழ்க மணமக்கள்

திருச்சி நகரம், தென்னூர் அண்ணா நகர் வஞ்சனமுட கோத்திரம் நலமுடன் திரு P. கனகசபை பிள்ளை – தெய்வத்திருமதி ரங்கநாயகி இவர்களின் மகன் வயிற்றுப்பேரனும், மயிலாடுதுறை மாவட்டம், திருவாலங்காடு நலமுடன் திரு. G. சேதுராமபிள்ளை – தெய்வத்திருமதி மீனாட்சி அம்மாள் இவர்களின் மகள் வயிற்றுப் பேரனும், திரு K. பஞ்சநாதன் – திருமதி கீதா இவர்களின் குமாரர் திருநிறைச்செல்வன் **Dr. P. *பரத்வாஜ்,*** MD க்கும், சிதம்பரம் அனந்தீஸ்வரன் கோவில் தெரு முதனுட கோத்திரம் நலமுடன் C. ஆதிவராகன்பிள்ளை – தெய்வத்திருமதி தனலட்சுமி அம்மாள் இவர்களின் மகன் வயிற்றுப் பேத்தியும், சிதம்பரம் திரு S. சேகர் பிள்ளை – திருமதி சிவகாமசுந்தரி இவர்களின் மகள் வயிற்றுப் பேத்தியும், திரு A. அன்புசெல்வன் – திருமதி கவிதா இவர்களின் குமாரத்தி திருவளர்செல்வி **Dr. A. *வனிதா,*** MBBS இவர்களின் திருமணம் கடந்த **27.01.2023** வெள்ளிக்கிழமை அன்று சிதம்பரம் ஸ்ரீ கிருஷ்ண மஹால் A/cல் இனிதே நடைபெற்றது. தொடர்ந்து திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஸ்ரீ சங்கீதாஸ் செந்தூர் ஹால் A/cல் **29.01.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற திருமண வரவேற்பில் கலந்து கொண்டு வாழ்த்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

A. அன்புசெல்வன், BE , A.C.M NLC,
A. கவிதா
A. பூரணி, Msc,
C. ஆதிவராகன் பிள்ளை, தலைமை ஆசிரியர் (ப.நி),
S. சேகர் பிள்ளை, த.மி.வா. (ப.நி),
சிவகாமசுந்தரி

K. பஞ்சநாதன், B.Lit, M.A, M.A, B.Ed, பட்டதாரி ஆசிரியர் (ப.நி),
S. கீதா, B.A, M.Com., B.Ed, முதுகலை ஆசிரியை,
P. கனகசபை, B.Sc., கூடுதல் இயக்குநர் ஊ.வ.து (ப.நி),
G. சேதுராமன், தலைமை ஆசிரியர் (ப.நி)

வாழ்க தம்பதியர்!

சஷ்டியப்த பூர்த்தி விழா



மயிலாடுதுறை மாவட்டம், மணிக்கிராமம் மேலத்தெரு, திரு. R. தியாகராஜன் பிள்ளை – T. காந்திமதி அம்மாள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சேந்தங்குடி வெங்கடேஸ்வரா நகர், திரு. K. சோமசுந்தரம் பிள்ளை – தெய்வத்திரு. சரஸ்வதி அம்மாள் இவர்களின் நல்லாசியுடன்

திரு. **T. கபிலன்** – திருமதி. **K. லெட்சுமி பிரபா**

தம்பதிக்கு **27–01–2023** அன்று சஷ்டியப்த பூர்த்தி திருக்கடையூரில் ஸ்ரீ அபிராமி அம்மன் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் சுவாமி ஆலயத்தில் உள்ள நூறு கால் மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அது சமயம் கலந்து கொண்டு சிறப்பித்து ஆசி வழங்கிய ஆசி பெற்ற அனைத்து, நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

K. பிரதீப், B.Tech.,

C. காமினி, B.E.,

பெங்களூர்.

சஷ்டியப்த பூர்த்தி விழா

சென்னை போரூர் கார்காத்தார் சங்க செயலாளரும், மயிலாடுதுறை மாவட்டம் கீழப்பெரும்பள்ளம் காருட தெய்வத்திரு. V. சுந்தரேசன் பிள்ளை நலமுடன் அலமேலு அம்மாள் அவர்களின் மகனும் திருவாலங்காடு அலம்பலுட தெய்வத்திரு. மாணிக்கம் பிள்ளை சௌந்தரநாயகி அவர்களின் மகளுமான

திரு. **S. சந்திரமோகன்** – திருமதி. **M. இராஜலெட்சுமி**

தம்பதிகளின் சஷ்டியப்த பூர்த்தி விழா திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் சுவாமி ஆலயத்தில் உள்ள நூறு கால் மண்டபத்தில் **(5–3–2023)** ஞாயிற்றுக்கிழமையன்று இனிதே நடைபெற்றது. அவ்வமயம் வருகை தந்து வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

குட்டீஸ் : **A. தான்வி**

R. அரவிந்த் – பவித்ரா – சென்னை.

K. பிரதீப் – காமினி – பெங்களூர்.

வாழ்க மணமக்கள் ....



மணமக்கள் **G.மனோஜ்** B.E., (ECE) -**R.பரணி** M.C.A.,

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறைகாருட, தெய்வத்திரு.கணபதிபிள்ளை-நலமுடன்ருக்மணி அம்மாள் இவர்களின் பெயரனும், மயிலாடுதுறை, சாத்துக்குட நலமுடன்திரு.சடையப்பபிள்ளை - தெய்வத்திருமதி. ஜோதி அம்மாள் இவர்களின்மகள்வழிபெயரனும், திரு.கோவிந்தராஜ் பிள்ளை - சுகந்தி இவர்களின் குமாரர் திருவளர்செல்வன் **G.மனோஜ்** B.E., (ECE), மயிலாடுதுறை மாவட்டம், மண்ணிப்பள்ளம், செம்பதரிய, தெய்வத்திரு.ரெத்தினம்பிள்ளை - நலமுடன் ஜெயலெட்சுமி அம்மாள், இவர்களின் மகன்வழி பெயர்த்தியும் மற்றும் குத்தாலம் வட்டம், திருவாவடுதுறை, எருக்குட, தெய்வத்திருவாளர்கள்.குமாரசாமிப்பிள்ளை - ஜெயலெட்சுமி அம்மாள் இவர்களின் மகள்வழி பெயர்த்தியும், திரு.R.இரமணிராஜன்பிள்ளை-தேவகி அவர்களின் குமாரத்தி திருவளர்செல்வி **R.பரணி** M.C.A., இவர்களின் **திருமணம் (17.03.2023) வெள்ளிக்கிழமை** மயிலாடுதுறை, ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. திருக்கோயில்கள் சார்பாக மணமக்களை வாழ்த்தி இறைபிரசாதம் வழங்கிய பெரியோர்களுக்கும், திருமணம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், கார்குல நண்பர்களுக்கும் சிறப்பாக சேவை செய்த கார்காத்த வேளாளர் சங்க பொறுப்பாளர்களுக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியுடன்

G.கோவிந்தராஜ்பிள்ளை ONGC,
G.சுகந்தி,
G.ஹரீஷ் M.C.A.,
21, அபிராமிநகர், மயிலாடுதுறை.
செல் : 9442500719.

R.இரமணிராஜன்பிள்ளை,
காசாளர், வேளூர் தேவஸ்தானம்.
தேவகி இரமணிராஜன்,
மண்ணிப்பள்ளம்.
செல் : 9443986040

வாழ்க வளமுடன்





C. சசிதரன், B.E. - **M. ஹரிவிவித்ரா,** B.Tech., **03–03–2023** (வெள்ளிக்கிழமை) திருப்பூரில் நடைபெற்ற திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய அனைத்து நல் இதயங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

K. சந்திரசேகரன், M.Com.,

C. சித்ரா, B.Sc.,

C.S. TEXTILE PROCESS, TIRUPUR

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது :
02–10–1955

உதிர்ந்தது :
29–04–2022

திருமதி. **ஞா. மங்களம்**

அன்பின் திருஉருவே! எங்கள் குலவிளக்கே! இன்முகத்தோடும் பாசத்தோடும் பழகிய நீ எங்களின் நீங்காத நினைவாக என்றென்றும் எங்கள் நெஞ்சில் வாழ்கிறாய்.

P. ஞானப்பிரகாசம் – கணவர்

விழுப்புரம்

G. வள்ளி

B. அழகேசன்

A. அகிலன்

நெய்வேலி

G. லாவண்யா

C. செல்வமுத்துகுமார்

S. ராகுல்

S. சஞ்ஜனா

சென்னை

கண்ணீர் அஞ்சலி!!!

தோற்றம் :
24–04–1958

மறைவு :
01–03–2023

S. திலகம்

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றவரும் திரு. T. கல்யாணராமன் அவர்கள் மனைவியுமான **S. திலகம்** 01–03–2023 புதன் இரவு 8–40 மணியளவில் மாரடைப்பால் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது பிரிவால் வாடும்

கணவர் **T. கல்யாணராமன்**

மற்றும்

உறவினர்கள், நண்பர்கள்.

முகவரி : No. 31, ஸ்ரீ ராகவேந்திரா நகர், பரமேஸ்வரநல்லூர்,
சிதம்பரம். செல் : 9442866105

கீழையூர் : ஸ்ரீ வெள்ளை விநாயகர் துணை
வரகடை அங்காள பரமேஸ்வரி துணை.

எங்களை வாழவைத்த தெய்வங்கள்

ரா. சரவணன்

தோற்றம் : 01–01–1932
மறைவு : 25–06–1996

ச. சரோஜா

வயது : 88
மறைவு : 23–02–2023

பெற்றோரின் தவப்பயனாய் இன்முகத்துடன்
இளந்தோப்பில் பிறந்த சரோஜாவே!
அன்பு நிறைந்த அத்தை மகன் சரவணனை
பாசமுடன் கரம்பிடித்து
குலம் தழைக்க கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்து
பெற்றோரிடமும் உற்றார் உறவினரிடமும்
கோபத்தைக் குறைத்து குணத்தைக் கூட்டி
கீழையூர் பெரியபிள்ளை குடும்பத்திற்கு
புகழையும், பெருமையையும் சேர்த்திட்ட
எங்கள் குலதெய்வம் சரோஜாவே!!

உங்கள் பிரிவால் வாடும்

மகள் – மருமகன் :
திருமதி. **திலகவதி – தங்கப்பிரகாசம்**
மயிலாடுதுறை.

மகன் – மருமகள்கள் :
ச. கணேசன் – சாந்தி, மயிலாடுதுறை.
ச. பாலசுந்தரம் – அன்பு, மயிலாடுதுறை.

பேரன் – பேத்திகள் :
திருமதி. **ஸ்ரீதேவி – பாலபிரகாஷ்**
அண்ணாநகர் – சென்னை.

க. கீர்த்திவாசன் – அபிராமி, மயிலாடுதுறை.
திருமதி . **அனுபா – ராகுல்**
காட்டுப்பாக்கம், சென்னை.
செல்வி. **ஸ்ரீபா பாலசுந்தரம்,** மயிலாடுதுறை.

கொள்ளு பேரன் பேத்திகள் :
விஜய் முரளி பாலபிரகாஷ்
அருண்முரளி பாலபிரகாஷ்
அண்ணாநகர், சென்னை

அக்ஷரா ராகுல்
காட்டுப்பாக்கம் – சென்னை.
சூர்யவர்மன் கீர்த்திவாசன், மயிலாடுதுறை.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் தோற்றம் :
29–5–1948

விண்ணில் மறைவு :
5–5–2021

திருமதி. **தங்கம் (எ) ஜெ. தங்கமணி**
P.A. (ஓய்வு) தமிழ்நாடு காவல்துறை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், விளத்தூர் கிராமம்,
தெய்வத்திருவாளர்கள். திருவேங்கடம் பிள்ளை – அலமேலு அம்மாள் அவர்களின்
மூத்த மருமகளும், எனது மனைவியுமாகிய,
திருமதி. **தங்கம் (எ) ஜெ. தங்கமணி** அவர்களின்
இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நாள் : 5–5–2023.
என்றும் எங்கள் மனதில் தங்கள் நினைவுகளுடன் வாழும்

கணவர் : **தி. பிரபாகரன்**
செயலர் (ஓய்வு) சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி
செல் : 9487138643

மகள்கள் :
லெட்சுமி பிரபா – சிதம்பரம்.
சூரியபிரபா – சென்னை.

மருமகன்கள் :
அன்பழகன் – சிதம்பரம்.
பாலமுருகன் – சென்னை.

பேத்திகள் :
A. **தீபிகாராணி** – சிதம்பரம்.
A. **முகில்ராணி** – சிதம்பரம்.
B. **ஷராலி** – சென்னை.
B. **மிருணாளினி** – சென்னை.

மலர்ந்தது
10.12.1939



உதிர்ந்தது
20.02.2023

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

இந்த குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்
ம.மேலவன்னியூர்

திரு. **இரா.சீத்தாராமன் பிள்ளை** அவர்கள்

20.02.2023 திங்கள்கிழமை மாலை 7.00 மணியளவில் வைகுந்த பதவி அடைந்தார்கள். அன்னாரது கண்கள் மதுரை, அரவிந்த் கண் மருத்துவமனைக்கும், உடல் பாண்டிச்சேரி, மகாத்மாகாந்தி மருத்துவக் கல்லூரிக்கும் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகம்
மகாத்மாகாந்தி மருத்துவக்கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்
பிள்ளையார்குப்பம், புதுச்சேரி - 607 403

மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ ஆராய்ச்சிக்கு உதவும் வகையில்

திரு. R.சீத்தாராமன்
தந்தை பெயர் : ராமானுஜம்
Plot No. 2, காமராஜ் நகர்,
முதல் தெரு, 87/1, எனுமிச்சங்காய் பாளையம்,
மேலவீதி, தாராகரம்,
தஞ்சாவூர் - 612 702.

அவர்களின் உடலை தானம் செய்த அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்கள் அனைவருக்கும் புதுச்சேரி, மகாத்மா காந்தி மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக இந்த உடல்தான பாராட்டு சான்றிதழ் நன்றியுடன் வழங்கப்படுகிறது

உடல் தானம் செய்த நாள் : 21-02-2023

துணைவேந்தர்
VICE-CHANCELLOR
SRI BALAJI VIDYAPEETH

மனைவி: சீ.ரோஜாவல்லி

மகன்கள்:
சீ.குணசீலன் (எ) ஞானம்
சீ.வரதராஜன் (எ) ரமேஷ்

மருமகள்:
வை.பிரேமா
இரா.ஷீலாதேவி

மருமகன்: க.ராமநாதன்

மகள்: சீ.கலை

பேரன் பேத்திகள்:
வ.ஸ்ரீகணேஷ்
இரா.அருண்பாலாஜி
ஆர்த்தி அருண்பாலாஜி
மு.திலீபன்
அபிராமவல்லி திலீபன்

கொள்ளு பேத்திகள்:
மழலை: தீக்ஷிகா, தியாழினி

ஏர்கண்டிஷன் வரலாறு.

கும்பகோணம்.

ஏர்கண்டிஷன் எனப்படும் குளிர்சாதன வசதி, நவீன யுகத்தின் கண்டுபிடிப்பு என்று நினைத்தால் அது தவறு. நம் இலக்கியங்களில் காணப்படும் நீர் விளையாட்டு, வசந்த மண்டபம் என்பனவெல்லாம் புராண கால (A.C) அமைப்புகள் தான். கிரேக்க, ரோமானிய இலக்கியங்களிலும் குளுகுளு விஷயங்கள் வருகின்றன.

ரோமானிய சக்ரவர்த்திகளில் பலர் பனிமலையிலிருந்துஐஸ்கட்டிகளைவண்டி,வண்டியாக கொண்டு வரச் செய்து தங்கள் கோடைக்கால தோட்ட வீடுகளில் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

எட்டாம் நூற்றாண்டில் பாக்தாத் நகரை ஆண்ட காலிப் அல்மஹதி, இரட்டைச் சுவர்களைக் கொண்ட கட்டிடத்தின் இடைப்பகுதியில் தனது அரண்மனையை அமைத்திருந்தார். தண்ணீரை இந்தப்பகுதியில் நிரப்பி, அடிமைகளைக் கொண்டு விசிறியால் வீசச் செய்து குளிர்ந்த காற்றைத் தனது அறைக்குள் பரவச் செய்தார்.

மிலான் நகரில் ஒரு சீமாட்டியின் அறையில் குளிர்ந்த காற்றைப் பரவச் செய்ய காலால் இயங்கும் ஒரு வகை விசிறியை உபயோகப்படுத்தியதாகவும், இந்த விசிறி இன்றும் அருங்காட்சியகத்தில் உள்ளதாகவும் ஒரு தகவல் உள்ளது.

தற்போது நாம் காணும் ஏசியின் ஆரம்ப அமைப்பு உருவானது சுமார் 170 வருடங்களுக்கு முன்பாம். அமெரிக்க மருத்துவரான ஜான்கோரி, மலேரிய நோயாளிகளுக்காக ஐஸ்கட்டிகள் மீது தானாக காற்றை வேகமாகச் செலுத்தும் ஓர் அமைப்பை உருவாக்கினார். இந்த ஏர் கம்ப்ரசரை 1851–ல் காப்புரிமைப் பதிவு செய்து கொண்டார். இதே கால கட்டத்தில் அமோனியா தகடுகளைக் கொண்ட ஈரப்பதத்தைப் பிரித்தெடுக்கும் ஒரு கருவியையும் வடிவமைத்தனர்.

1902–ஆம் ஆண்டு வில்லியம் ஹெக்காரியர் என்ற அமெரிக்கர் ஏர்கண்டிஷனரை உருவாக்கினார். இன்றைய நவீன குளிர்சாதனம் உருவாவதற்கு இதுவே அடித்தளமாகும். இன்று பல்வேறு அமைப்புகளில், உருவில், அளவில் வந்து கொண்டிருக்கின்றன.

உலகிலேயே பெரிய ஏர்கண்டிஷனிங் சிஸ்டம், நியூயார்க்கில் உள்ள வர்த்தக மையத்தில் அமைந்துள்ளது. மொத்தம் 2 ஏக்கர் அளவுக்கு இணைப்பான பரப்பளவைக் குளுமையாக வைத்திருக்கும் இந்த அமைப்பில் 170 மைல் நீளத்திற்கு குழாய்களும், 1 லட்சத்து 24 ஆயிரம் அவுட்லெட்களும் உள்ளன.

– கீரந்தங்குடி நீலா ராஜசேகரன்,

கும்பகோணம் – 2.

காத்திருப்பு

குழந்தை சத்தம் கேட்டது. வெளியில் நின்ற சொந்தம் பந்தங்கள் மகிழ்ந்தது. அப்பாடா நல்லபடியாக பிறந்துவிட்டது.

அடுத்த ஆவல் அது என்ன குழந்தை பிள்ளையா பெண்ணா ? என்று குழப்பியது சந்தோஷ குழப்பம் சற்று நேரத்தில் அது அழகிய பெண் குழந்தை என்று தெரிந்தது.

வெளியில் வந்த அந்த குழந்தை அறையை விட்டு வர சற்று நேரம் காத்து இருந்தது அந்த சின்ன சிறுக்குழந்தை.. வந்ததும் எங்கள் வீட்டு மகாலெட்சுமி என்று கொண்டாடியது அந்த சொந்தபந்தம்.

நாங்கள் சொல்வதை கேட்க வேண்டும் எங்கள் சொல்படித்தான் நடக்க வேண்டும் சொல்லியே வளர்த்தார்கள் அந்த அழகிய பெண் மகவு காத்திருந்தது. படிப்பில் நல்ல முறையில் நடந்தால் உணர்வார்கள் என்றும் அந்த குழந்தை காத்திருந்தது.

பள்ளிப்படிப்பு கல்லூரி என்றும் சிறு பிள்ளை என்றும் இருந்தது மங்கை என்று ஆனது. ஆனால் அப்போதும் அதே காத்திருப்பு என்ற நிலைபாடே. உனக்கு என்ன தேவை என்ற கேள்வி இது வரையில் இல்லை. இன்னிலையில் கல்யாணம் பேச்சு எழுந்தது.

கட்டாய கணவன் தன்னிடம் எல்லாவற்றையும் கேட்பான் தன்னை புரிந்து கொள்ளும் கணவன் கிடைப்பார் என்ற எண்ணம் எழுந்தது.

கல்யாணம் முடிந்தது. கணவர் வீட்டில் கால் வைத்தபோது நாங்கள் சொல்வதைக் கேள் புரியாமல் பின்னும் தொடர்ந்தது. காத்திருப்பு. காலம் தொடர.

அப்போது உணர்ந்தாள் தன்னுள் உயிர் வளர்வதைக் கண்டு பூரித்தாள் கண்டிப்பாக தனக்கு

துணையாக தன்னைப் புரிந்துக்கொள்ள உயிர் வந்து விட்டது என்று காத்து இருந்தாள்.

பிள்ளை பிறந்து வளர ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து ஓடவே நேரம் சரியானது. காத்திருப்பு அது தொடர் கதை ஆனது.

பிள்ளை பள்ளி, கல்லூரி என்று தொடர்ந்தது. எப்படியும் மருமகளை அழைத்து வந்தால் தனக்கு துணைக்கு தன் காத்திருப்புக்கு அர்த்தம் கிடைக்குமா ?

மருமகளும் வந்தாள். இப்போதும் காத்து இருக்கிறாள் அந்த கோதை முதியோர் இல்லத்தில் ஆனால் இறுதி வரை இது தானோ ?

வாழ்க்கையே புரியாத புதிர் இதில் இந்த பெண்ணின் வேள்வி காத்திருப்போ கடைசி வரையில் பாவம் அந்த மடந்தை.

- C. சந்திரா சந்திரசேகரன்,
சித்தர்காடு.

ஜோக்ஸ்

1. ரெய்டுக்கு வந்த அமலாக்கத் துறை ஏன் திரும்பி போயிட்டாங்க ?
தலைவருக்கு கொரோனா பாதிச்சிருக்குன்னு யாரோ புரளிய கிளப்பிவிட்டுட்டானுங்களாம் !
2. அந்தப் பிச்சைக்காரன் கடன்.. கடன்னு கேட்டு உயிரை எடுக்கிறான் சார் ! ...
கடனெல்லாம் கிடையாதுன்னு பளிச்னு சொல்லிவிட வேண்டியதுதானே !
அதெப்படி வாங்கின கடனை இல்லன்னு சொல்ல முடியும் ?
3. சீடை ரொம்ப கெட்டியா இருக்குன்னு மிக்ஸியிலே போட்டேன். உடைஞ்சுடுச்சு !
சீடையா ? இல்லை மிக்ஸி
4. நம்ம தலைவர் கவுன்சிலர் ஆனவுடனே என்ன செஞ்சாரு ?
மாரின்னு கையெழுத்துப் போடக் கத்துக்கிட்டாரு.
5. பில்லை பார்த்ததிலிருந்து கை காலெல்லாம் வெட வெடங்குது சிஸ்டர்.
சத்தம் போட்டுப் பேசாதீங்க. டாக்டர் காதுல விழுந்தா கை, கால் நடுக்கம்னு சொல்லி திரும்ப அட்மிட் பண்ணிடுவார்.

கொஞ்ச நேரம் இரு !

அடுக்களை வேலைகள்
அப்படியே கிடக்குதென்று
அவசர அவசரமாக
எழுந்து செல்ல முனைகையில்
குழந்தையின் பிஞ்சு விரல்கள்
அம்மாவின் தோளினை
அழுத்திச் சொன்னது
'கொஞ்ச நேரம் இரு' என்று !

முதன் முதலாக
கல்விக் கூடம் செல்கையில்
அழைத்துச் சென்ற அம்மாவை
மகள் பார்த்த பார்வை சொன்னது
'கொஞ்ச நேரம் இரு' என்று !

திருமண மான புதிதில்
முதல் தடவையாக
புகுந்த வீட்டிற்குத்
துணையாக வந்த அக்கா
ஊருக்குப் புறப்படுகையில்
தங்கை பார்த்த பார்வை சொன்னது
அடுத்த பேருந்துக்குச் செல்லலாம்
'கொஞ்ச நேரம் இரு' என்று !

அம்மாவை இழந்த அப்பாவை
கனிவோடு
பார்க்க வந்த மகள்
புறப்படும் தருணத்தில்
நீர் கோர்த்த கண்களோடு
அப்பா பார்த்த பார்வை சொன்னது
'கொஞ்ச நேரம் இரு' என்று !

முதன் முதலாக தாத்தாவை
முதியோர் இல்லத்தில்
விட்டு விட்டுத் திரும்புகையில்
தாத்தாவைத்
தனியேவிட மனமின்றி
அப்பாவை நோக்கி
மகள் பார்த்த பார்வை சொன்னது
'கொஞ்ச நேரம் இருப்போமா'
அப்பா என்று !

– மெய்யாத்தூர். சொ. வேல்முருகன்.
9598286891

விரும்பிய வரம் தரும் வில்வ மரம்

சிவபெருமான் வழிபாட்டிற்குரிய பொருட்களில் வில்வ இலைக்கு முக்கிய பங்குண்டு. மூன்று பிரிவுகளை கொண்ட வில்வ இலை திரிசூலத்தின் குறியீடாக பார்க்கப்படுகிறது. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என மூன்று சக்திகளின் அம்சமாகவும் வில்வத்தைப் போற்றுகிறார்கள். மகாலெட்சுமி பாற்கடலில் இருந்து அவரது கைகளில் இருந்து வில்வம் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன. மகாலெட்சுமி வாசம் செய்யும் இடமாக வில்வ மரம் உள்ளது.

வில்வ மரத்தின் கிளைகள் வேதங்களாகவும், இலைகள் சிவசொரூபமாகவும், வேர்கள் கோடான கோடி ருத்திரர்களாகவும் பாவிக்கப்படுகின்றன. சிவனுக்கு பிரியமான வில்வத்தைக் கொண்டு அவரை அர்ச்சிப்பதன் மூலம் ஈசனின் திருவருளை எளிதாகப் பெறலாம். முறைப்படி விரதமிருந்து வில்வமரத்தை பூஜிப்பவர்களுக்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும். ஒரு வில்வ இலையைக் கொண்டு இறைவனை அர்ச்சிப்பது லட்சம் தங்க மலர்களை கொண்டு அர்ச்சிப்பதற்கு சமம் ஆகும்.

துளசி மாடம் போல் வீட்டில் வில்வமரம் வளர்ப்பவர்களுக்கு ஒரு போதும் நரகம் கிடையாது. வீட்டில் வில்வ மரம் நட்டு வளர்ப்பதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும். அதன்படி ஒருவர் தன்னுடைய வீட்டில் வில்வமரம் வளர்ப்பது அஸ்வமேதயாகம் செய்வதற்கான பலனை கொடுக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும். கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும் 108 சிவாலயங்களை வலம் வந்து தரிசித்த பெரும் பாக்கியம் ஏற்படும்.

திருவையாறு, திருவெறும்பூர், ராமேஸ்வரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் வில்வம் தல விருட்சமாக அமைந்துள்ளது. சிவபெருமானுக்கு பூஜை செய்யப்படும் வில்வம் ஒரு கற்பக மூலிகையாகும். இது அனைத்து நோய்களையும் நீக்கும் தன்மை கொண்டது. வில்வத்தின் இலை, பூ, பிஞ்சு, பழம், வேர்ப்பட்டை, பிசின் ஆகியவை மருத்துவப்பயன் கொண்டதாக திகழ்கிறது. திருஇடைச்சுரம் என்ற திருத்தலத்தில் உள்ள வில்வமரம் எட்டு கூட்டிலைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாறு அமைந்தவை "மகா வில்வம்" என்றும் "பிரம்ம வில்வம்" என்றும் அழைக்கப்படுகிறது. திருவெண்காட்டில் உள்ள வில்வம் போல் முள் இல்லாத மரங்களும் அரிதாக காணப்படுகிறது. வில்வத்தால் அர்ச்சனை செய்யும் போது சிவபெருமானை நாம் இன்னும் நெருங்கமுடியும். ஈசனின் அருளை எளிதாக பெற முடியும். ஏழரை சனியின் பிடியில் இருப்பவர்கள் வில்வத்தால் ஈசனை அர்ச்சித்து வழிபடுவது சிறந்தது. இத்தகைய சிறப்புமிக்க வில்வமரத்தின் இலைகளை சோமவாரம் (திங்கட்கிழமை) சதுர்த்தி, அஷ்டமி, அமாவாசை பவுர்ணமி தினங்களில் மரத்திலிருந்து பறிக்கக்கூடாது. வில்வ தளம் என்பது மூன்று இலைகள் சேர்ந்தது. அவற்றை தனித்தனியாக கிள்ளக்கூடாது என்பதும் ஐதீகம்.

எனவே இவ்வளவு புகழ் கொண்ட வில்வ இலைகளைக் கொண்டு ஈசனை அர்ச்சனை செய்து அனைவர் வாழ்விலும் வளம் பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

– நெ. ஆ. சிவகுருநாதன்,
S.R. நகர், சிதம்பரம்.

வேண்டுகோள்

விழுப்பதரிய கோத்திரதாரர்கள் குலதெய்வமான ஸ்ரீபெரியநாயகி உடனுறை ஸ்ரீபெரியாண்டவர் திருக்கோயில் விருத்தாசலம் தாலுக்கா T.V. புத்தூரில் புதுப்பிக்கப்பட்டு கடந்த 2015–ம் ஆண்டு தங்கள் எல்லோருடைய உதவியாலும், ஒத்துழைப்பாலும் சிறப்பாக நடந்தேறியது.

தற்போது கோயிலை ஒட்டி ஒரு சிறிய மண்டபமும், குளியலறை வசதியும் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடு (Estimate) ரூ. 4–(நான்கு) லட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. தலைவர் அவர்கள் ரூ. 50,000 முன்பணம் அளித்து பணியும் துவங்கப்பட்டுள்ளது. எனவே அன்பர்கள் அனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி அளித்து பணியினை இனிதே நிறைவேற்றிட உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கீழ்க்கண்ட அலைபேசிகளிலும் தொடர்பு கொள்ளவேண்டுகிறோம்.

தகவல்களுக்கு : 9442228509, 9443886742, 9750440555, 9443665642

தொகை செலுத்த வேண்டிய விபரம் :

BANK : THE CUDDALORE DISTRICT CENTRAL CO-Operative Bank Ltd,

CHIDAMBARAM BRANCH.

ACCOUNT NO. 713856542.

IFSC CODE TNSC 0011200.

AC-NAME, TV. PUTHUR SRI PERIANDAVAR KOIL IRAIPANI ARAKKATTALAI

எது அழகு?

– வழிப்போக்கன்.

இயற்கை அழகா இல்லை செயற்கை அழகா என்ற வினாவை ஒருவர் ஒரு கூட்டத்தில் எழுப்பினார். சத்யோஜாத சிவம் தங்க சிவப்பிரகாச சுவாமிகள் விடை சொல்லலானார்.

ஒரு முறை இராச இராசசோழன் கருவூர்த்தேவர், அவைப்புலவர் அமைச்சர் எல்லோரும் அரண்மனைத்தோட்டத்தில் நடந்து சென்றனர். புலவர் சரக்கொன்றை மலரைக்காட்டி மன்னரிடம் தன் வியப்பைத் தெரிவித்தார். இவ்வளவு அழகிய மலரை ஒருவராலும் ஒருக்காலும் உருவாக்க முடியாது என்றும் கூறினார்.

இதனைக்கேட்ட கருவூர்த்தேவர் புலவர் கூற்றை மறுத்தார். சில சமயங்களில் மாந்தனால் கூட இதைவிட அழகிய மலரை உருவாக்க முடியும் என்றார்.

இதனைக்கேட்ட மன்னன் "தேவர் கூற்றை என்னால் ஏற்க முடியவில்லை. நீங்களும் சில நேரம் தெளிவின்றிப் பேசுகின்றீர்கள்" என்றான்.

அன்று மாலை ஒரு கல்தச்சர் ஒரு கொன்றை மலர்க் கொத்தினைக் கல்லில் வடித்து மன்னரிடம் கொடுத்தார். அதன் அழகைப்பார்த்த மன்னன் ஆயிரம் பொற்கழஞ்சினை அன்பளிப்பாக வழங்கினான். சற்று நேரத்தில் ஒருவன் இராசராசன் ஆன்மார்த்த பூசைக்காக ஒரு கூடை கொன்றைப் பூவைக் கொணர்ந்தான். அதனை பத்தியுடன் பெற்றுக்கொண்ட மன்னன் ஒரு பொற்கழஞ்சினை அவனுக்கு அளித்தான்.

இதனைக் கவனித்த கருவூர்த்தேவர் "இயற்கையை விட செயற்கை அழகு என்பதால்தான் சிற்பிக்கு ஆயிரம் பொற்கழஞ்சோ" என்றார். மன்னர் என்னவென்று புரியாமல் புருவத்தை உயர்த்த கருவூர்த்தேவர் பேசலுற்றார். இயற்கையாய், இயற்கையில் எங்கும் இருக்கும் இறைவனை இயல்பாய் இயற்கையைப் பார்த்தே வணங்கிச் செல்லலாம். ஆனாலும் இறைவர்க்கு தஞ்சைப் பெருவுடையார் கோவிலை மாமன்னர் எழுப்பியுள்ளார்.

கலைப்பொருள் காலத்திற்கும் விளங்குவது மதிப்புமிக்கது. என்றும் மாறாதது. எனவேதான் அது இயற்கையினும் உயர்ந்தது.

வான் பொற்த்துவிட்டால் பைம்புல் வெளி இருக்காது. மலர்களும் மலரா. கலைப்பொருளாகச் செதுக்கப்பட்டவை வரையப்பட்டவை வாடா! வதங்கா! காவியம் மனத்தால் காணலாம். ஓவியம் கண்ணால் காணலாம். இறைவனை மனத்தால் காணலாம். கண்ணால்காண திருக்கோயில் தேவை.

நம் உயிருக்கு உயிரானவர் இல்லாதபோது அவர் படம், சிற்பம், சித்திரம்தான் நமக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும். இயற்கை புறக்கணிக்கும் பொழுது ஓவியங்களும், சிற்பங்களும்தான் நம்மை ஆற்றுப்படுத்தும். ஓவிய சிற்ப மரத்திற்கு இலையுதிர்காலம் என்றுமே இல்லை. ஓவியத்தில் சிற்பத்தில் உள்ள பெண்ணுக்கு களைப்பு, மூப்பு, பிணி, சாக்காரு வருவதே இல்லை. நம்மால் பூங்காக்களையும் பழத்தோட்டங்களையும் உருவாக்க முடியும். ஒரு கலைஞனை உருவாக்க முடியாது. எனவே இயற்கையால் உருவாகும் கலைஞனை நாம் ஊக்குவித்து ஆதரிக்கவேண்டும். அந்த வகையில் செயற்கைகூட சமயத்தில் உயர்ந்ததே அழகிலும் வாழ்விலும்"என்றார். கருவூர்த்தேவரின் அறிவின் நீட்சியை எண்ணி வியந்தான் மன்னன். இச்செய்தியைச் சொன்ன சுவாமிகள் செயற்கையும் அழகுதான் உயர்வுதான் என்று கூறி முடித்தார்.

ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

அலுவலக நேரம் : மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

திருவிளையாடற்புராணம்

38- உலவாக்கோட்டை அருளிய படலம்

'சிவகாமியின் செல்வன்

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

அடியார்க்கு நல்லான் இயல்பு

உணவளிப்பது போன்ற உன்னத புண்ணியம் உலகில் ஒன்றும் இல்லை. இதனை முழுதும் உணர்ந்த ஒரே குலம் வேளாளர் குலம். இவர்கள் குலம் இன்றைக்கும் இப்பண்பு மாறாமல் உள்ளனர். இத்தகைய புகழ்மிக்க குடியில் பிறந்தவர்தான் அடியார்க்கு நல்லான். மதுரை மாநகரில் வாழ்ந்தவர் இவர். இவர் மனைவி தருமசீலை. இவரும் தமது மரபொழுக்கம் குன்றாதவர். மனையறம் மிக்கவர்.

அடியார்க்கு நல்லான் பல ஏர்களைக் கொண்டு உழுதொழில் செய்து வந்தார். அதில் வரும் ஊதியத்தில் ஆறில் ஒரு பங்கை அரசனுக்கு வரியாக அளித்து வந்தார். எஞ்சியவற்றைக் கொண்டு சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதில் மனநிறைவு கண்டார். எண்ணற்ற அடியார் பெருமக்கள் அடியார்க்கு நல்லானைத் தேடிவருவர். அவர்கள் அனைவரும் போதும் போதும் என்று சொல்லும் அளவிற்கு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்னும் ஆறுசுவை கொண்ட உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன எனும் நால்வகை உண்டியை (உணவை) மெய்யன்போடு வழங்குவார். தோண்டத் தோண்ட ஊறும் மணற்கேணி போல அடியார்க்கு நல்லானின் செல்வமும் மேலும் மேலும் பெருகிற்று.

அடியார்க்குநல்லான் வறுமையால் நலிதல் : பண்பு குறையாத அடியார்க்கு நல்லானின் பெருஞ்செல்வம் குறைந்தது. இவர் தம் பண்பு குறையாத் தன்மையை உலகிற்கு உணர்த்தும் பொருட்டு சிவன் செய்த திருவிளையாடல் இது. நீர்வளமிக்க நிலங்களில் விளைவு குறையுமாறு செய்தான் சிவன். அடியார்க்குநல்லான் அதனைப் பொருட்படுத்தவே இல்லை. வட்டிக்கும் வட்டி கொடுக்கும் கடன் வாங்கினார். தொடர்ந்து அடியார்க்கு அன்னம் பாலித்தலைச் செவ்வனே செய்து கொண்டிருந்தார். பின்னர் அக்கடனும் கிடைக்கவில்லை. மனம் சோர்ந்தார். தன் பணி செய்ய இயலாமல் போனதால் செய்வது அறியாமல் திகைத்தார். தனக்கும் உணவின்றி உடலை வருத்திக் கொண்டார். வயலில் விளைவும் இல்லை. கடன் கொடுப்பார் எவருமில்லை. இறைவனே இதனைச் செய்யும் பொழுது என்னதான் செய்ய முடியும். தானும் தன் மனைவியும் பட்டினி கிடந்தனர். கவலையால் உள்ளம் புண்ணானது. உடல் பசியால் வாடியது.

இறைவனிடம் முறையிடல் :

அறக்குன்று போன்ற அடியார்க்குநல்லான், அழியும் உடம்பால் தன் கொள்கை தடைப்படுவதை எண்ணிக் கலங்கினார். தன் நிலையை சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட விரும்பினார். மனைவியுடன் திருக்கோயில் சென்றார். விழுந்து வணங்கினார். "தேவர் தம் பொருட்டு நஞ்சுண்ட நிமலா! ஒப்பற்ற இறைவா! மெய்யடியார்கள் வழிபாடு தடையுறும் வண்ணம் எனது நன்செய்யும் புன்செய்யும் விளையவில்லை. கடன் கொடுப்பார் எவருமிலர். எனவே கடன் கொடுப்பாரைக் காட்டியருள்க! இன்றேல் இப்பொழுதே உயிரை விட்டு விடுவேன்" என்று வேண்டினார்.

அப்பொழுது விசும்பொலி ஒன்று வானிலிருந்து வந்தது. "வேளாண்குடித் தலைவனே! நீ அஞ்சாதே! உன் வீட்டில் இன்று செந்நெல்லாகிய வெள்ளிய அரிசிக்கோட்டை ஒன்று சேர்த்துள்ளோம். அது எப்பொழுதும் எடுக்க எடுக்கக் குறையாது. நீ நாள்தோறும் அதனை பூசை செய். பின் அதில் வேண்டும் அளவிற்கு எடுத்துக்கொள். சிவநேயம் குன்றாத அடியார்களுக்கு அமுதளி. ஏனைய அறங்களையும் செய்வாயாக! முடிவில் உனக்கு வீடு பேற்றினைத் தந்தருள்வோம்"!

அடியார்க்குநல்லான் உலவாக்கோட்டை பெறுதல் :

விசும்பொலியைக் கேட்டு வியந்து மகிழ்ந்த அடியார்க்குநல்லான் சோமசுந்தரக்கடவுளைப் பலமுறை பணிந்து வணங்கினார். பின் வீடு திரும்பினார். முற்பிறப்பின் புண்ணியப் பயன்போலத் தன் வீட்டில் அரிசிக்கோட்டையைக் கண்டார். மகிழ்ந்தார். இறைவன் அருளிய உலவாக்கோட்டையை (எடுக்க எடுக்கக் குறையாத அரிசிக்கோட்டை). சந்தனம், பூ, தூபம், தீபம் முதலியவற்றால் அதனைப் பூசித்தனர். அன்னத்திற்காகவும், அதற்கு வேண்டிய கறிப்பொருள்கள் முதலியவற்றைப் பெறும் பொருட்டும் வேண்டிய அளவு அரிசியைக் கொண்டனர். அந்தணர்க்கும், தென்புலத்தவர்க்கும், தெய்வங்கட்கும், உறவினர்க்கும், விருந்தினர்க்கும், நட்பினர்கும், மேகம் போல் வரையாது உணவு வழங்கினர். வறுமையின்றி செல்வத்திலே குபேரன் போல வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு அடியார்க்குநல்லான், பலகாலம் அறம் செய்து வாழ்ந்து வந்தார். பின்னர் தன் மனைவியோடும், சுற்றத்தாரோடும் சிவ சாரூப்பியப் பதவி பெற்றுச் சிவபுரம் சென்றடைந்தார்.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/4 செல்வி **A. ரம்யா** சித்திரை சாத்தனுட பூர்வீகம் : பெரியநெல்லிக்கொல்லை	30.07.98 155 cm	B.E. (ECE)	ZOHO Corporation Chennai	திரு. K. ஆறுமுகம், 43, கார்த்திக் நகர், மாடம்பாக்கம் மெயின் ரோடு, கூடுவாஞ்சேரி – 603 202. Cell : 99446 62898
B 2/4 செல்வி **வ. ராஜலஷ்மி** (எ) **உஷா** மூலம் – 2ம் பாதம் குவாவுடை பூர்வீகம் : திருவில்லிப்புத்தூர் விருப்பம் : பட்டம் பயின்று நல்ல பணியில் உள்ள மணமகன்	09.04.96	B.E (Electrical & Electronics Engineering)	Senior System Developer TEMENOS Nungambakkam, Chennai Rs. 60,000/PM	திரு. தி. வடமலையப்பன், ''ஷண்முகப்ரியா'', 4–3/29, மூன்றாவது தெரு, ரயிலார் நகர், மதுரை – 625 018. Cell : 96007 49161, 99400 37402 E-mail : vadamalaiappan@gmail.com
B 3/4 செல்வி **A. சூர்யா** அசுபதி சாத்தனுட பூர்வீகம் : பெருந்தோட்டம் விருப்பம் : பணியில் உள்ள வரன்.	07.01.98 5' - 4"	M.Sc., Physics	Process Executive Red Serv. Globel Solutions, Guindy Chennai	திரு. S. அகோரம், Plot No. 54, 5வது மெயின் ரோடு, சாமிநாத நகர், கொட்டிவாக்கம். சென்னை – 600 041. Cell : 94442 46497, 94450 52040
B 4/4 செல்வி **த. சுகன்யா** புனர்பூசம் 2ம் பாதம் பென்னாகட பூர்வீகம் : பொய்கைக்குடி விருப்பம் : பணியில் உள்ள வரன்.	25.05.98 155 cm		கணிப்பொறி உதவியாளர் TCMF மயிலாடுதுறை	திரு. ரெ. தர்மலிங்கம், 3/215, வடக்குத் தெரு, பொய்கைக்குடி, காளி அஞ்சல், மயிலாடுதுறை மாவட்டம். Cell : 97517 32853, 89405 26853, 89038 36853
B 5/4 செல்வி **S. லாவண்யா** அஸ்வினி மழுவுட பூர்வீகம் : கதிராமங்கலம் விருப்பம் : சமபடிப்பு, சம வேலை சென்னையில் பணிபுரியும் 1994க்கு பிறகு பிறந்த வரன்.	02.03.98 160 cm	B.E., (Computer Science)	Software Engineer in Dowell Technology Pvt. Ltd.	திரு. V. சேகர், 16A, யமுனா தெரு, பாலாஜி நகர், இரும்புலியூர், தாம்பரம் கிழக்கு, சென்னை – 600 059. Cell : 94441 49162, 97901 16679, 97908 09027
B 6/4 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன்	16.09.95 155 cm	B.E. (Com. Sci) M.Sc., Cyber Forensics and Information Security	Associate in MNC Bangalore (Top 5 Company)	திரு. N. Gowrishankar, 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044 – 2363 8284
B 7/4 செல்வி **V. நந்தினி** திருவோணம் செம்பதரிய பூர்வீகம் : பரதூர் – சிதம்பரம்	24.03.98 5' - 3"	B.E. (ECE)	Software Engineer Chennai Rs. 11 Lakhs/PA	திரு. S. வாசுதேவன், 8, மீனாட்சி அவென்யு, சாந்தி நகர், சிதம்பரம் – 608 001. Cell : 82206 30973, 99443 27563

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/4 செல்வி **R. பானுபிரியா** கேட்டை 3ம் பாதம் எரவுட பூர்வீகம் : முல்லையூர் விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன்.	21.11.98 165 cm	B.E. (ECE)	Sr. Software Engineer Fresh Works Technologies Chennai	திரு. T. இரமேஷ், 5, சரோ இரத்தினபுரம், புத்தர் தெரு, பெண்ணாடம் – 606 105. Cell : 94885 29923, 90801 87596
B 9/4 செல்வி **T. செல்வபிரியா** ஆயில்யம் 4ம் பாதம் சேவுட பூர்வீகம் : திருப்புன்கூர் – சீர்காழி Tk	14.08.96	B.E., MBA	Relationship Manager ICICI Bank	திரு. K. தாமரைச்செல்வன், 184, சிவசக்தி நகர், 8வது குறுக்குத் தெரு, சிதம்பரம் – 608 001. Cell : 87607 42498, 73734 67258
B 10/4 செல்வி **G. அகல்யா** பூராடம் சாத்துக்குட பூர்வீகம் : நெடுந்தெரு விருப்பம் : பணியில் உள்ள வரன்.	05.10.2000 165 cm	M.Sc.,		திருமதி. G. பரிமளா, 2/35, வெள்ளாளர் தெரு, நெடுந் தெரு, பாபநாசம் Tk, தஞ்சாவூர் – 614 210. Cell : 83003 97737, 98945 90568
B 11/4 செல்வி **க. சுஜிதா** பூரட்டாதி பருவுட பூர்வீகம் : நெடுங்காடு விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன்	28.08.99 5' - 0"	M.A., B.Ed., (Studying) English		திரு. மு. கந்தன், 6, கார்காத்தார் தெரு, நெடுங்காடு – 609 603. காரைக்கால் Cell : 83001 01085, 93858 08597
B 12/4 செல்வி **R. அனுக்கிருபா** மகம் மருங்குட பூர்வீகம் : ஆக்கூர் விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன்	10.05.92 169 cm	B.Com., MBA.,	TCS, Chennai	திரு. A. ராஜாராமன், 7/4, கல்லூரி மேற்கு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106. Cell : 97908 80266, 93809 97467 Phone : 044 – 2363 8205 E-mail : rajaramchennai2010@gmail.com
B 13/4 செல்வி **P. கிரிஜா** கேட்டை வேளா பூர்வீகம் : சத்தியவாடி விருப்பம் : நல்ல பழக்கம், நல்ல வேலை, நல்ல குடும்பத்திலுள்ள வரன்.	16.05.95 165 cm	M.C.A.,	HDFC in Chennai	திருமதி. P. விருத்தாம்பிகை, 6/11, ஜெயில் தெரு, விருத்தாசலம் – 606 001, Cell : 81226 86074, 84384 06302
B 14/4 செல்வி **K. ரூபசுவாதிகா** உத்திரட்டாதி செஞ்சிலுட பூர்வீகம் : சி. சாத்தமங்கலம் – சிதம்பரம் (Tk)	20.06.95 162 cm	B.E. (ECE)	Continental Automotive, Bangalore Rs. 14 Lakhs/PA	திரு. K.G. குமாரசாமி, C11, Co-op Bank Road, Block 16, Neyveli - 607 801. Cell : 94420 33990
B 15/4 செல்வி **R. சுவாதி** பூராடம் வன்னமுட பூர்வீகம் : காவனூர்	13.11.99 162 cm	B.E. CSE	Software Engineer edl Technologies Chennai	திரு. T. ரெங்கசாமி, பிளாட் எண். 35, அன்னை வேளாங்கண்ணி நகர் விரிவு–2, முகலிவாக்கம், சென்னை – 600 125 Cell : 98402 00981 (W) 97890 87664 (W)

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 16/4 செல்வி **திவ்யா** விசாகம் 1ம் பாதம் காஞ்சனமுடையார் பூர்வீகம் : கும்பகோணம் விருப்பம் : US வரன்.	23.07.88 5' - 1"	B.E. MBA (USA)	தனியார் USA	திருமதி. சித்ரா அசோகன், 197, 1st South Cross Street, கபாலீஸ்வரர் நகர், நீலாங்கரை, சென்னை – 600 115. Cell : 98711 00570
B 17/4 செல்வி **ஆ. தேவதர்ஷினி** ஆயில்யம் 2ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : வடகுமரை	10.5.2000 173 cm	M.Sc., B.Ed.,		திரு. ஆறுமுகம், 2/180, அங்காளம்மன் கோவில் தெரு, வடகுமரை கிராமம், தென்குமரை அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் – 636 121. Cell : 94433 13193 E-mail : arumugamvallalar1@gmail.com
B 18/4 செல்வி **E. தனஸ்ரீ** ஹஸ்தம் காருடையான் பூர்வீகம் : நெய்தவாசல் (பூம்புகார்)	28.6.2001 153 cm	B.E. (EEE)	LCS Controls Pvt. Ltd. Chennai	திரு. S. எழிலரசன், 24, ஸ்ரீலட்சுமி நகர், சௌத்திரி நகர் மெயின் ரோடு, வளசரவாக்கம், சென்னை – 600 087. Cell : 94452 77726, 94441 29558, 98411 88606

திருச்சி கார்காத்தார் சங்கம்

50-வது ஆண்டு பொன்விழா அறிவிப்பு

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் பொன்விழா வருகின்ற 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரிஸ்டோ ஹோட்டல் **L.K.S. மஹாலில்** மிக சிறப்பாக நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சி கொண்டாட்டத்தை தொடர்ந்து நம் வரலாறுகளை உள்ளடக்கிய ஆவணமாக ஒரு வண்ண மலர் வெளியிடவும் திட்டமிட்டு இருக்கின்றோம். அந்த மலரில் உங்களது விளம்பரங்களை அளித்து எங்கள் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். **A4 Size** பொன்விழா மலரில் விளம்பரம் (கலரில் மட்டும்) வெளியிட கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முழு பக்கம் : ரூ.6000/-
அரை பக்கம் : ரூ.3000/-
} **Multi Colour**

விளம்பர குழு

திரு. நவிலு. **M. சுப்ரமணியன்** 99439 33990
திரு. **Er.S. சோமசுந்தரம்** 90950 99869
E-mail : maniprinters.cs@gmail.com

M. பாலசுப்ரமணியன் 98424 44322
C.சுப்ரமணியன் 98424 75125
N.பாண்டியன் 94879 96520

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/4 செல்வன் **ச. விஷால்** ஆயில்யம் – 4 அறங்குட ஆக்கூர் (மயிலாடுதுறை) விருப்பம் : பணியில் உள்ள வரன்	08.08.94 165 cm	B.E., MBA.,	Software Engineer Cognizant (CTS), Chennai Rs. 17 Lakhs/PA	திரு. இரா. சந்திரகுமார், No. 1, இராஜா ராமண்ணா தெரு, எம்.எம்.டி.ஏ. நகர், சிட்லபாக்கம், சென்னை–600 064. Cell : 94443 14601, 70106 32024
G 2/4 செல்வன் **ப. ஸ்ரீராம்** ஆயில்யம் சாத்தனுட பூர்வீகம் : வயலூர் – குன்னம் பெரம்பலூர் மாவட்டம் விருப்பம் : தகுந்த வரன்	28.10.94 165 cm	B.E.(CSC)	IT Analyst TCS, Chennai Rs. 40,000/PM	திருமதி. P. உமா, 5-A/84C, ரோஸ் நகர், பெரம்பலூர் – 621 212. Cell : 97874 84028, 97505 29615
G 3/4 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyur	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	ZOHO Corporation Chennai Rs. 18 Lakhs /PA	திரு. T. ராமலிங்கம், 1/183, Perumal Koil Street, Mullaiyur, Sendurai Taluk, Ariyalur Dist. Cell : 99655 57000
G 4/4 செல்வன் **K.S. ஸ்ரீவத்ஸன்** உத்திரட்டாதி விளந்துட பூர்வீகம் : குணமங்கலம் – அரியலூர் அருகில்	23.03.93 174 cm	B.Tech., MBA	Product Manager Decent Salary	திரு. V. கொளஞ்சிகண்ணன், 3C, ராயல் சிட்டி அப்பாட்மெண்ட்ஸ், திருச்சி – 620 002. Cell : 99441 45566
G 5/4 செல்வன் **S. பரணீதரன்** பரணி வேலுடையான் பூர்வீகம் : விருத்தாசலம் விருப்பம் : படித்த, வேலையில் உள்ள வரன்.	29.04.95 178 cm	B.Tech.,	Cognizant, Chennai Rs. 10 Lakhs /PA	திரு. V. சிவக்குமார், Plot No. 50, வெண்பா அவென்யூ, 2வது தெரு, சித்தாலப்பாக்கம், சென்னை – 600 126. Cell : 94445 08005, 94445 08001 Phone : 044 – 22770471
G 6/4 செல்வன் **V. விக்னேஷ்வரன்** ரேவதி அத்திமட	14.02.94 167 cm	B.E., (Mech) MBA (Finance)	Quality Control Ashok Leyland, Chennai	திரு. V. வெங்கடேசன், 2/75/1, வெள்ளாளர் தெரு, விளக்குடி, திருத்துறைபூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் – 614 715. Cell : 94425 32490, 82202 40768
G 7/4 செல்வன் **S. முத்துவேல்** திருவேணம் நெப்புகுட பூர்வீகம் : கூடலூர்	25.05.89 5' - 4"	B.E., (Mech)	Private Sector Tirupur	திரு. G. செல்வம் பிள்ளை, பெருமாள் கோயில் தெரு, கூடலூர் & PO, திட்டக்குடி Tk., கடலூர் Dt. – 606 111. Cell : 95243 25807, 63805 66066 E-mail : gsm40831@gmail.com
G 8/4 செல்வன் **S. பரணிதரன்** பூராடம் தனவாருடைய பூர்வீகம் : திருநெல்வேலி	27.07.88 5' - 7"	B.Com., MBA.,	Team Leader TCS, Chennai Rs 8 Lakhs/PA	திரு. A.C. Subramanian, 8A, Jothi Nagar 4th Street, Emerald Street, Chitthalapakkam, Chennai - 600 064 Cell : 94869 17683 / 76391 09296

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/4 செல்வன் **D.ஸ்ரீசபரிராஜன்** பூரம் எரவுட பூர்வீகம் : இறையூர் விருப்பம் : சமபடிப்பு, நல்ல குணமுள்ள வரன்	22.05.91 5' - 6"	B.E. (EEE),	Rotery Engineering, (P) Ltd., Singapore Rs. 10 Lakhs/ PA	திரு. A. தட்சிணாமூர்த்தி, 180/A, கொத்தட்டை ரோடு, இறையூர் (PO) , திட்டக்குடி Tk., கடலூர் DT. – 606 111. Cell : 97879 74287
G 10/4 செல்வன் **V. Gunaseelan** Uthiram Sembuthariya பூர்வீகம் : Thunijiramedu, Chidambaram விருப்பம் : Suitable Alliance	06.01.91 170 cm	B.Sc., (CSE) BBA Banking MBA	Deputy Branch Manager IDFC First Bank Pondicherry, Rs. 5,40,000/PA	திரு. C. Chinnasamy Pillai @ Gandhi Kodalikarupur, Cell : 94435 89944, 97893 46847
G 11/4 செல்வன் **சிவ. ஈஸ்வர்** சதயம் குருகுலராய பூர்வீகம் : விருத்தாசலம் விருப்பம் : படித்த நல்ல குணமுள்ள வரன்.	08.06.96 5' - 10"	B.E. Mechanical	Accenture India Pvt. Ltd., Chennai Rs. 11 Lakhs/PA	திரு. R. சிவக்குமார், 45, கடை வீதி, விருத்தாசலம் – 606 001. Cell : 94436 67467
G 12/4 செல்வன் **S. சரவணன்** உத்திரட்டாதி கானுட பூர்வீகம் : திருவாவடுதுறை விருப்பம் : வேலைக்கு செல்லும் / வேலைக்கு செல்ல விருப்பமுள்ள பெண்.	21.12.93 165 cm	B.E (Mechanical)	HCL Tech Rs. 7.5 Lakhs/PA	திரு. C. SEKAR No. 7, Thiru-Vi-Ka Street, New Perungalathur, Chennai - 600 063. Cell : 90920 62650
G 13/4 செல்வன் **B. சித்தார்த்** மகம் காளிங்கராய பூர்வீகம் : காவனூர் (ஸ்ரீமுஷ்ணம்)	21.07.93 5' - 7"	M.Tech., (Civil Engineering)	ABS Heights, Engineers & Constructions Own Company Chennai Rs. 15 Lakhs/PA	திரு. A. Balasubramanian, G1, C43, 13th Cross, Hindu Colony, Nanganallur, Chennai - 600 061. Cell : 99401 26323, 97899 42603
G 14/4 செல்வன் **செ. சிவாஅரவிந்** உத்திரம் சேமங்குட பூர்வீகம் : மயிலாடுதுறை விருப்பம் : Looking for Amicable Bride	23.10.92 167 cm	B.E (CS) MBA	QA Lead Engineer Servimos Technologies Pvt. Ltd., Chennai Rs. 10 Lakhs/PA	திரு. M. செல்வராஜ், 169A, சுந்தர் நகர், (Near Keerthi Garden) பூந்தமல்லி – 600 056. Cell : 95971 17982, 94441 10479, 94446 19936
G 15/4 செல்வன் **J. மனோஜ்குமார்** பூரம் காருடையான் பூர்வீகம் : திருவிசநல்லூர் (கும்பகோணம்)	05.06.95	B.Tech., Civil	Own Construction & Private Surveyor	திரு. S. ஜோதிமகாலிங்கம், 10/13-815, ஜைனமுதலி தெரு, கருந்தட்டான்குடி தஞ்சாவூர் – 613 002. Cell : 99521 42703 / 85083 05695
G 16/4 செல்வன் **S. விக்னேஷ்** பரணி பங்களதரிய பூர்வீகம் : கீழ்நத்தம், சிதம்பரம் விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன்.	23.06.95 5' - 7"	M.Sc., (CS)	System Administrator NLGIC Support Service Pvt. Ltd., Nungambakkam Rs. 35,000/PM	திரு. S. சுந்தரம், பிளாட் எண். 34, வேலன் நகர், கண்ணாங்குடி மெயின் ரோடு, சிதம்பரம் – 608 001. Cell : 99428 57747 / 73055 81424 E-mail:sundaramnirmala.90@gmail.com

குருபரம்பரை என்றால் என்ன?

தி. கபீர்தாஸ், சிதம்பரம். செல் : 9445473386

சிவனாகிய பரனும் சக்தியாகிய பரையும் அருளிய உபதேசத்தை தானும் தனது சீடர்களும் தொடர்ந்து கடைபிடித்து வருவதையே 'குருபரம்பரை' என்பர். ஸ்ரீகண்டபரமேஸ்வரன் முதன் முதல் நந்தியம் பெருமானுக்கு உபதேசம் செய்தார். இவரே முதல் சீடராவார். பின்வரும் சீடருக்கெல்லாம் நந்தியம் பெருமானே குருவாகத் திகழ்வார்.

பரமகுரவன் ஆன்மாவின் பக்குவத்துக்கு ஏற்ப குருவாக நிற்பான். குரவன் என்றால் குருநாதர்தான். கயிலையில் உள்ள தேவ பரம்பரையை அகச் சந்தான குரவர் என்றும் பூவுலகில் உள்ள பூதப்பரம்பரையை புறச்சந்தான குரவர் என்று கூறுவது மரபு.

'கு' என்றால் இருள். 'ரு' என்றால் ஒளி, உயிர்களின் அஞ்ஞான இருளைப் போக்கி, மெய்ஞான ஒளியை தருபவரே குரு. சிறியவராகிய சீடரை பெரியவராக ஆக்கும் பணியை செய்பவரும் இவரே. உயிர்கள் பாசத்தை விட்டு இறைவனை அடையச் செய்பவரும் இவரே. உயிர்கள் பாசத்தை விட்டு இறைவனை அடையச் செய்பவரும் இவரே. இறைவன் ஒளி. இறையருள் பெற்ற குருநாதர் காட்டும் நெறிக்கு 'ஒளிநெறி' என்று பெயர். குருநாதர் சிவஞான ஒளியை, சீடர்களை சிவஞானப் பிரகாசமாக்கி, சிவஒளியுடன் ஒன்றிடும் சிவப்பிரகாசமாய் சேர்ப்பதே 'ஞானதீபப் பரம்பரை' யாகும்.

பிறவிகளில் உயர்ந்தது மனிதப்பிறவி. சைவ சமயத்தில் பிறந்து, நற்குருவை ஆசானாகப் பெற்று, சிவானுக்கிரகம் பெறுவது சிறப்பு. சிவன் இவர்களுக்கு உள்நின்று உணர்த்தியும், தாமே எழுந்தருளியும், மானுட சட்டைத் தாங்கி குருவை அதிட்டித்தும் அருளமுதம் வழங்குகிறார். குருநாதரே சீடரின் அகஅழுக்கை நீக்கி, அறிவை அகலமாக்கி, இறையுணர்வை பெருக்கி, இறைவனைக் காட்டி, திருநெறியைச் செலுத்தி, திருவடி நிழலை ஆன்மா அனுபவிக்கச் செய்கிறார்.

சீடர்கள் குருநாதனை வழிபடுவது மிக மிக முக்கியம். சிவமே குருவாக வருவதால் சிவனுக்குரிய வழிபாடு அனைத்தும் குருவுக்கு செய்ய வேண்டும். ஆதிகுரு முதல் தம்குரு வரை அனைவருக்கும் குருபூசை செய்வது குருபரம்பரையாகும். குருவின் அவதார நாளை ஜெயந்தி விழாவாகவும், நினைவு நாளை குருபூசை விழாவாகவும் கொண்டாட வேண்டும்.

குருவானவர் சீடருக்கு தீக்கை அளிக்க வேண்டும். தீக்கையில் சிறப்பு தீக்கை, சாதா தீக்கை என இருவகையுண்டு. சிறப்பு தீக்கையில் சமய தீக்கை, விசேட தீக்கை, நிர்வான தீக்கை என மூவகைப்படும் சாதா தீக்கையில் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல் யோகம், அவுத்திரி, சாம்பவர் என்பனபோல பலவகைகள் உண்டு.

அகஉலகத்தை உணர குருநாதர் தேவை. அகஅழுக்காகிய மலங்களை அகற்ற குருவினால் மட்டுமே முடியும். ஏட்டுக் கல்வியால் சாதிக்க முடியாததை குருவின் ஞானமொழி சாதிக்கும். வித்தியா கல்வி அறிவை வளர்க்கும். உலகில் வளமுடன் வாழ்வதற்கு இக்கல்வி உதவும். இவரை எப்போதும் மறவாது வணங்க வேண்டும். ஆனால், அது ஆன்மாவை பக்குவப்படுத்தாது. ஆன்மாவின் இருளை அகற்றி பாசத்தை நீக்கி, வீடுபேறு பெற குருவின்றி உணர்வு பெற முடியாது. ஆகமம், வேதம் அனைத்தும் குருவின் மூலமாகவே உபதேசம் பெற வேண்டும். சிவபூசை போன்றவற்றை பிறர் செய்வதைப் பார்த்து அல்லது அவரிடம் கேட்டு செய்யக்கூடாது. ஒரு ஞான குருவிடம் உபதேசம் பெற்றுதான் செய்ய வேண்டும்.

குருவழிபாடு இன்றியமையாதது. பள்ளிக் கல்வியளிப்பவர் வித்யாகுரு. இவர் உலகில் வளமுடன் வாழ வழி வகுப்பார். இவரை எப்போதும் மறவாது வணங்க வேண்டும். போத குருவும், தீட்சா குருவும் ஞானக்கல்வியை அளிப்பார்கள். குருநாதர் அருகில் இருந்து பணிவிடை செய்வது அளப்பரிய பேறாகும். நாள்தோறும் குருதரிசனம் செய்வது கோடி புண்ணியமாகும். குருவாழி! குருவே துணை!! குரு திருவடியே உறுதுணை!!!

வருந்துகிறோம்

சீர்காழி, வைதீஸ்வரன்கோயில் செண்பகவல்லி அக்ரஹாரத்தில் வசித்த திரு. G. பாலுப் பிள்ளை அவர்கள் 6–3–23 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

மாநில செயற்குழு கூட்டம் 22–3–2023 அன்று மயிலாடுதுறை மெய்கண்டார் ITI வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய பொருள்களும் எடுக்கப்பட்ட முடிவுகளும்

ITI ஊழியர்களுக்கு சம்பளம் உயர்வும்,

ITI வளாகத்தில் காலியாக உள்ள இடத்தினை தவத்திரு. குன்றக்குடி மடாதிபதியை சந்தித்து நமக்கென்று கேட்டு பெறுவது என்றும்,

ITI செயல்பாடுகளை ஆய்வு செய்து ஆலோசனை கூற மாநில செயற்குழு உறுப்பினர் திரு. S. பாலசுப்ரமணியன், மண்டல செயலாளர் விருத்தாச்சலம்–பெண்ணாடம் பகுதி–3 அவர்களை நியமிக்கவும்,

ஓட்டுனர் பயிற்சி பள்ளியை தொடர்ந்து சிறப்பாக நடத்துவது என்றும்,

சந்தா செலுத்தாத சங்கங்களுக்கு காலக்கெடு 30–04–2023 வரை நீடித்து நிர்ணயம் செய்தும்,

10% இட ஒதுக்கீடு சம்பந்தமான செயலாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்த கருத்துக்களை ஏற்றுக்கொள்வது என்றும்,

திருச்சியில் நடைபெற உள்ள அனைத்து வேளாளர் கூட்டமைப்பின் மாநில மாநாடு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் வருகிற 02–04–23 அன்று திருச்சியில் நடைபெற இருக்கின்றது. அதில் 10% இட ஒதுக்கீடு குறித்து சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்திட அவர்கள் தயாராக இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒத்துழைப்பு அளிப்பது என்றும் அந்த கூட்டத்தில் பங்கேற்று நமது கருத்துக்களை விளக்கி சொல்வது என்றும்,

மாநில சங்க செயற்குழு மற்றும் இணைப்பு சங்க நிர்வாகிகள் பட்டியல் சங்க நிர்வாகிகளின் பார்வைக்காக தரப்பட்டிருந்தது. அவர்கள் அதனை உறுதி செய்த பின்பு கையேடு வெளியிடுவது என்றும்,

வருகின்ற ஏப்ரல் 30–க்குள் அந்தந்த பகுதி துணைத்தலைவர்கள் மற்றும் மண்டல செயலாளர்கள் இணைந்து அனைத்து கிளை சங்கங்களின் கூட்டங்களை நடத்தி அவர்கள் சந்தா கட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். சந்தா கட்டாத சங்கங்கள் கூட்டமைப்பில் இருந்து விலக்கி வைக்கவும்,

தொடர்ந்து மூன்று செயற்குழு கூட்டத்திற்கு வருகை தராத செயற்குழு உறுப்பினர்களின் பதவி நீக்க நடவடிக்கை எடுக்க நிர்வாக குழுவிற்கு அதிகாரம் வழங்கியும்,

நூற்றாண்டு விழாவினை மிக சிறப்பாக நடத்திய சென்னை சங்கத்திற்கு பாராட்டு தெரிவித்தும்,

பாண்டிச்சேரி மண்டல உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று திரு. M.A.J. ராஜேந்திரன் அவர்களை மண்டலத் துணைத்தலைவராக நியமிக்கவும்,

திருநெல்வேலி சங்கங்களின் கோரிக்கையை ஏற்று திருநெல்வேலி பகுதி–2–துணைத்தலைவராக திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பிற விவாதங்கள் :

ITI கட்டிடம் சீராக பராமரிக்கப்பட வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது.

ITI பராமரிப்பதற்கு நன்கொடை மற்றும் புரவலர் நிதி வசூலிக்கலாம் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. வேலை வாய்ப்புடன் கூடிய பட்டய படிப்புகள் (Professional courses) ஐ நமது சங்கம் தொடங்கி நடத்தலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. விவாதங்களுக்கு பிறகு அமைப்பு செயலாளர் திரு. கைலை. சண்முகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- M. பாலசுப்ரமணியன் பிள்ளை,
பொதுச்செயலாளர்.

நங்கநல்லூர்

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 19–3–2023 அன்று மடிப்பாக்கத்தில் நடைபெற்றது.

நெய்குப்பை இராஜமாணிக்கம் பிள்ளையின் மறைவுக்கும், ஹெலிகாப்டர் விபத்தில் மரணமடைந்த தமிழகத்தை சேர்ந்த ராணுவ வீரருக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. 19–2–2023 முதல் இன்று வரை சங்க நிகழ்வுகளும் செயலாளரால் விவரிக்கப்பட்டது. சங்க பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவு கணக்கு குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் நீர்மோர் வழங்கும் பணி தொடர தீர்மானிக்கப்பட்டது.

விதவை உதவிதொகையினை குறிப்பிட்ட தேதியில் தாமதம் தவிர்த்து பயனாளிக்கு அனுப்பி வைக்க சங்க பொருளாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

செயற்குழு கூட்டத்துக்கு சென்னை மண்டலச் செயலாளர் திரு. M. பாலமுருகன், KBF கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

50–க்கும் மேற்பட்ட பெருநகர மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு சமையல் பாத்திரம் வழங்கிய மக்கள் சேவை நாயகன் T.N. முத்துக்குமாரசாமி அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

USA-ல் Aerospace Engg. 3rd year பயிலும் சங்க துணைத்தலைவர் திரு. G. சுவாமிநாதனின் பெயரன் சிவிமணியன், முதன் முதலாக தனியாக விமானத்தை இயக்கி பயணித்ததற்கு சங்கத்தின் வாழ்த்துக்கள் பாராட்டுகள்.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. சி. வள்ளிநாயகம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– க. சரவணன்,
தலைவர்.

நங்கநல்லூர் மகளிர் அணி

''மகளிர் தின விழா'', மடிப்பாக்கம் ''லஷ்மி கோவிந்தசாமி கல்ச்சுரல் ஹாலில்'' வெகு சிறப்பாக இனிதே நடைபெற்றது.

காலை 11.00 மணி அளவில் சிறுமி ரேணுதர்ஷிணி மற்றும் சிறுவன் தரணிசந்திரன் ஆகிய இருவரின் இறைவணக்கப் பாடலுடன், மகளிர் அணி தலைவி திருமதி. கலையரசி இராஜசேகரன் தலைமையில், சிறப்பு விருந்தினர்கள் திருமதி. டாக்டர். சுபத்ரா, திருமதி. டாக்டர். கல்யாணி இளங்கோவன், செயலாளர் திருமதி. வனஜா சரவணன், திருமதி. வசந்தா சுவாமிநாதன் & திருமதி. ராஜிசெல்வகுமார் ஆகியவர்கள் மங்கள விளக்கேற்றிட விழா இனிதே துவங்கியது.

சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் சுபத்ரா, Senior consultant, Radiation oncology, "Appollo Cancer Institute", Kamakshi Memorial Hospital மற்றும் டாக்டர். கல்யாணி இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு விழாவுக்கு சிறப்பு சேர்த்தனர். சிறப்பு விருந்தினர் திருமதி. டாக்டர். சுபத்ரா அவர்கள் பெண்கள் உடல்நலம் பேணுவதில் அவசியம் குறித்து வெகு எளிமையாக அனைத்து மகளிரும் புரிந்து கொள்ளும் வகையிலும் மகளிருக்கு ஏற்படும் கேன்சர் வகைகள் குறித்தும், ஆண்களின் கேன்சர் வகைகள் குறித்தும் மகளிர் / ஆடவர் ஆகியவர்களின் சந்தேகங்கள் குறித்து விளக்கம் அளித்தார்கள். டாக்டர் சுபத்ரா அவர்களுக்கு ''நினைவுப்பரிசு'' வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். மற்றும் விழாவிற்கு வந்திருந்தோரில் அகவையில் மூத்த மகளிர் மூவர் மற்றும் டாக்டர். கல்யாணி இளங்கோவன் ஆகியோருக்கு கிரீடம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களின் அறிவுரையும் பெறப்பட்டது.

2022–2023–ம் ஆண்டுகளின் மகளிர் அணியின் செயல்பாடுகள் குறித்து திருமதி. வனஜா சரவணன், செயலாளர் ஆண்டறிக்கை வழங்கினார்கள்.

சங்க மகளிரணி உறுப்பினர் திருமதி. கிருஷ்ணவேணி செந்தில்நாதன் என்கிற கீதா அவர்கள் Accounts Officer-ஆக பதவி உயர்வு பெற்றமைக்கு (புதுக்கோட்டை அலுவலகத்தில்) பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

மகளிர் மற்றும் ஆடவருக்கு ஒருங்கிணைந்த கலை நிகழ்ச்சி மற்றும் மகளிருக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கலந்து கொண்ட அனைத்து மகளிருக்கும் நினைபுப்பரிசு வழங்கப்பட்டது. திருமதி. கிருஷ்ணவேணி செந்தில்நாதன் அவர்கள் நன்றி கூறினார். திருமதி. கலையரசி இராஜசேகரன் குடும்பத்தினர் சுவையான மதிய உணவு அளித்து மகிழ்ந்தனர்.

– த. வனஜா,
செயலாளர், மகளிரணி.

அண்ணாநகர் :

சங்க கூட்டம் 12–2–23 மற்றும் 12.3.23 தேதிகளில் அன்று கொரட்டூரில் நடைபெற்றது.

சங்க உறுப்பினர் திரு. கண்ணன் அவர்களின் மறைவிற்கும் திரு. செல்வ கணபதி அவர்களின் தந்தை டாக்டர் நடனசபாபதி அவர்களின் மறைவிற்கும், கொத்தட்டை ஆறுமுகம் பிள்ளை அவர்களின் மறைவிற்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் திரு. ரவிக்குமார் மற்றும் திரு. சுகுமார் இல்ல திருமணங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ஆண்டு விழாவை அக்டோபர் 2 அன்று நடத்தவும், மறைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் கடிதம் அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் ஆண்டு சந்தா உறுப்பினர்களுக்கு ரூ. 1000 செலுத்தி ஆயுட் கால உறுப்பினராக கடிதம் எழுதவும், சங்கத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட ஏழு மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கிய CREW அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்தும், மாசி மாத அமாவாசையன்று புழல் திருமூலநாதர் கோவிலுக்கு சென்று அபிஷேக ஆராதனை செய்து, 250 பேருக்கு அன்னதானம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளை மூலம் நம் இனத்தை சார்ந்த 21 பள்ளி மாணவர்களுக்கு ரூ. 5000/– வீதம் வழங்கப்பட்டது என்பதை அறக்கட்டளை தலைவர் திரு. தியாகராஜன் அவர்கள் தெரிவித்தார்கள் கொண்டார்.

நன்றியுரையினை திரு. சி.எம்.டி.ஏ. சிவகுமார் அவர்களும், கண்ணன் அவர்களும் தெரிவித்தார்கள்.

என். ஆனந்தகணபதி,
செயலர்.
9094682811

குரோம்பேட்டை :

28–03–23 காலை 8.00 மணி அளவில் தியாகி. பரலி. சு. நெல்லையப்பர் நினைவு நாள் வெகு சிறப்பாக கொண்டாடபட்டது.

நீதியரசர் (ஓய்வு) திரு. வள்ளிநாயகம் அவர்கள் தலைமையில் பல்லவபுரம் MLA திரு. இ. கருணாநிதி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், கார்காத்தார் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்கள், சென்னை கார்காத்தார் சங்க தலைவர் திரு. சபா. சிவகுமார், திரு. USSR. நடராஜன், மனிதநேயம் திரு. முத்துக்குமாரசாமி, மண்டல தலைவர் திரு. தியாகராஜன், மற்றும் குரோம்பேட்டை சங்க தலைவர் திரு. S. மனோகர், செயலாளர் திரு. B. தியாகராஜன், முந்நாள் தலைவர்கள் திரு. R.S. அகோரம், திரு. T. முருகேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு. S. முருகன், திரு. R. ஆனந்தன், திரு. கல்யாணசுந்தரம் மற்றும் பலரும் இணை சங்கங்கள் சமூக அமைப்புகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர். விழாவில் பேசிய பல்லவபுரம் MLA இ.கருணாநிதி அவர்கள் குரோம்பேட்டையில் அமைந்து வரும் திரண்சார் மையத்திற்கு நெல்லையப்பர் பெயர் வைக்கவும், அங்கே அவரது சிலை நிறுவவும், அவரது நினைவு நாளை அரசு விழாவாக நடத்த ஆவன செய்வதாக உறுதியளித்தார். விழாவில் கூட்டமைப்பு தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்கள் காலை உணவு வழங்கினார். குரோம்பேட்டை சங்கம் நீர் மோரும் குடிநீர் வழங்கியது.

– பா. தியாகராஜன்,
செயலாளர்.

போரூர்

சங்க செயற்குழு கூட்டம் 2.4.23 (ஞாயிறு) அன்று காலை 10.00 மணிக்கு துணைத்தலைவர் திரு. குமரன் இல்லத்தில் நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

புதியதாக ஐந்து உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டது, Fixed Deposit Increse செய்யப்படுகிறது, ஆண்டு விழாவை செப்டம்பர் மாதத்தில் கொண்டாடுவது என்றும், ஆண்டு விழாவில் சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் பூர்த்தி ஆனவர்களுக்கு மரியாதை செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

திரு. சரவணன் (Pre polar) அவர்கள் காலை விருந்தளித்த திரு. குமரன் குடும்பத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

S. சந்திரமோகன்
செயலாளர்,
9444349940

பெருங்களத்தூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 11–03–2023 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட நடைபெற்றது. சென்ற கூட்டத்தின் தீர்மானங்கள் படிக்கப்பெற்று, பொருளாளர் திருமதி. சு. சாந்தி அவர்கள் சந்தா செலுத்தாத உறுப்பினர்களின் விபரங்களை எடுத்துக் கூறினார்கள். செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் சந்தா தொகையினை வசூல் செய்ய ஒத்துழைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

விளக்கு பூஜை நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டு வெயிலின் தாக்கம், இடம் முதலியவற்றை கருத்தில் கொண்டு நிர்வாகிகள் முடிவு செய்யவும், செயற்குழு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க செயற்குழு கூட்டத்தினை வெவ்வேறு பகுதிகளில் நடத்த முடிவு செய்து முதல் கூட்டம் வண்டலூரில் ஏப்ரல் 2023–ல் நடத்தவும், தேவைப்படும் உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை வழங்க மாநில சங்கத்துடன் கலந்து ஆலோசித்து செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

உறுப்பினர் ஒருவரின் மகளின் பள்ளி கல்விக் கட்டணமாக ரூ. 3,000/–ஐ நன்கொடையாளர் மூலம் பெறப்பட்டு சங்கம் மூலமாக வழங்கப்பட்டது.

தலைஞாயிறு தெய்வத்திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களின் துணைவியாரும், நமது செயற்குழு உறுப்பினர் கன்யாகுடி திரு. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களின் மாமியாருமாகிய திருமதி. பெரியநாயகி அம்மாள் வயது (93) மூப்பின் காரணமாக இறைவனடி சேர்ந்தமைக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. B. பாபு அவர்கள் நன்றி நவில அனைவரும் சேர்ந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கோ. இராஜகோபாலன்,
செயலாளர்.

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 4–3–23 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மகளிர்தினம் கொண்டாடுவது பற்றி முடிவு எடுத்து, அதன்படி 8–3–23 அன்று மகளிர் தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் மகளிர்க்கான போட்டிகள் நடத்தப்பட்டது. கேக் வெட்டி வெற்றி பெற்றவர்களுக்கும், போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

சங்க செயற்குழு கூட்டம் பொருளாளர் திரு. C. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற இனிதே நிறைவு பெற்றது.

மயிலாடுதுறை மகளிர் அணி.

மகளிர் அணியினர் திருமதிகள். பில்டெக் அருள்மொழி, கோமதி, காயத்ரி, சசிகலா, பாவை, வளர்மதி, விஜயலட்சுமி, கீதா மற்றும் மகளிர்கள் இணைந்து 05–02–2023 தைப்பூசம் மற்றும் பௌர்ணமி தினத்தில் உலக அமைதிக்காகவும், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரின் உடல் ஆரோக்கியத்திற்காகவும், துர்க்கை அம்மன் கோவில் மற்றும் முருக பெருமான் சன்னதியில் சிறப்பு பூஜை செய்தும், நெய் விளக்குகள் ஏற்றி வைத்தும் வழிபட்டனர். வருகை புரிந்தவர்களுக்கு கந்த சஷ்டி மற்றும் கந்த குரு கவசம் இணைந்த புத்தகமும் சங்கல்பம் செய்யப்பட்டு பிசாதமும் வழங்கப்பட்டது.

20–02–2023 மாலை மயூரநாதர் சன்னதியில் விநாயகர் பெருமானுக்கு நெய்விளக்கேற்றி மற்றும் அபயாம்பிகைக்கு அர்ச்சனை செய்து பிறகு பில்டெக் அருள்மொழி அவர்கள் இல்லத்தில் உலகமகளிர் தின விழா நிகழ்ச்சி செயல்பாடுகள் துவங்கப்பட்டது.

பில்டெக் அருள்மொழி.
தலைவி
8883468333.

செம்பனார்கோவில்

சங்க கூட்டம் 06–03–2023 அன்று செம்பனார் கோவில் பெரியார் வீதி திரு. ஆ. அகோரம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் மு.ம. செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்திய இல்லத்தாரின் மகன் வழி பெயர்த்தி செல்வி. சௌ. சஞ்சனா இறைவணக்கம் பாடிடவும், மகன்வழி பெயரன் செல்வன் சௌ. ஆதித்யா வரவேற்புரை ஆற்றிடவும் சென்ற மாத அறிக்கை மு.ம.செ. கோ.

வடிவேலு பிள்ளை வாசிக்கவும் சென்ற மாத வரவு செலவு அறிக்கையை பொருளாளர் M.C. செல்வராஜ் அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது.

கூட்ட தலைவர் அவரது உரையில் கூட்டம் நடத்திய இல்லத்தார். ஆ. அகோரம் பிள்ளை வல்லம் கிராமத்தை பூர்வீகமாக கொண்டவரும் தற்போது செம்பனார் கோவிலில் பெயரன், பெயர்த்தி, படிப்பு வசதிக்காக வசித்து வருவதாலும் நமது கார்குல சொந்தங்கள் அவரிடம் சென்று விவசாயம் மற்றும் கட்டடம் கட்டும் பணி சம்பந்தமாக கேட்டால் அதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் இன்முகத்தோடு செய்து கொடுப்பார் என்றும் கூறினார்கள். திரு. கணபதி நடனம் பிள்ளை சங்க வளர்ச்சி குறித்தும், மு. செயலாளர் திரு. V. வாசன் விருதுநகர் அ. பாண்டி மறைவு பற்றியும், அவர் ஆற்றிய பணி பற்றியும் பேசினார்கள்.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டல செயலாளர் திரு. லெ. ராமஜெயம், (விசலூர்) அவர்கள் தனது உரையில் அனைத்து சங்க கூட்டத்திலும் கலந்துகொண்டு மகளிர் அமைப்பு ஏற்படுத்தி, ஒன்றிய அளவில் மகளிர் சங்க கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்கள். மேலும் மண்டல செயலாளர் இறைவணக்கம், வரவேற்புரை ஆற்றிய இரு குழந்தைகளுக்கும் பேனா பரிசு வழங்கினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. இரவு சிற்றுண்டி, மாஸ்பால் இல்லத்தார் சார்பாக வழங்கப்பட்டது. திரு. ஆ. அகோரம் பிள்ளை மருமகள் திருமதி. கார்த்திகா சௌந்தரராஜன் அவர்கள் நன்றி கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,

செயலாளர்.

பரசலூர் :

05–3–2023 அன்று நக்கீரர் தெரு க. நெடுஞ்செழியன் இல்லத்தில் நெ. சித்ரா இணைவணக்கம் பாட நெ. அஸ்வின் ராஜ் வரவேற்புரை நிகழ்த்த க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது. செயலர் வீ. கண்ணன் மாதாந்திர அறிக்கை, பொருளாளர் S.M. விஜய் நிதிய அறிக்கையையும், தலைவர் க. கோவிந்தராஜன் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க கூட்டத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

சிறப்புரையாக திருமதி. செந்தமிழ்ச்செல்வி இராமலிங்கம் அவர்கள் வடலூர் இராமலிங்க அடிகளாரைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திரு. நெ. அஸ்வின் அவர்கள் இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று உரை ஆற்றினார். வரும் தமிழ் வருடப்பிறப்பிற்கு பஞ்சாங்கம் வழங்குவது பற்றி விவாதிக்கப்பட்டது. பரசலூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ வீரட்டேஸ்வரர் திருக்கோயிலில் உழவாரப்பணி செய்யப்பட்டது.

ஆண்களுக்கான பரிசு திரு. A. மதிவாணன், பெண்களுக்கான பரிசை திருமதி. ராஜேஸ்வரி கண்ணனும் பெற்றனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவிக்கப்பட்டது. துணைத்தலைவர் பேராசிரியர் திரு. V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன்,

செயலர்.

Cell: 9894960438

ஆக்கூர் :

மாதக் கூட்டம் 12–3–2023 அன்று ஆக்கூர் சிவன் கோவிலில், கௌரவத்தலைவர் டாக்டர் திரு. K. பாலக்கிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் சங்கத் தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை இறைவணக்கம் பாடினார்கள்.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கௌரவத்தலைவர், சங்க நிதியை பயன்படுத்துவதுக் குறித்தும், தலைவர் G. செல்வக்குமார் பிள்ளை புதிய பொறுப்பாளர்கள் தேர்வு குறித்தும் இந்த ஆண்டிற்கான பஞ்சாங்கம் அடுத்தக் கூட்டத்தில் வழங்குவது குறித்தும் பேசினார்கள். சந்தாதொகை வரும் சித்திரை மாதக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

செயலர் திரு. G. கோவிந்தராசு பிள்ளை அவர்களால் சென்றக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பொருளர் திரு. M.

சுந்தரேசன் பிள்ளை நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிக்க சங்கம் அதனை ஏற்றுக்கொண்டது.

சித்திரை மாதக்கூட்டத்தில் சங்கத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்வுசெய்தல், துக்கநிகழ்வுகளுக்கு ஏற்படும் செலவுகளுக்கு சங்க நிதியினை உடனடியாக வழங்கி, பின்னர் திரும்பப்பெறல், திருமண வாழ்த்துகள் வாசித்தளிக்கும்போது அதன் பிரதிகள் மணமன்றத்தில் அனைவருக்கும் வழங்குதல், பெருமாள் கோவில் கும்பாபிஷேக திருப்பணிக்கு உறுப்பினர்கள் இயன்ற அளவு பொருளுதவி வழங்குதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு திரு. A. பாலன் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. செல்வக்குமார்,
தலைவர்.
9942480320

மணிக்கிராமம்

சங்க கூட்டம் 04–03–2023 அன்று பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு தலைவர். திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. G. அன்பழகன் சிவபுராணமும், சென்ற மாத அறிக்கையும் வாசித்தார். பொருளர் திரு. T. கபிலன் வரவு செலவு கணக்குகளை படிக்கவும், சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது. தலைவர் தனது உரையில் உறுப்பினர்கள் அனைவரும் சங்க கூட்டத்திற்கு தவறாது பங்கேற்க வேண்டும் எனவும் உறுப்பினர்கள் அனைவரும் சந்தா தொகையை விரைந்து செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இயற்கை விவசாயத்தை பற்றி பொருளர் சிறப்பாக பேசினார். செயலர் எல்லோருக்கும் இரவு விருந்து அளித்தார். திரு. S. தர்மராஜன் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
செயலர்.

மேலப்பெரும்பள்ளம் :

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 05–03–2023 அன்று சங்க தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் சங்க உறுப்பினர்களை வரவேற்று, அ/மி "சீதளா தேவி" மாரியம்மன் கோவில் குடமுழுக்கு பற்றிய ஆலோசனை நடத்தினர்.

மாரியம்மன் கோவில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு விழாவிற்கு நம் கார்காத்தார் சார்பாக, குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ. 2000/– மட்டும் நன்கொடையாக அளிப்பதற்கு கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. பின்னர் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு சங்க கூட்டம் இனிதே முடிந்தது.

- B. இலட்சுமணன்,
தலைவர்.
9443783743

இராதாநல்லூர் :

12–03–2023 அன்று சங்க செயலர் இரா. மு.அ. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் செயற்குழு உறுப்பினர் இரா. அருண் அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) எதிர் வரும் தமிழ் புத்தாண்டுக்கு வீட்டிற்கு ஒரு பஞ்சாங்கம் வீதம் 25 பஞ்சாங்கம் வாங்கி உறுப்பினர்களின் இல்லத்திற்கு வழங்கவும் (2) பள்ளிக் கல்விதுறையில் உதவியாளராக பணியாற்றி வந்த சங்க செயலர் திரு. இரா. மு.அ. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராக பணி உயர்வு பெற்றமைக்கு பாராட்டு தெரிவித்து தலைவர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் இரா. மு.அ. பாபு (எ) சண்முகநாதன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,
தலைவர்.

நெடுங்காடு :

மாதக் கூட்டம் வரிச்சிக்குடி பெருமாள் கோயில் தெரு, திரு. S. ரங்கநாதன் இல்லத்தில் நடைபெற்றது. திரு. ப. பாலசுப்ரமணியன் இறைவணக்கம் பாடினார்.

காரைக்கால் கைலாசநாதர் கோயில் தேர்த்திருவிழா 3–4–2023 அன்று நடைபெறுவது குறித்தும் தேர்த்திருவிழா நன்கொடையாக ரூ 11000

அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. சங்க முன்னாள் பொருளாளர் திரு. B.S.R. குருநாதன் அவர்களின் பேரன்கள் திரு. A. வருண், திரு. A. விஷ்வா ஆகியோர் சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா போட்டிகளில் பரிசு பெற்றமைக்காக வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. வழக்கம்போல் இந்த ஆண்டும் சோபகிருது ஆண்டு பஞ்சாங்கம் வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

பரிசுக் குலுக்களில் S. ராகுல், R. முரளி, K. ஜெயக்குமார் ஆகியோர் பரிசு பெற்றனர். அடுத்த கூட்டம் 2–4–2023 அன்று நெடுங்காடு கார்காத்தார் தெரு, திரு. மு. கந்தன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

- G. செல்வகுமார்,
செயலர்.
9842633663

கும்பகோணம்

சங்க கூட்டம் 05–03–2023 அன்று ராஜேந்திரன்பேட்டை அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய வெளி அரங்கில் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் அவர்கள் தலைமையிலும் திரு. G. சடகோபன் மற்றும் D. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

09–04–2023 அன்று மங்கல சந்திப்பு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது எனவும், 16.03.2023 அன்று கீவளூர் திருக்குவளை மற்றும் அருகில் உள்ள கோயில்களுக்கு ஆன்மீக உலா செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டு திரு. A.S. பழனி மற்றும் திரு. MRK. பாண்டியன் ஆகியோரை கொண்ட குழு அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நமது சங்க பசிப்போர் குழுவினர் குழு தலைவர் திரு. S. குணசீலன், திரு. S. வரதராஜன், திரு. S. கலை ஆகியோரின் தந்தை தெய்வத்திரு. R. சீத்தாராமன் அவர்கள் 20–02–2023 அன்று வைகுண்ட பதவி அடைந்தமைக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதுச்சேரி மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு அன்னாரது உடல் தானம் செய்யப்பட்டது. உடல்தானத்தை முன்னெடுத்து சென்ற குடும்பத்தாருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் அன்னாரது கண் மதுரை அரவிந்தர் கண் மருத்துவ மனைக்கு தானமாக வழங்கப்பட்டது.

S. விஜயகுமார் பிள்ளை,
செயலாளர்.

மூவலூர் :

19–3–2023 அன்று மாப்படுகை திரு. ஷண்முகம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் சங்கத்தலைவர் திரு. S. ராஜ்குமார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சங்க செயலாளர் திரு. G. குருமூர்த்தி அவர்கள் சென்ற கூட்டத்தின் அறிக்கையினையும், கூட்ட வரவு செலவு கணக்கினையும் விபரமாக வாசித்தார்கள். சங்க உறுப்பினர் திரு. ஷண்முகம் பிள்ளை மற்றும் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. R. கோபாலகிருஷ்ணன் இவர்கள் 80 வயது பூர்த்தி அடைந்ததை பாராட்டும் விதத்தில் பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப்பட்டார்கள்.

கொடைவள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டு வரும் கல்விநிதி பெற்ற நமது தோழர்கள் மூலமாகவும் சங்கத்தின் சார்பாகவும் நன்றியும், 2023–24 தமிழ் பஞ்சாங்கம் வாங்கி நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக வழங்கவும், திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டுள்ள கார்காத்தார் ஒப்புரவு சிறப்பு நிதியினை பயன்படுத்தி நமது சங்க உறுப்பினர்கள் 10 பேருக்கு இலவசமாக வாங்க தீர்மானிக்கப்பட்டது.

பெருமாள் கோவில் தெரு சித்தர்காடு திரு. P. சீனிவாசம் பிள்ளை மறைவிற்கும் மாப்படுகை, திரு. முருகேசம் பிள்ளை அவர்கள் மறைவிற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

– கோ. குருமூர்த்தி,
செயலாளர்.

இளந்தோப்பு

சங்க கூட்டம் 6–3–2023 அன்று இளந்தோப்பு சிவன் கோவிலில் தலைவர் S.S. ராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை கூற, திரு. S. சபாநாயகம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சங்க மாதாந்திர கூட்டத்திற்கு தவறாமல் அனைவரும் வர வேண்டும் என்றும், சென்னை நூற்றாண்டு விழாவிற்கு

இளந்தோப்பு சங்க உறுப்பினர்கள் சுமார் 15 நபர்கள் சங்க செயலர் அவர்கள் தலைமையில் சென்னை சென்று வந்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் உரையாற்றினார்கள். தலைவர் S.S. ராஜேந்திரன் அவர்கள் பேசுகையில் இளந்தோப்பு சங்க உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் புதல்வி செல்வி. G. சங்கீதா மற்றும் இளவழகன் மகன் சுப்புராயன் திருமணத்திற்கு இளந்தோப்பு சங்க பொறுப்பாளர்கள் மற்றும் பல உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறந்த முறையில் பணியாற்றியமைக்கு பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தார்கள். வரும் சித்திரை மாத பௌர்ணமி அன்று அய்யனார் கோவிலுக்கு காவடி எடுக்க வேண்டும் என்றும் கோரினார்கள். திரு. G. செல்வநாயகம் பிள்ளை அவர்கள் சிவன்ராத்திரி அன்று சிவன் கோவிலில் இரவு 2 மணி வரை இருந்து ஒத்துழைப்பு தந்த அனைத்து பக்தர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

பொருளாளர் திரு. R. ஞானசேகரன் பிள்ளை அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

வெ. ராஜசேகரன்,
செயலாளர்.
9444610907

தஞ்சை

நகர கார்காத்தார் சங்கத்திற்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 1,99,000/– 12 மாணவ / மாணவிகளுக்கு வழங்கிய CREW அறக்கட்டளைக்கு தஞ்சை நகர கார்காத்தார் சங்கம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

K. தண்டாயுதபாணி.
தலைவர்,

பெண்ணாடம் :

சங்க பொதுக்குழு கடந்த 18–2–2023 அன்று இனிதே நடைபெற்றது. கூட்டத்தில் புதியதாக கௌரவ தலைவர்கள், சங்க ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள், இணை செயலாளர் மற்றும் துணை செயலாளர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகள் பின்வருமாறு :–

கௌரவ தலைவர்கள் – சிவ. தியாகராஜன் பிள்ளை, வே. மணிவாசகம் பிள்ளை, தலைவர் – C. சுப்ரமணியன், துணை தலைவர் – S. சிவபாக்கியராஜ், செயலாளர் – G. குஞ்சிதபாதம், இணை செயலாளர் – S. மெய்கண்டன், துணை செயலாளர்கள் – N. சீனிவாசன், S. முருகன், பொருளாளர் – K. சதீஷ்.

பொதுகுழுவில் சங்கம் சிறப்பாக நடைபெற அனைத்து உறுப்பினர்கள் ஒத்துழைக்கவும் மேலும் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

- G. குஞ்சிதபாதம்,
செயலாளர்.
9842357920

இளையபெருமாள்நல்லூர்

நம்குல மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை மற்றும் ஒப்புரவு ஓராண்டு சந்தா தொகையும் வழங்கிய CREW TRUST தலைவர் திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்ப்பட்டது.

28.2.23 அன்று டாப் 10 தலைவர் – தமிழ் மணி சிறந்த மாமனிதர் விருதை பெற்ற நம் குலத்தோன்றல், ஊராட்சி மன்ற தலைவர் திரு. இராச. வெங்கடேசன் அவர்களுக்கு பாராட்டையும் வழங்கிய நாமக்கல் முத்தமிழ் கலைச்சங்க அறக்கட்டளைக்கு நன்றியையும் தெரிவிக்கப்பட்டது.

22.2.23 அன்று மேலையூர் – பூம்புகார் கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்ற இடைக்கட்டு திரு. E.K. சிவசக்திவேல் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

20.3.23 அன்று கார்குல மக்களின் பேராதரவோடு அருள்மிகு ஸ்ரீ பூரண புஷ்கலா சமேத ஐயனார் திருக்கோயில் பாலாலயம் நடைபெற்றது. அனைத்து கார்குல அன்பர்களுக்கும் நன்றியையும் குடமுழுக்கு விழாவை சிறப்பாக நடத்திதர வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் சித்திரைத்திங்கள் புதிய உறுப்பினர்கள், செய்குழு உறுப்பினர்கள், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது பற்றி பெரியவர்களிடம் பேசி முடிவெடுக்க ஆவண செய்ய வேண்டுமாய் வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

ஈரோடு :

5–3–23 அன்று சங்கத்தின் 4–வது ஆண்டு விழாவினை முன்னிட்டு ஈரோடு கச்சேரி வீதியில் உள்ள பெரியார் மன்றத்தில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

இறைவணக்கம் செல்வி. மோகன பிரியா பாடினார். மாவட்ட செயலாளர் அ. மதியழகன் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்திற்கு அ. தேவேந்திரன் தலைமையேற்க திரு. பூபதி மண்டல செயலாளர், திருமதி. பூங்கோதை சிற்றரசு மகளிரணி துணைத்தலைவி முன்னிலை வகித்தனர். ஆடிட்டர் திரு. E.S. முருகானந்தம் சிறப்புரை நிகழ்த்தினார். பின்னர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கார்காத்த சங்கத்தின் கூட்டமைப்பின் பொது செயலாளர் திரு. M. பாலசுப்பிரமணியன் சிறப்புரை நிகழ்த்தி விளையாட்டு போட்டியினை துவக்கி வைத்தார். போட்டிகளை வாசவி கல்லூரி உடற்கல்வி இயக்குனர் திரு. Dr. S. ரமேஷ் மற்றும் Dr. A. சங்கர் ஆகியோர் போட்டிகளை நடத்தினார்கள். மாலையில் ஜோடி பொருத்தம், ஓவியப்போட்டி, கோலப்போட்டி, மியூசிக்கல் சேர் ஆகியவை நடத்தப்பட்டன. போட்டியில் வென்றவர்களுக்கு அவ்வப்போது அழகிய பரிசுகளை மாநில பொது செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் பொது செயலாளர் திரு. ஆ. பாலசுப்ரமணியன் அவர்களுக்கு கார்காத்தார்களின் கலங்கரை விளக்கம் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் 18 கார்காத்த உறுப்பினர்களுக்கு கீழ்கண்டவாறு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திரு. S. பூபதி மண்டல செயலாளர்– ''நடமாடும் கலைக்களஞ்சியம், திரு. அ. தேவேந்திரன், மாவட்ட தலைவர் – ''உதவும் பவர்ஹவுஸ்', திரு. அ. மதியழகன், மாவட்டசெயலாளர் – ''சாதனைகளின் இமயம்'', திரு. E.S. கேசவானந்தம், கௌரவ தலைவர் – ''சமுதாய சாம்ராட்'', திரு. V.M. ஜெயபாலன், மாவட்ட துணைத்தலைவர் – ''சைலன்ட் ஹீரோ'', திரு. E.S. முருகானந்தம் ஆடிட்டர் – ''வாழ்நாள் சாதனையாளர்'', திரு. S. திருநாவுக்கரசு I.F.S. - ''கார்காத்தார்களின் பொக்கிஷம்'', திரு. S. பால்ராஜ் – ''மனிதநேய மாண்பாளர்'', திரு. C. சிற்றரசு, தணிக்கையாளர் – ''சமுதாய சக்கரவர்த்தி'', திரு. M. சக்திவேல் – ''சமுதாய சிற்பி'', திரு. B. திருமால் அரசு – ''அன்பின் புத்தர்'', செல்வி. அலமேலு மங்கை – கார்குல வீரமங்கை, திருமதி. M. மீனாட்சி – ''தகைசால் தங்கமங்கை'', திரு. Dr. M. முத்துபழனியப்பன் – ''சிறந்த நன்கொடையாளர்'', திரு. Dr. G.A. சிவகுமார் – ''கார்குல சேவை நாயகன்'', திரு. S. பாபு – ''சைனிங் ஸ்டார்'', திரு. S. ரமேஷ் ''விளையாட்டு உலகின் சக்ரவர்த்தி''.

மதியம் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 70 பெண்களும் 40 ஆண்களும், 10 சிறுவர், சிறுமியரும் மொத்தம் 120 பேர் கலந்து கொண்டனர். விழா முடிவில் திரு. E.A. சுதாகர் நன்றி கூறினார். வான்முகில் வழாது பெய்க என்ற கந்தபுராண வாழ்த்து பாடி விழா மாலை 5.30 மணிக்கு நிறைவு பெற்றது.

- R. ராம்குமார்,
பொருளாளர்.

மதுரை :

சங்க செயற்குழு கூட்டம் 12–03–2023 அன்று நடைபெற்றது. மதிப்புரு ஆலோசகர் திரு. இரா. கணேசன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார்.

செயலாளர் C.M. சொக்கலிங்கம் கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை பற்றி பேசினார். தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியம் 30–07–23 அன்று நடைபெற உள்ள மங்கள சந்திப்புக்கு உரிய படிவத்தை உறுப்பினர்கள் ஒப்புதலுக்கு வழங்கினார். சில மாற்றங்களுடன் ஏற்கப்பட்டது.

CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை பெற்று படித்த மதுரை, செல்வி. M. நிவேதா (த/பெ. S. முத்துராமலிங்கம்) என்ற மாணவிக்கு சென்னையில் சிறுசேரியில் உள்ள DATA PATTERNS (INDIA) LTD என்ற கம்பெனியில் வேலை கிடைத்துள்ள மகிழ்ச்சியான செய்தியை திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும், திரு. T.N. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களுக்கும் தெரிவித்து நன்றிக் கடிதம் சங்கம் மூலம் அனுப்பப்பட்டது.

தலைவர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

- C.M. சொக்கலிங்கம்,
செயலாளர்.

20ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
17–4–1985

மறைவு
7–4–2003

G. குமாரவேல் 1st B.D.S

(அண்ணாமலை நகர்)
திட்டக்குடி – 606 106.

தம்பி

உன் நினைவில் வாழ்கிறோம்.
உன்னை மீண்டும் பார்க்கும் நாள் வருமா.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
15.08.1957

மறைவு
30.03.2023

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா, பஞ்சுக்கார செட்டித்தெரு மாலுடையான் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் மனைவியும் எங்களது தாயாருமான திருமதி. **G. ஜெயக்கொடி அம்மையார்** அவர்கள் 30.03.2023 வியாழக்கிழமை அதிகாலை 03.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில்

மகன் – மருமகள்
திரு. **G. மணிகண்டன்** – திருமதி. **SA. சித்ராதேவி,** குத்தாலம்.

மகள் – மருமகன்
திருமதி. **M. ராஜலட்சுமி** – திரு. **S. மணிமாறன்,** கோயம்புத்தூர்.

மற்றும்

பெயரன்கள் – பெயர்த்திகள்
அருண்குமார். M
பிரியதர்ஷினி. M
தேவதர்ஷன் மணிகண்டன்
9443502302, 9486419453.

வழிகாட்டும் சுடர்விளக்காய்
வாழ்கின்றார் தில்லை அம்மா!
9ஆம் ஆண்டு நினைவேந்தல்

தோற்றம்
25.08.1957

மறைவு
28.04.2014

KP. தில்லைச்செல்வி
KP. ஸ்டோர்

அருகிருக்கும் பொருளனைத்தும்
அம்மா உன் பெயர் சொல்லும்
தெரிவதெல்லாம் உன்னுருவம்
தில்லையம்மா பொன்னுருவம்!

சரியாமல் எமைக்காத்தாய்
சரியாக வாழவைத்தாய்
பிரிந்தாலும் வாழ்கின்றாய்
பெறுவதெலாம் உன் புகழே!!

KP. விஜய்
KPV. மீனாஸ்ரீ

KPV. கவுதம்
KPV. அஜய்

S. கலியபெருமாள்
KP. ஸ்டோர்.
பெரியகடைவீதி,
மயிலாடுதுறை.
செல் : 9443651746

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th April 2023

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

தருமபுரம்ஆதீனம் 27வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் - திரு.மரபின் மைந்தன்முத்தையாவுக்கு தருமை **ஆதீனப் புலவர்என்ற விருதும், தங்கப் பதக்கமும்** வழங்கினார். இத்தையக அருளாசி கிடைக்கப்பெற்றஅன்பு சகோதரருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**